இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள்: 32+2

சுடர் 32 | கதிர் 172 | வள்ளுவர் ஆண்டு 2048 | வைகாசி 03 புதன்கிழமை 17.05.2017

## மகிந்த அணி உறுப்பினர் மைத்திரி பக்கம் நேற்றுத் தாவல்

*வட மத்திய மாகாண சபையில் உடனே அவருக்கு அமைச்சுப் பதவி*

கொழும்பு, மே 17
வட மத்திய மாகாணத்தில் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச அணிக்கு ஆதரவு வழங்கிய சுசில் >> 27

## முள்ளிவாய்க்காலில் சீரமைக்கப்பட்டது நினைவுத் தூபி



யாழ்ப்பாணம், மே 17
முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கான தூபி மறுசீரமைக்கப்பட்டுள்ளது. அதனைச் சுற்றியுள்ள பிரதேசங்களும் துப்புரவு செய்யப்பட்டுள்ளன. >> 28

## எங்கள் அழுகுரல் கேட்கின்றதா ?



படம்: அமரதாஸ்

## கிளிநொச்சியில் பயங்கரச் சம்பவம்

## 5 பிள்ளைகளின் தந்தை நேற்று பட்டப்பகலில் வெட்டிக் கொலை

*அவரது மனைவி மீதும் சரமாரியான வெட்டு*



கிளிநொச்சி, மே17
கிளிநொச்சி கனகபுரம் வீதியில் அமைந்துள்ள கடையொன்றில் நேற்றுப் பட்டப்பகலில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் 5 பிள்ளைகளின் தந்தையொருவர் உயிரிழந்துள்ளார். மனைவி படுகாயங்களுடன் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார். வர்த்தக நிலையமொன்றைக் குத்தகைக்கு எடுத்து நடத்திவிட்டு அதனை மீண்டும் ஒப்படைத்த தம்பதியினர். >> 28

## முச்சந்தி முரளி



அனைவரும் ஓரணியில் திரண்டு அஞ்சலி செலுத்த வேண்டும்...

## திருகோணமலையில் நேற்று நினைவேந்தல்




யாழ்ப்பாணம், மே 17
தமிழ் மக்கள் மனதில் ஆறாத வடுவாக முள்ளிவாய்க்கால் பேரவலம் நிறைந்துள்ளது. இதனை நினைவுகூர்ந்து கடைப்பிடிக்கப்படும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தின் 5 ஆம் நாள் நிகழ்வு, திருகோணமலையில் நேற்று நடைபெற்றது. முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் 12 ஆம் >> 04

## மறுசீரமைப்பு-சீர்திருத்தத்திலிருந்து

# பின்வாங்குகிறது அரசு நெருக்கடிகள் குழு சாடல்

## புதிய அரசமைப்பு நிறைவேறும் என்பதில் சந்தேகம் எனவும் தெரிவிப்பு

கொழும்பு, மே 17
“கூட்டு அரசு மெல்ல மெல்ல உடைந்து கொண்டிருக்கின்றது. இதனால் புதிய அரசமைப்பு நிறைவேறுமா? என்ற சந்தேகம் உருவாகியுள்ளது. இனங்கள் மத்தியில் நிரந்தர அமைதி ஏற்படும் என்ற எதிர்பார்ப்பும் குறைவடையத் தொடங்கியுள்ளது. கூட்டு அரசின் மறுசீரமைப்பு - சீர்திருத்த நிகழ்ச்சி நிரலின் வேகம் குறைந்துள்ளது அல்லது அதிலிருந்து அரசு பின்வாங்கத் தொடங்கியுள்ளது. இந்தப் பின்னணிகளால், கூட்டு அரசு 2015 ஆம் ஆண்டு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுமா? என்ற எதிர்பார்ப்பு குறைவடைந்து வருகிறது.” >> 28

## தமிழருக்கு நாளை தேசிய துக்கநாள்

## முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் ஓரணியாகத் திரண்டு சங்கமியுங்கள்

*கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் அழைப்பு*

யாழ்ப்பாணம், மே 17
தமிழ் மக்கள் ஓரணியில் திரண்டு அரச படைகளினால் ஈவிரக்கமின்றிக் கொல்லப்பட்ட எமது உறவுகளை நினைந்து, ஈகச் சுடர் ஏற்றி அகவணக்கம் செலுத்தி >> 28

## வாள்வெட்டுக் கும்பல் கூண்டோடு சிறைக்குள்

*யாழ். நீதிவான் மன்று நேற்றுத் தீர்ப்பு*

யாழ்ப்பாணம்,மே 17
வாள்வெட்டுக் கும்பலைச் சேர்ந்த 8 பேரில் மூவருக்கு 3 வருடங்கள் கடுழியச் சிறைத் தண்டனையும் 5 பேருக்கு ஒரு வருட கடூழி >> 28

## முள்ளிவாய்க்கால் நினைவுக்கல் குறித்து அருட்தந்தையிடம் நேற்றிரவு விசாரணை

முல்லைத்தீவு, மே 17
முல்லைத்தீவு, முள்ளிவாய்க்காலில் படுகொலை செய்யப்பட்ட மக்களுக்கு நினைவுக்கல் வைக்க முயற்சித்தார் என்று அருட்தந்தை எழில்றஜன் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் நேற்றிரவு >> 04

## வித்தியா, பல்கலை. மாணவர் கொலைகளுக்கு நீதிவேண்டும்

*யாழ். பல்கலைக்கழகத்தில் நேற்றுக் கவனவீர்ப்பு*



யாழ்ப்பாணம், மே 17
கொலைகளுக்கு நீதி வேண்டி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் >> 28

## வித்தியா வழக்கை கொழும்புக்கு மாற்றுவதை கண்டித்து பேரணி

யாழ்ப்பாணம் மே 17
மாணவி வித்தியா கொலை வழக்கைக் கொழும்புக்கு மாற்றுவதைக் கண்டித்து இன்று புதன்கிழமை யாழ்ப்பாணத்தில் கண்டனப் பேரணி ஒன்று நடத்தப்படவுள்ளது.
மக்கள் சக்தி அமைப்பு இந்தக் கண்டனப் பேரணியை ஏற்பாடு >> 04

## மகிந்தவின் மீள்வருகை நிராகரிக்கக் கூடியதல்ல

கொழும்பு, மே 17
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவும், முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் மீள் வருகைக்கான சாத் >> 28

## சிறுமி மீது பாலியல் துர்நடத்தை; குற்றவாளிக்கு 20 வருட கடூழியம்

*வவுனியா மேல் நீதிமன்று தீர்ப்பு*

யாழ்ப்பாணம், மே 17
11 வயதுச் சிறுமியை பாலியல் துர்நடத்தைக் குட்படுத்திய குடும்பத் தலைவருக்கு 20 வருடங்கள் கடூழிய சிறைத் தண்டனை விதித்து வவுனியா >> 25

## மகளின் கொலைக்கு நீதி கிடைக்குமோ என அச்சம்

*விசாரணையை யாழ்ப்பாணத்தில் நடத்துமாறு வித்தியாவின் தாய் மைத்திரி, ரணிலுக்கு கடிதம்*

யாழ்ப்பாணம், மே 17
மகள் வித்தியாவின் கொலை வழக்கு விசாரணைகள் கொழும்புக்கு மாற்றப்பட்டால் நீதி கிடைக்காமல் >> 04

## பல்கலை. மாணவர்கள் படுகொலை; 5 பொலிஸாரும் பிணை கோரி மனு

யாழ்ப்பாணம்,மே 17
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட வழக்கில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 5 பொலிஸாரையும் பிணையில் >> 28



# கம்மன்பிலவுக்கு மூளை சுகமில்லை

## இந்திய மருத்துவரிடம் வைத்தியம் பார்க்கவேண்டும் என்கிறார் மனோ

கொழும்பு, மே 17

கம்மன்பிலவுக்கு மூளையில் சுகமில்லை. பைத்தியத்துக்கு இந்திய மருத்துவரிடம் வைத்தியம் பார்க்க வேண்டும். இவ்வாறு அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

மலையக மக்களுக்கு 10 ஆயிரம் வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கான அறிவிப்பை வெளியிடுவதற்கு இந்தியாவின் தலைமை அமைச்சர் யார் என்று, மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில கேள்வி எழுப்பியிருந்தார். இதற்குப் பதிலளிக்கும் வகையில், சிங்களத் தொலைக்காட்சி நேர்காணலிலேயே மனோ கணேசன் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.



அவர் மேலும் தெரிவித்ததாவது: தலைமை அமைச்சர் மோடி இந்த அறிவிப்புகளை திடீரென வானத்தில் இருந்து இறங்கி வந்து அறிவிக்கவில்லை. இலங்கை அரசின் வேண்டுகோளின் அடிப்படையிலேயே இந்த அறிவிப்புக்களைச் செய்துள்ளார்.

இவை பற்றிய உண்மை விவரங்கள் கம்மன்பிலவுக்குத் தெரியவில்லை. ஆனால், இவைபற்றி மகிந்த ராஜபக்சவுக்குத் தெரியும். நாமல் ராஜபக்சவுக்குத் தெரியும். இவை இலங்கை அரசின் கோரிக்கைகளின் பேரில்தான் நடைபெறுகின்றன என அவர்களுக்குத் தெரியும். அவற்றை, இலங்கையைத் தன் மாநிலமாகக் கருதி, இந்தியத் தலைமை அமைச்சர் தனிச்சையாக அறிவிக்கவில்லை எனவும் அவர்களுக்கு நன்கு தெரியும்.

கம்மன்பில இவற்றுக்குத் தவறான அர்த்தங்களைக் கற்பித்து, சிங்கள மக்களைத் தூண்டிவிடும் முகமாக, இனவாதப் பைத்தியம் பிடித்த நிலையில் பேசி வருகிறார். நீரெல்லாம் திருந்தவேமாட்டீரா, என்று நான் அவரைக் கேட்க விரும்புகிறேன். உமக்கு மூளையில் சுகமில்லை. உமது பைத்தியத்தைச் சுகப்படுத்த, இந்தியா தந்துள்ள இலவச நோயாளர் காவு வண்டிச் சேவை என்ற மருத்துவ வாகனத்தில் ஏற்றி, இந்திய மருத்துவரிடம் அழைத்துச் செல்ல நான் தயார், என்று இவருக்கு நான் கூறி வைக்க விரும்புகிறேன் என்றார். (த-5)



# வீரம் செறிந்த தமிழர் வரலாற்றை ஆவணம் ஆக்குவது கட்டாயம்

## வடக்கு மாகாண சபையிடம் தமிழ் மக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு, மே. 17

வடக்கு கிழக்கு தமிழர் தாயகம் எங்கும் சிதறிக் கிடக்கும் வீரம் செறிந்த தமிழர் வரலாற்றை ஆவணப்படுத்துவதற்கு வடக்கு மாகாண சபை முன்வர வேண்டும் எனத் தமிழ் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

உரிமை மறுக்கப்பட்ட தமிழ் இனம் தனது உரிமையைப் பெற்றுக் கொள்வதற்காக 30 ஆண்டுகளுக்கு மேலாக ஆயுதப் போராட்டத்தை நடத்தியது. தரைப்படை, கடற்படை, விமானப் படை, கரும்புலிப் படை ஆகியவற்றைக் கொண்டு ஓர் மரபுவழிப் படையாக போராட்டத்தை முன்னகர்த்தி வந்தது.

2009ஆம் ஆண்டு தமிழரின் ஆயுதப் போராட்டம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. இலங்கையில் வடக்கு - கிழக்குப் பகுதியைத் தாயகமாகக் கொண்ட தமிழ் இனம் உரிமையைப் பெற்றுக்கொள்வதற்காக ஆயுத ரீதியிலும் போராடியது என்பதை எதிர்காலச் சந்ததிக்கு எடுத்துக் காட்டுவதற்கு எந்த ஒரு ஆவணப்படுத்தலும் இதுவரை இடம்பெறவில்லை. ஆவணப்படுத்தப்படவேண்டிய பல அரிய பொக்கிசங்கள் எல்லாம் கால ஓட்டத்தில் அழிவடையும் நிலையில் உள்ளன.

முல்லைத்தீவு நந்திக்கடல் ஓரத்தில் உள்ள பனை மரக் கூடலுக்குள் பற்றைக்குள் விடுதலைப் புலிகளின் வரிச் சீருடை ஒன்று அழிவடைந்துகொண்டிருக்கிறது. வீரம் செறிந்த வரலாற்றை தன்னகத்தே கொண்டுள்ள தமிழரின் இந்த வரலாறுகளை ஆவணப்படுத்துவதற்கு வடக்கு மாகாண சபை முன்வர வேண்டும் எனத் தமிழ் மக்கள் கோரியுள்ளனர். (த-7)

# நினைவேந்தலுடன் நில்லாது ஆலய வழிபாடும் வேண்டும்

## இலங்கை சைவ மகா சபை கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 17

முள்ளிவாய்க்கால் நினைவு தினமான நாளை வெறுமனே நிகழ்வுகளுக்கு அப்பால் இறை பிரார்த்தனைகளை மேற்கொள்வதுடன் துயர் சுமந்த உறவுகளை ஆற்றுப்படுத்துமாறு அகில இலங்கை சைவ மகா சபையின் பெருந்தலைவர் தென் கயிலை ஆதீன முதல்வர் தவத்திரு அகத்தியர் அடிகளார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

தாங்கொணா வலி சுமந்து போரின் வடுக்களைத் தாங்கி வாழ்கின்ற உடன் பிறப்புக்களுக்கு எங்களால் முடிந்த வழிகளில் உதவி செய்வோம் என்று அன்றைய தினம் உறுதியெடுக்கவேண்டும். அந்த உறுதியின்படி செயற்பட முன்வர வேண்டும்.

முள்ளிவாய்க்கால் நினைவு தினமான நாளை சைவ மகா சபையின் ஏற்பாட்டில் வடக்கே கீரிமலையிலும் கிழக்கே கன்னியா வெந்நீர் ஊற்றிலும் ஆன்ம சாந்திப் பிரார்த்தனைகள் இடம்பெறும். அன்றைய தினம் சைவ ஆலயங்களில் சிறப்பு ஆத்ம சாந்திப் பிரார்த்தனை களை மேற்கொள்ளுமாறு வேண்டுகின்றோம் என்றார். (த-5)

# சவச்சாலையில் இருந்து உடலங்களை வழங்குவதற்கு லஞ்சம் பெறப்படுகிறதா?

## கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் லஞ்ச ஊழல் ஆணைக்குழு திடீர் சோதனை

யாழ்ப்பாணம், மே 17

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையின் சவச்சாலையில் இருந்து உடலங்களை வெளியே அனுப்பும் நடவடிக்கைக்காகச் சில சுகாதார ஊழியர்களும் பொலிஸாரும் இலஞ்சம் பெற்றமை தொடர்பில் நேற்று இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினர் திடீர் சோதனை நடத்தியதுடன் விசாரணையிலும் ஈடுபட்டனர்.

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையின் சவச்சாலையில் வைக்கப்படும் உடலங்களை வெளியே எடுப்பதற்காகச் சில சுகாதார ஊழியர்களும் பொலிஸாரும் லஞ்சம் கோருவதாகச் சுட்டிக்காட்டப்பட்டு வந்தது. ஆயினும் இதற்கு உரிய ஆதாரங்களை முன்வைக்குமாறு கோரப்பட்டிருந்தது.

இந்த நிலையில் அண்மையில் உயிரிழந்த இளைஞர் ஒருவரின் உடலத்தை சவச்சாலையில் இருந்து விரைவாக வெளியே எடுப்பதற்காக லஞ்சம் பெறப்பட்டமை தொடர்பில் முறையிடப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாட்டுக்கு அமைய நேற்று ஆரம்ப கட்ட விசாரணைகள் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் முன்னெடுக்கப்பட்டன.

குறித்த விசாரணை தொடர்பில் வைத்தியசாலைத் தரப்புக்களிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது,

மேற்படி விடயம் (நேற்று) இன்றுதான் முதல் தடவையாக ஆராயப்படுகின்றது. விசாரணையின் பின்னரே அதுபற்றித் தெரியவரும். குறித்த நடவடிக்கையை மேற்கொள்வது எமது திணைக்களம் அல்ல எனப் பதிலளித்தனர். (த-101)

# மத்திய மாகாண ஆட்சியை கைப்பற்ற ஐ.தே.க. முயலாது

## லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவிப்பு



யாழ்ப்பாணம், மே 17

மத்திய மாகாண சபையின் ஆட்சியைப் பலவந்தமாகக் கைப்பற்றும் உத்தேசம் எதுவும் ஐக்கிய தேசியக் கட்சிக்குக் கிடையாதென உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்திருக்கிறார்.

கண்டி, சிறி செல்வ விநாயகர் ஆலயத்தில் சீரமைப்புச் செய்யப்பட்ட கட்டடத்தைத் திறந்து வைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மத்திய மாகாண சபையின் அதிகாரத்தைக் கைப்பற்ற ஐக்கிய தேசியக் கட்சி பெரும் பிரயத்தனம் செய்துவருவதாக ஒரு சில ஊடகங்களில் செய்திகள் வெளிவந்துள்ளன. அவ்வாறான அதிரடித் தாக்குதல்களைச் செய்யவேண்டிய அவசியம் ஐக்கிய தேசியக் கட்சிக்குக் கிடையாது. ஐக்கிய தேசியக் கட்சி எந்தத் தேர்தலுக்கும் எந்நேரமும் தயாராக இருக்கிறது.

மருத்துவர் சங்கக் கட்டட வளவில் கைக்குண்டொன்று வீசப்பட்ட சம்பவத்தை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். அந்தச் சம்பவம் தொடர்பான விரிவான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன - என்றார். (த-5)

## வவுனியாவில் சிறுமி மீது துர்நடத்தை;

# சந்தேகநபரின் பிணை மனு மேல் நீதிமன்றால் நிராகரிப்பு

வவுனியா, மே 17

சிறுமியை பாலியல் துர்நடத்தைக்கு உட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவரால் முன்வைக்கப்பட்ட பிணை மனுவை வவுனியா மேல் நீதிமன்றம் நேற்று நிராகரித்தது.

வவுனியா மாவட்டம் நெடுங்கேணி ஒலுமடு கிராமத்தில் 10 வயதுச் சிறுமி 2016ஆம் ஆண்டு மே மாதம் 24ஆம் திகதியன்று பாலியல் துர்நடத்தைக்குட்படுத்தப்பட்டார். அவரை துர்நடத்தைக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் அதே இடத்தைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டார். அவர் வவுனியா நீதிவான் மன்றில் தொடர்ச்சியாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் சந்தேகநபர் சார்பில் அவரின் சட்டத்தரணி வவுனியா மேல் நீதிமன்றில் பிணை விண்ணப்பம் செய்தார். பிணை மனு மீதான விசாரணை வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன் முன்னிலையில் நேற்று இடம்பெற்றது.

"சிறுமி மீதான துர்நடத்தை விசாரணைகளை நெடுங்கேணிப் பொலிஸார் உரிய முறையில் முன்னெடுக்கவில்லை. சிறுமியின் ஆடைகள் உட்பட தடயப்பொருட்கள் எதனையும் அவர்கள் சேகரித்து நீதிமன்றில் பாரப்படுத்தவில்லை. சிறுமியைச் சந்தேகநபர் பாலியல் துர்நடத்தைக்கு உட்படுத்தவில்லை என்றும் மாறாக அவர் சிறுமியைக் கண்டிக்கும் விதமாக அடித்தார் என்று பொய்யாக வழக்கு பதிவு செய்து பொலிஸார் நீதிவான் மன்றத்தை பிழையாக வழிநடத்துகின்றனர்" என்று மேல் நீதிமன்றில் பாதிக்கப்பட்ட தரப்பால் சுட்டிக்காட்டப்பட்டது.

"சிறுமி மீதான பாலியல் துர்நடத்தை விசாரணைகளை பொலிஸார் உரிய முறையில் முன்னெடுத்து நீதிவான் மன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். வவுனியா சிறுவர் நன்னடைத்தை அதிகாரிகள் இந்த விடயம் தொடர்பாக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை. அவர்கள் இந்தச் சம்பவம் நடைபெற்று ஒரு மாதம் கடந்த நிலையிலேயே சிறுமியின் வீட்டுக்குச் சென்று விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். எனவே சிறுவர் நன்னடத்தை அதிகாரியால் நீதிமன்றில் சமர்ப்பித்த அறிக்கை தொடர்பாக நீதிமன்றம் சிறப்புக் கவனம் செலுத்தும். இந்தச் சம்பவம் தொடர்பான ஆரம்ப விசாரணைகள் நிறைவுபெறாத நிலையில் சந்தேகநபரின் பிணை மனு நிராகரிக்கப்படுகிறது" என்று வவுனியா மேல் நீதிமன்றம் உத்தரவிட்டது. (வ)

# இலங்கைக்கு வெள்ளியன்று ஜிஎஸ்பி பிளஸ்

## ஐரோப்பிய ஒன்றியத்தில் அறிவிப்பு

கொழும்பு, மே 17

ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை தொடக்கம் இலங்கைக்குக் கிடைக்கும் என்று ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான பணியகம் அறிவித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான தூதுவர் துங் லாய் மார்கே, கொழும்பில் நேற்று நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பில் இது தொடர்பாக தகவல் வெளியிடுகையில்,

இலங்கைக்கு மீண்டும் ஜிஎஸ்பி பிளஸ் வரிச் சலுகையை வழங்குவதற்கு ஐரோப்பிய ஒன்றியத்தின் எந்த நாடும் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. நாளை வியாழக்கிழமை வெளியிடப்படவுள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் அதிகாரபூர்வ இதழில், இலங்கைக்கான இந்த அனுமதி அச்சிடப்படும். நாளை மறுதினம் வெள்ளிக்கிழமையில் இருந்து. ஜிஎஸ்பி பிளஸ் சலுகையை இலங்கை பெற்றுக் கொள்ள முடியும்.

இலங்கை மீண்டும் ஜிஎஸ்பி வரிச் சலுகையைப் பெறுதவற்காகப் பல நடவடிக்கைகளை எடுத்தது. எனினும் இந்த முயற்சிகள் அனைத்தும் போதுமானவை அல்ல என்ற கருத்தை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம். இத்துடன் இந்தநடவடிக்கைமுடிவடையவில்லை. மாறாக எங்களின் கண்காணிப்பு நடவடிக்கை ஆரம்பமாகியுள்ளது. இலங்கை அரசு தீர்வைக் காணவேண்டிய பல விடயங்கள் உள்ளன. இலங்கை அரசுக்கு அதனைத் தெரியப்படுத்தியுள்ளோம். இலங்கை அரசுக்கு ஆதரவளிப்போம். அதனை விமர்சிப்போம். அதற்கு அழுத்தங்களைக் கொடுப்போம் - என்றார்.



இலங்கையின் மிகப் பெரிய ஏற்றுமதிச் சந்தையாக ஐரோப்பிய ஒன்றியமே இருந்து வருகிறது. இலங்கையின் ஏற்றுமதியில் மூன்றில் ஒரு பங்கு ஐரோப்பிய நாடுகளுக்கே இடம்பெறுகிறது. ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் இலங்கைக்கும் இடையில் ஆண்டு தோறும் 4 பில்லியன் யூரோவுக்கு இருதரப்பு வர்த்தகம் இடம்பெறுகின்றது.

இலங்கையில் இருந்து 2.6 பில்லியன் யூரோ பெறுமதியான பொருள்களை ஐரோப்பிய ஒன்றியம் இறக்குமதி செய்கிறது.

ஜிஎஸ்பி பிளஸ் சலுகையின் மூலம் இலங்கைக்கு ஆண்டுக்கு 300 மில்லியன் யூரோ வரையான தீர்வை விலக்குக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (து-5)

## தொடருந்துக்கு கல் வீசிய நான்கு சிறுவர்கள் கைது

### திருமலையில் சம்பவம்

யாழ்ப்பாணம், மே 17

கல்லோயாவிலிருந்து திருகோணமலை நோக்கிச் சென்ற தொடருந்துக்குச் சீனக்குடாவுக்கும் திருகோணமலைக்கும் இடைப்பட்ட பகுதியில் வைத்து கல்லெறிந்த நான்கு சிறுவர்கள் தொடருந்து பாதுகாப்பு அதிகாரிகளால் பிடிக்கப்பட்டு திருகோணமலைப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வாரம் நடந்த இந்தச் சம்பவத்தில் தொடருந்துச் சாரதி சிறு காயங்களுக்குள்ளாகியுள்ளார். கைது செய்யப்பட்ட சிறுவர்கள் 10 மற்றும் 12 வயதுக்கிடைப்பட்ட பாடசாலை மாணவர்கள் எனவும் தெரியவருகின்றது. கைது செய்யப்பட்ட மாணவர்கள் மீது மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளதாகத் திருகோணமலைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (து-5)

## மயானத்துக்கு சுற்றுமதில் கட்டியவர் மீது தாக்குதல்

### புத்தூர் மேற்கில் நேற்றுச் சம்பவம்



அச்சுவேலி, மே 17

புத்தூர் மேற்கு சிறுப்பிட்டி கிந்துசிட்டி மயானத்தின் சுற்று மதிலை நீதிமன்ற உத்தரவுக்கு அமைவாகக் கட்டும் பணியில் ஈடுபட்டிருந்த இளைஞர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. தாக்குதலுக்கு உள்ளான இளைஞன் காயங்களுடன் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

புத்தூர் மேற்கு சிறுப்பிட்டி கிந்துசிட்டி மயானத்தை அகற்றுமாறு ஒரு பகுதியினர் தொடர்ச்சியாகக் கோரி வருகின்றனர். இது தொடர்பில் கவனவீர்ப்புப் போராட்டத்தையும் அவர்கள் நடத்தியிருந்தனர். இந்த மயானத்துக்கு ஒரு தொகுதி மக்கள் எதிர்ப்பு வெளியிட்டமையால், இந்த விவகாரம் மல்லாகம் நீதிமன்றம் வரை சென்றிருந்தது.

மயானத்தைச் சுற்றி 10 அடி உயரமான சுற்று மதிலை அமைக்குமாறு நீதிமன்றம் பணித்திருந்தது. இந்த மதில் அமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது இது வரை மூன்று தடவைகள் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சுற்று மதில் அமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்த, பாஸ்கரன் கமல்ராஜ் (வயது -28) மீது நேற்றைய தினம் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இது தொடர்பில் அச்சுவேலிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (து-5-11-37)

## மோடிக்காக வந்த ஹெலி நேற்றே இந்தியா சென்றது

### பழுதடைந்ததால் 5 தினங்கள் கண்டியில் அது தரித்திருந்தது

கொழும்பு, மே 17

இந்தியத் தலைமை அமைச்சரின் பயணத்துக்காக இலங்கைக்கு கொண்டுவரப்பட்டிருந்த உலங்குவானூர்தி, மோடி நாடு திரும்பி ஐந்து நாள்களின் பின்னர் இலங்கையிலிருந்து புறப்பட்டுச் சென்றுள்ளது.

இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி, கடந்த 11 ஆம் திகதி இலங்கைக்கு வந்திருந்தார். அவரது பயணத்துக்காக 4 உலங்கு வானூர்திகள் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டிருந்தன. அதில் ஒரு உலங்குவானூர்தி பழுதடைந்துவிட்டது. கண்டி அஸ்கிரிய மைதானத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இலங்கை வானூர்திப் படையினர் திருத்துவதற்கான உதவிகளை வழங்கினர். இருப்பினும் இந்தியாவிலிருந்து இதற்கென சிறப்பு தொழில்நுட்ப வல்லுநர்கள் வரவழைக்கப்பட்டனர். அவர்கள் அதனை திருத்தினர்.

உலங்குவானூர்தி நேற்றுக்காலை 9.50 மணிக்கு இந்தியா நோக்கிப் பறந்து சென்றது. (து-5)

## விபத்தில் சிக்கிய ஒருவர் சிகிச்சை பயனின்றிச் சாவு

சாவகச்சேரி, மே 17

சாவகச்சேரி, தனங்களப்புப் பகுதியில் விபத்தில் சிக்கிய குடும்பத் தலைவர் நான்கு நாள்களின் பின்னர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார். கார்த்திகேசு முத்துக்குமாரு (வயது55) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை காலை துவிச்சக்கர வண்டியில் சென்றுகொண்டிருந்த அவரைப் பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் மோதியதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட அவர், மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாண போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். அங்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்த நிலையிலேயே அவர் நேற்று உயிரிழந்தார்.

உயிரிழப்புத் தொடர்பில் திடீர் மரண விசாரணை அதிகாரியை உடற்கூற்றுப் பரிசோதனை நடத்தி அறிக்கையை மன்றில் சமர்ப்பிக்குமாறு சாவகச்சேரி நீதிவான் உத்தரவிட்டார். (து-9)

## உதயன் அலுவலகத்தில் நாளை குருதிக் கொடை

யாழ்ப்பாணம், மே 17

முள்ளிவாய்க்காலில் கொன்றொழிக்கப்பட்ட எமது உறவுகளின் நினைவேந்தல் நிகழ்வும் அவர்களது நினைவாக குருதிக் கொடையும் உதயன் பத்திரிகை அலுவலகத்தில் நாளை வியாழக்கிழமை முற்பகல் இடம்பெறும். இவற்றில் பங்குகொள்ள விரும்புபவர்கள் நாளை உதயனுக்கு வருகைதரமுடியும்.

உரிமைக்கான போராட்டத்தின் இறுதியில் உறவுகள் கொன்றொழிக்கப்பட்ட முள்ளிவாய்க்காலில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலின் முதன்மை நிகழ்வு இடம் பெறுகிறது. அதேபோன்று நினைவும் குருதிக் கொடையும் உதயன் அலுவலகத்திலும் வருடாந்தம் இடம்பெற்று வருகிறது.

அதன்படி நினைவு நிகழ்வு நாளை முற்பகல் 9.15 மணிக்கு ஆரம்பமாகும். அதனைத் தொடர்ந்து 9.45 மணியளவில் குருதிக் கொடை நிகழ்வு ஆரம்பமாகும். இவற்றில் பங்குபற்றி குருதிக் கொடை வழங்கவுள்ளவர்கள் நாளை முற்பகல் உதயன் அலுவலகத்துக்கு வருகை தரமுடியும். (வ-4)

## அரசமைப்பை சீரமைக்க சு.க. ஒத்துழைப்பது அவசியமானது

### கூறுகிறார் லக்ஸ்மன் கிரியெல்ல

கொழும்பு, மே 17

அரசமைப்பு மறுசீரமைப்பு மேற்கொள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஒத்துழைப்பு அவசியம் என்று உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் சம்மேளன நிறுவுனர் தின நிகழ்வு நேற்று முன்தினம் திங்கட்கிழமை தபால் தலைமையகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத்தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அரசமைப்புச் சீர்திருத்தத்துக்கு அரசியல் கட்சிகள் தமது யோசனைகளை வழங்கியிருந்தும் கூட, சிறிலங்கா சுதந் திரக் கட்சியின் யோசனை இன்னும் கிடைக்கவில்லை - என்றார்.

இந்த நிகழ்வில் கருத்துத் தெரிவித்த மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க, மக்கள் விருப்பத்தின் பிரகாரம் புதிய அரசமைப்பு உருவாக்கப்படுவது கடினமான விடயமல்ல. எனினும் புதிய அரசமைப்பை உருவாக்குவதில் அரச தலைவரும், தலைமை அமைச்சருமே தடையாக உள்ளனர் - என்றார். (து-5)

## காலியில் சைபர் தாக்குதல்

### மாவட்டச் செயலகத்தின் இணையத்தளம் முடக்கம்

கொழும்பு, மே 17

உலகெங்கிலும் சைபர் தாக்குதல் நடத்தப்பட்டு வந்த நிலையில், இலங்கையிலும் அவ்வாறானதொரு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. சைபர் தாக்குதல் காரணமாகக் காலி மாவட்டச் செயலகத்தின் அதிகாரபூர்வ இணையத்தளம் முடக்கப்பட்டுள்ளது.

காலி மாவட்டச் செயலகத்தின் இணையத்தளத்தினுள் நுழைந்த இணைய ஊடுருவிகள், அதில் பாகிஸ்தான் ஜிந்தாபாத், இஸ்லாம் ஜிந்தாபாத், முஸ்லிம்கள் ஜிந்தாபாத், பாகிஸ்தானிய இராணுவம் ஜிந்தாபாத், பாகிஸ்தான் ஐஎஸ்ஐ ஜிந்தாபாத், காஷ்மீர் விடுதலை, சிரிய விடுதலை, பலஸ்தீன விடுதலை என்று செய்தியைப் பதிவு செய்துள்ளனர்.

உலகெங்கும் 99 நாடுகளின் இணையத்தளங்கள் மீது கடந்த வாரத்தில் ரன்சம்வேர் வைரஸ் தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது. இலங்கையிலும் இத்தகைய தாக்குதல் இடம்பெறாலாம் என்று எச்சரிக்கை செய்யப்பட்டது.

எனினும், காலி மாவட்டச் செயலக இணையத்தளம் மீதான சைபர் தாக்குதலுக்கும், ரன்சம்வேர் வைரஸ் தாக்குதலுக்கும் தொடர்பு இல்லை என்றும் இலங்கைக் கணினி அவசர நடவடிக்கைக் குழுவின் தலைமை தகவல் பாதுகாப்புப் பொறியாளர் ரொசான் சந்திரகுப்தா தெரிவித்துள்ளார்.

அதேவேளை, சைபர் தாக்குதல் நடத்தப்பட்ட காலி மாவட்டச் செயலக இணையத்தளம் மீட்கப்பட்டுள்ள போதிலும் அது தொடர்ந்தும் முடக்கப்பட்ட நிலையிலேயே உள்ளமை குறிப்பிடத்தக்கது. (து-5)



## கிளி. கந்தசுவாமி ஆலயத்தில் நாளை சிறப்பு வழிபாடு

கிளிநொச்சி, மே 17

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை முன்னிட்டு கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்தில் நாளைக் காலை 9.30 மணிக்கு சிறப்பு வழிபாடு நடத்தப்படும் என்று கிளிநொச்சியில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர்.

பொது அமைப்புக்களுடன் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டது.

"கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றிலில் நாளைய தினம் காலை 9.30 மணிக்கு தேங்காய் உடைத்து வழிபாடு நடத்தப்படும். வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி வேண்டியும் இந்தச் சிறப்பு வழிபாடு நடத்தப்படும். அத்தோடு நாளைய தினம் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ள விளையாட்டுப் போட்டியை ஏற்பாட்டாளர்கள் நிறுத்தவேண்டும்" என்று கிளிநொச்சி வலிந்து காணமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர். (வ-6)

# மோசடிக் குற்றச்சாட்டில் பெண் கிராம அலுவலர் பணியிலிருந்து இடைநீக்கம்

யாழ்ப்பாணம், மே 17
கோப்பாய் பிரதேச செயலகத்தில் பணிபுரியும் பெண் கிராம அலுவலர் ஒருவர் செயலகத்தின் போலிக் கடித தலைப்பைப் பயன்படுத்தி வங்கியில் 18 லட்சம் ரூபா கடனாகப்பெற்றுள்ளார் எனத் தெரியவருகின்றது.

மோசடிக் குற்றச்சாட்டில் அவர் மீதான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதனால் அவர் பணியிலிருந்து இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார் என்று யாழ்ப்பாண செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

கோப்பாய் பிரதேச செயலகத்தில் பணிபுரியும் பெண் கிராம அலுவலர் பிரதேச செயலகத்தின் கடிதத் தலைப்பைப் போலியாகத் தயார் செய்துள்ளார். அதனைப் பயன்படுத்தி தனது பதவிநிலை தொடர்பான உறுதிப்படுத்தல் கடிதங்களை அவர் போலியாகத் தயாரித்துள்ளார். அவற்றை 2 வங்கிகளில் வழங்கி கடனுக்கு விண்ணப்பித்துள்ளார்.

ஓர் வங்கியில் 15 லட்சம் ரூபாவும் மற்றைய வங்கியினில் 10 லட்சம் ரூபாவும் அவரால் கோரப்பட்டுள்ளன. எனினும் குறித்த வங்கிகள் முறையே 11 லட்சம் ரூபாவும் , 7 லட்சம் ரூபாவும் கடனாக வழங்கியுள்ளன.

அண்மையில் கடனைப் பெற்ற பெண் கிராம அலுவலர் அண்மைக் காலமாக விடுப்பில் உள்ளார். குறித்த விடயம் தற்போது பிரதேச செயலாளர், யாழ்ப்பாண மாவட்டச் செயலாளர் ஆகியோரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

குற்றஞ்சாட்டப்படும் பெண் கிராம அலுவலர் பணியிலிருந்து இடைநீக்கம் செய்யப்பட்டு விசாரணைகள் இடம்பெறுகின்றன. போலிக் கடிதத் தலைப்புக்கள் மற்றும் றப்பர் முத்திரைகள் அவரால் எவ்வாறு பெறப்பட்டன என்பது தொடர்பிலும் தீவிர விசாரணை இடம்பெறுகின்றது. கிராம அலுவலரின் மோசடியுடன் பிரதேச செயலகத்தின் வேறு பணியாளர்களும் தொடர்பு பட்டுள்ளனரா? என்பது தொடர்பிலும் ஆராயப்படுகின்றது. அத்தோடு போலிக் கடிதத் தலைப்பு மற்றும் றப்பர் முத்திரைகளை தயாரித்தவர்கள் என சகல வழிகளிலும் விசாரணைகள் இடம்பெறுகின்றன" என்று யாழ்ப்பாண மாவட்டச் செயலகத் தகவல்கள் தெரிவித்தன.

இதேவேளை, குறித்த பெண் கிராம அலுவலர், உடுவில் பிரதேச செயலகத்தில் பணியாற்றிய போது மோசடியில் ஈடுபட்டு பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டிருந்தார். எனினும் ஓர் அரசியல் கட்சியின் பரிந்துரையில் அவருக்கு மீண்டும் பணி வழங்கப்பட்டிருந்தது என்றும் தெரிவிக்கப்பட்டது. (வ-8-101)

## அடாவடி கும்பல்களில் 4 பேர் கைது

யாழ்ப்பாணம், மே 17
வடமராட்சி கற்கோவளத்தில் 2 கும்பல்கள் வாள்கள், பொல்லுகளுடன் சென்று அடாவடியில் ஈடுபட்டு வரும் நிலையில், ஒரு கும்பலைச் சேர்ந்த 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

"கற்கோவளம் பகுதியில் சில நாள்களாக 2 கும்பல்களுக்கு இடையே முரண்பாடு நீடித்தது. அது கைகலப்பாகியதில் 3 பேர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப் பட்டனர்.

அது தொடர்பில் சம்பவ இடத்துக்குப் பொலிஸார் சென்றதும் குறித்த கும்பல்கள் அங்கிருந்து ஓடித் தலைமறைவாகிவிட்டன. இதே நிலமை தொடர்ந்தது.

இந்த நிலையிலேயே குறித்த 4 பேர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். அவர்கள் விசாரணையின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவர்" என்று பொலிஸார் தெரிவித்தனர். (வ-4- 26)

## இலங்கையில் பொருளாதார உறுதி நிலை

அமெ. மகிழ்ச்சி

கொழும்பு, மே 17
இலங்கையில் பொருளாதார உறுதிப்பாடு ஏற்பட்டுள்ளதாக அமெரிக்க காங்கிரஸ் சபைப் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர். அமெரிக்கக் காங்கிரஸ் சபையின் >> 27

## அமைச்சரவைக் கூட்டத்தை மைத்திரி நேற்று நடத்தினார்

கொழும்பு, மே 17
அமைச்சரவை மாற்றமின்றி நேற்று அமைச்சரவைக் கூட்டம் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்றுள்ளது.

அமைச்சரவைக் கூட்டம் நேற்று நடைபெற மாட்டாது என்று உறுதியான தகவல்கள் வெளியாகியிருந்த நிலையில், நேற்று முன்தினம் பின்னிரவு, அமைச்சர்களுக்கு அரச தலைவர் செயலகத்தால், அமைச்சரவைக் கூட்டத்துக்கான அழைப்பு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அதற்கு அமைவாக நேற்றுக் காலை அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றுள்ளது. சீனாவுக்குச் சென்றுள்ளமை காரணமாக தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க இதில் பங்கேற்கவில்லை.

அமைச்சரவை மாற்றத்தின் பின்னரே அடுத்த அமைச்சரவைக் கூட்டம் நடைபெறும் என்று கூறப்பட்டு வந்த நிலையில், அரச தலைவர் மைத்திரிபால அதிரடியாக நேற்றைய தினம் கூட்டத்தை நடத்தியுள்ளார். (வ-5)

## குடும்பத்தலைவரிடமிருந்து ரூபா 8 லட்சம் பெறுமதியான நகைகள் நூதனமாகப் பறிப்பு

மீன் கொள்வனவு ஆசைகாட்டி சுமார் 8 லட்சம் ரூபா பெறுமதியான நகைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன என்று முறையிடப்பட்டது. மதுவினுள் மயக்க மருந்து கலந்துகொடுத்து மயக்கியே கொள்ளையிடப்பட்டதாக பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் வடமராட்சி சுப்பர் மடம் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றது.

அதே இடத்தைச் சேர்ந்த குடும்பத்தலைவரிடம் சென்ற ஒருவர் "கடற்கரைக்கு மீன் வருகிறது. கொள்வனவு செய்ய வேண்டும்" என்றுகூறி அவரை அழைத்துச் சென்றுள்ளார். அழைக்கப்பட்ட குடும்பத்தலைவர் மோதிரங்கள், சங்கிலிகள் மற்றும் கைச்செயின் போன்ற பெறுமதியான நகைகளை அணிந்திருந்தார். படகு வருவதற்கு நேரதாமதம் ஆகிறது என்றுகூறி அதுவரை மது அருந்துவோம் என்று அவருக்கு மது வழங்கப்பட்டது. அவர் மதுவை அருந்தியதும் மயங்கினார் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-4- 26)

## வறுமையான மாணவர்களுக்கு கூட்டுறவுச் சங்கம் ஊக்குவிப்பு

தென்மராட்சி , மே. 17
தென்மராட்சி கிழக்கு பலநோக்குக்கூட்டுறவுச் சங்கம் இந்த ஆண்டும் தனது பிரதேசத்தில் உள்ள பாடசாலைகளுள் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சித்தி பெற்று க.பொ.த. உயர்தரம் பயிலும் வறுமைக் கோட்டினுள் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு ஊக்குவிப்புத் தொகையை வழங்க முன்வந்துள்ளது.

இவர்களுக்கு மாதாந்தம் ரூபா 1500 வீதம் 2 வருடங்களுக்கு குறித்த நிதியை வழங்கக் குறித்த கூட்டுறவுச் சங்கம் தீர்மானித்துள்ளது.

இதன் பிரகாரம் குறித்த மாணவர்கள் சங்கத்தின் எல்லைப் பரப்பினுள் இயங்கும் பாடசாலைகளில் 2016 ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் முதல் தடவையாகச் சித்தியெய்தி இருக்கவேண்டும்.

மாணவர்களின் பெற்றோர் குறித்த சங்க எல்லைப் பரப்பினுள் நிரந்தர வசிப்பிடத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் குறித்த கூட்டுறவுச் சங்கத்தில் அங்கத்தவராகவும் இருக்கவேண்டும்.

குறித்த நிதியத்தைப் பெற விரும்பும் மாணவர்கள் சங்கத்தின் தலைமைக் காரி யாலயத்தில் விண்ணப்பப் படிவத்தைப் பெற்று முழுமைப்படுத்தி கேட்கப்படும் நிபந்தனைகளை முழுமை செய்து எதிர்வரும் 31 ஆம் திகதி புதன்கிழமை பி.ப 2 மணிக்கு முன்பு சங்க தலை மைப்பணிமனையில் ஒப்படைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (த-122)

முதலாம் பக்கத்தொடர்ச்சிகள்...

### திருகோணமலையில்...

திகதி ஆரம்பமானது. யாழ்ப்பாணம் செம்மணியில் முதல் நாளும், வல்வெட்டித்துறை, மிருசுவிலில் இரண்டாம் நாளும், மூன்றாம் நாள் வவுனியா, நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயத்திலும், தொல்புரத்திலும், நான்காம் நாள் நினைவேந்தல் நெடுந்தீவிலும் இடம்பெற்றது. ஐந்தாம் நாள் நிகழ்வு திருகோணமலையில் நேற்று நடைபெற்றது. பிற்பகல் 1.30 மணியளவில் திருகோணமலை கடற்கரைக்கு முன்பாக அமைந்துள்ள காந்தி சிலைக்கு அருகில் இந்த நிகழ்வு நடைபெற்றது. (த-5)

### வித்தியா...

செய்துள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்றுக்கு இந்த வழக்கை மாற்றாமல் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்திலேயே விசாரிக்கவேண்டும் என வலியுறுத்தி இன்று முற்பகல் 9 மணிக்கு நல்லூர் ஆலய முன்றிலில் இருந்து ஆரம்பமாகும் கண்டனப் பேரணி யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தை அடையவுள்ளது.

இந்த கண்டனப் பேரணிக்கு சகல தரப்பினரும் ஆதரவு வழங்குமாறு கோரப்பட்டுள்ளது. (த-ரி)

### மகளின்...

போய்விடுமோ என நான் அஞ்சுகின்றேன். அதற்கான வாய்ப்புக்கள் பல உள்ளன.

எனவே இந்த வழக்கு விசாரணைகளைக் கொழும்பில் மேற்கொள்ளாது யாழ்ப்பாணத்தில் நடத்தவேண்டும்.

இவ்வாறு கோரி வித்தியாவின் தாயான சிவலோகநாதன் சரஸ்வதி அரச தலைவர், தலைமை அமைச்சர், தலைமை நீதியரசர் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோருக்குக் கடிதங்களை அனுப்பியுள்ளார்.

சட்டத்தரணி வி.மணிவண்ணன் ஊடாக அனுப்பியுள்ள இந்தக் கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

எனது மகளின் கொலை வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றில் நடைபெற்று வருகின்றது. தற்போது அந்த வழக்கின் விசாரணைகள் முடிவடைந்து வழக்கானது மேல் நீதிமன்றத்திற்கு பாரப்படுத்தப்படவுள்ள நிலையில் அது கொழும்புக்கு மாற்றப்படவுள்ளதாகப் பத்திரிகை வாயிலாகக் கேள்வியுற்றபோது அதிர்ச்சி அடைந்தேன். குறித்த விசாரணைகள் தமிழ்மொழியில் பரீட்சயமற்ற நீதிபதிகளால் விசாரிக்கப்படவுள்ளதாகவும் அறிந்தேன்.

யாழ்ப்பாணத்துக்குப் பயணம் செய்த அரச தலைவர் கடந்த வருடம் இதே மாதம் 26 ஆம் திகதி என்னை வேம்படி மகளிர் கல்லூரிக்கு அழைத்து, குறித்த வழக்கானது யாழ்ப்பாணத்தில் ட்ரயல் அட்பார் முறையில் நடைபெறத் தான் நடவடிக்கை எடுப்பேன் என்று உத்தரவாதம் வழங்கியிருந்தார். குறித்த உத்தரவாதத்துக்கு முரணாக தற்போது இந்த வழக்கு கொழும்புக்கு மாற்றப்படுவது எனக்கு மிகுந்த அதிர்ச்சியையும் மனவேதனையையும் ஏற்படுத்தியுள்ளது.

கொழும்புக்கு வந்து தங்கியிருந்து வழக்கு விசாரணைகளில் பங்கு பெறுவது எனக்கும் ஏனைய சாட்சிகளுக்கும் ஏற்புடையதாக இருக்காது. வறுமையில் நாம் இருப்பதன் காரணமாகக் கொழும்புக்கு மாற்றுவது மிகுந்த பொருளாதாரச் சுமையை ஏற்படுத்தும். வயது முதிர்ந்த நிலையில் இருக்கும் எனது உடல்நிலையும் அதற்கு ஒத்துழைக்காது. நாம் சிங்களமொழி பேச முடியாமல் இருப்பதால் தமிழில் எம்மால் வழங்கப்படும் சாட்சியங்கள் சிங்கள மொழிக்கு மொழி பெயர்க்கப்படும்போது திரிபடையும் வாய்ப்புகளும் உள்ளன.

எனது மகள் கொலை செய்யப்பட்டு இரண்டு ஆண்டுகள் கடந்துவிட்டன. ஊர்காவற்றுறை நீதிமன்ற வழக்கு நடவடிக்கைகள் எல்லாம் தமிழ் மொழியில் காணப்படுவதால் அவற்றை மொழி பெயர்ப்பதற்காக மேலும் காலதாமதம் ஏற்படும் என அஞ்சுகின்றேன்.

எனவே இவை அனைத்தும் எனது மகளின் இழப்புக்குக் கிடைக்க வேண்டிய நீதியை இல்லாது செய்துவிடும் என நியாயமாக அஞ்சுகின்றேன். எனவே காலதாமதமின்றி இந்த வழக்கு நடவடிக்கைகளை யாழ்ப்பாணத்தில் ட்ரயல் அட்பார் முறையில் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தாழ்மையாகக் கோருகின்றேன் - என்றுள்ளது. (த-4)

### முள்ளிவாய்க்கால்...

நீண்டநேரம் விசாரணைக்குட்படுத்தப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

"முல்லைத்தீவு சிவில் சமுகத்தின் இணைப் பேச்சாளர் அருட்தந்தை எழில்றஜன் நேற்றிரவு 7 மணியளவில் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்துக்கு அழைக்கப்பட்டார். அவரிடம் சுமார் 2 மணித்தியாலங்களுக்கும் மேலாக விசாரணை இடம்பெற்று வாக்குமூலம் பெறப்பட்டது. முள்ளிவாய்க்காலில் மேற்கொள்ளப்படும் நினைவுக்கல் தொடர்பான விசாரணைகளே அவரிடம் இடம்பெற்றன.

விசாரணையின் பின்னர் நேற்றிரவு 9. 40 மணியளவில் அருட்தந்தை வீடு செல்ல அனுமதிக்கப்பட்டார். அவருடன் சட்டத்தரணி அன்ரன் புனிதநாயகமும் சென்றிருந்தார்" என்று தெரிவிக்கப்பட்டது.

"முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நாளைய தினம் கடைப்பிடிக்கவுள்ள நிலையில் அச்சுறுத்தும் வகையிலேயே குறித்த செயற்பாடு அமைந்துள்ளது. சாதாரண பொதுமகன் முதல் இறைபணி புரியும் அருட்தந்தை வரையில் மக்களுக்கான சேவையை முன்னெடுப்போரை அச்சுறுத்தும் நிலமையே இன்னும் தொடர்கின்றது என்பதையே பொலிஸாரின் இந்தச் செயற்பாடு காட்டுகின்றது" என்று முல்லைத்தீவு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறீஸ்கந்தரா தெரிவித்தார். (வ-101-7)

# யாழ். நகர் வர்த்தக நிலையங்களில் இளையோருக்குத் தொழில்வாய்ப்பு

## வணிகர் கழகத்தால் விண்ணப்பங்கோரல்

யாழ்ப்பாணம் மே 17

"யாழ்ப்பாண மாவட்டத்தில் வேலைதேடும் இளையோருக்கு யாழ்ப்பாண மாநகரிலுள்ள வர்த்தக நிலையங்களில் தொழில்வாய்ப்புக்களைப் பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கையை யாழ்ப்பாண வணிகர் கழகம் முன்னெடுத்துள்ளது. இணைய விரும்புவோர் விண்ணப்பங்களை ஒப்படைக்க வேண்டும்" இவ்வாறு கழகத்தின் செயலாளர் இ.ஜனக்குமார் அறிவித்தார்.

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யாழ்ப்பாண மாநகரிலுள்ள வர்த்தக நிலையங்களில் சிட்டை லிகிதர்கள், பொருள்கள் பொதி செய்பவர்கள், உதவியாளர்கள், சாரதிகள், காசாளர், கணக்குப் பதியுநர்கள், கணினி இயக்குநர்கள் மற்றும் உதவி முகாமையாளர்கள் ஆகிய பணிகளுக்கு வெற்றிடங்கள் உள்ளன. இவ்வாறான பணிகளில் இணைய விரும்புவோர் இல.165 மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள வணிகர் கழகத்தில் நேரடியாக வந்து தங்களின் பெயர் விவரங்களைப் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

இது தொடர்பான மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்வதற்கு 021 2228593 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளமுடியும். அத்துடன் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ள பதவி நிலைகளுக்கு இலங்கை அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள தனியார் துறை சம்பளக் கொடுப்பனவுகள் வழங்கப்படுவது உறுதி செய்யப்படும். இருபாலரும் விண்ணப்பிக்க முடியும் என்றுள்ளது. (வ-8)

## ரியூசன் முடித்து வீடு திரும்பிய மாணவியிடம் சங்கிலி பறிப்பு

### யாழ். அன்னசத்திர லேனில் சம்பவம்

யாழ்ப்பாணம், மே 17

யாழ்ப்பாணம், நாவலர் வீதி, அன்னசத்திர லேனின் தொடக்கப் பகுதியில் துவிச்சக்கர வண்டியில் பயணித்த மாணவி ஒருவர் அணிந்திருந்த 2 பவுண் தங்கச் சங்கிலியை மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு இளைஞர்கள் அறுத்துக்கொண்டு தப்பித்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றது.

"யாழ்ப்பாணம், நாவலர் வீதி வழியாக தனியார் கல்வி நிலையம் ஒன்றுக்குச் சென்றுவிட்டு மாணவி துவிச்சக்கர வண்டியில் வீடு திரும்பினார். மாணவி அன்னசத்திர லேனில் திரும்பியுள்ளார். அவரை மோட்டார் சைக்கிளில் பின் தொடர்ந்த இருவர் மாணவி அணிந்திருந்த 2 பவுண் தங்கச் சங்கிலியை அறுத்துக்கொண்டு தப்பிச் சென்றுள்ளனர்.

சங்கிலியைப் பறிகொடுத்த மாணவி எழுப்பிய கூக்குரலையடுத்து அயலில் உள்ளவர்கள் விரைந்து வந்தபோதும் கொள்ளையர்களைப் பிடிக்க முடியவில்லை. சம்பவம் தொடர்பில் மாணவி யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறையிட்டுள்ளார்" என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (வ-101)

## சட்டவிரோதமாக சாராயம் விற்றவருக்கு ஒத்திவைத்த சிறை

தென்மராட்சி, மே 17

சட்விரோதமாக சாராய விற்பனையில் ஈடுபட்டவருக்கு 5 வருடங்கள் ஒத்தி வைக்கப்பட்ட 2 வருட சிறைத் தண்டனை சாவகச்சேரி நீதிவான் மன்றால் விதிக்கப்பட்டது.

கைதடி தெற்கைச் சேர்ந்த ஒருவருக்கே இவ்வாறு தண்டனை வழங்கப்பட்டது.

கைதடிப்பகுதியில் சட்டவிரோதமாக சாராய விற்பனையில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் அவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். அவர் மீதான குற்றச்சாட்டு மன்றால் நிரூபிக்கப்பட்டது. அவருக்கு 5 வருடங்கள் ஒத்திவைக்கப்பட்ட 2 வருடங்கள் சிறைத் தண்டனை வழங்கி சாவகச்சேரி நீதிவான் உத்தரவிட்டார். (வ-9)

## பல திருட்டுக் குற்றச்சாட்டுக்களில் தேடப்பட்டவர் அல்வாயில் கைது

யாழ்ப்பாணம், மே 17

பல இடங்களிலும் திருட்டுக்களில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் தேடப்பட்டவர் வாள் மற்றும் உள்ளுர் கைக்குண்டு என்பனவற்றை வைத்திருந்த குற்றச்சாட்டில் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வடமராட்சி அல்வாயில் நேற்று அதிகாலை 4 மணியளவில் கைது இடம்பெற்றது.

அச்சுவேலி, சுன்னாகம், மானிப்பாய், யாழ்ப்பாணம், பளை ஆகிய பொலிஸ் பிரிவுகளில் குறித்த நபருக்கு எதிராக கொள்ளைக் குற்றச்சாட்டுக்களில் வழக்குகள் நிலுவையிலுள்ளன. அவர் தொடர்பில் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் கடந்த முதலாம் திகதி பொலிஸார் வரணிக்குச் சென்று அவரைக் கைது செய்ய முயற்சித்தனர். எனினும் சந்தேகநபர் தனது மோட்டார் சைக்கிளைப் போட்டுவிட்டுத் தப்பித்தார்.

அதன்போது அவரது காசுப்பை விழுந்துவிட்டது. அதனைப் பொலிஸார் எடுத்துச் சோதித்தபோது அதனுள் 100 கிராம் நிறையுடைய கஞ்சா போதைப் பொருள் மீட்கப்பட்டது. மோட்டார் சைக்கிளை பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது. சந்தேகநபர் தொடர்ந்தும் தேடப்படுபவராக இருந்தார்.

அவர் தொடர்பில் கிடைத்த தகவலின் படி குறித்த நபரை அல்வாயில் வைத்து நேற்று அதிகாலை 4 மணியளவில் மடக்கிப் பிடித்துக் கைது செய்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

"அவரது உடமையிலிருந்து வாள் மற்றும் உள்ளுர் கைக்குண்டு என்பன மீட்கப்பட்டன. அவை தொடர்பில் விசாரணை முன்னெடுக்கப்படுகிறது. விசாரணையின் பின்னர் அவர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார்" என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (4-26)

## ஆடு திருடிய நால்வர் வசமாக மாட்டினர்

### இளவாலையில் சம்பவம்

யாழ்ப்பாணம், ம 17

இளவாலையிலிருந்து 3 ஆடுகளை முச்சக்கர வண்டியில் கடத்திய போது ஆடு கத்தியதால், கடத்தல்காரர்கள் சிக்கினர்.

ஆடுகளைக் கடத்திக் கொண்டுசென்ற குற்றச்சாட்டில் யாழ்ப்பாணம் ஐந்து சந்தியைச் சேர்ந்த 4 இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் இளவாலையில் நேற்று இடம்பெற்றது.

இளவாலைப் பகுதியில் வீட்டின் முன்னால் கட்டி நின்ற ஆடுகள் இரண்டைத் திருடியவர்கள் அதனை முச்சக்கர வண்டியில் ஏற்றிக் கடத்த முயற்சித்தனர். அதன்போது ஆடு எழுப்பிய சத்தத்தையடுத்து உரிமையாளர் துரத்திச் சென்றார். அவர் அவசரத்தில் தலைக்கவசம் இன்றி மோட்டார் சைக்கிளில் முச்சக்கர வண்டியைத் துரத்தியுள்ளார். அவர் தலைக்கவசமின்றிப் பயணிப்பதை அவதானித்த பொலிஸார் வழிமறித்துள்ளனர். ஆட்டின் உரிமையாளர் விடயத்தைக் கூறவே பொலிஸாரும் இணைந்து ஆடு கடத்தியோரைத் துரத்திச் சென்றனர். சுன்னாகம் சந்தியில் இருந்த சமிக்ஞை விளக்கின் முன்பாகவும் முச்சக்கரவண்டியை நிறுத்தாது கடத்தல்காரர்கள் வேகமாகப் பயணித்துள்ளனர்.

ஆடுகள் கடத்தியவர்களை இணுவில் பிரதேசத்தில் வைத்து பொலிஸார் தடுத்து நிறுத்தினர். எனினும் அவர்கள் தப்பித்தனர். இதனால் மீண்டும் விரட்டிய பொலிஸார் கைத்துப்பாக்கியை காட்டி எச்சரித்தனர். ஆட்டுத் திருடர்கள் வேறு வழியின்றி முச்சக்கர வண்டியை நிறுத்தினர். அதனையடுத்து ஆடு உரிமையாளரும் சம்பவ இடத்துக்கு வருகை தந்து ஆட்டை அடையாளம் காட்டினார். இதனையடுத்து அதில் பயணித்த 4 பேரும் கைது செய்யப்பட்டனர். முச்சக்கர வண்டியும் ஆடுகளும் இளவாலைப் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டன.

இந்தச் சம்பவத்தால் அப்பகுதியில் சிறிது நேரம் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. ஆட்டின் உரிமையாளரின் விடா முயற்சியால் அவரது வாழ்வாதார மறி ஆடு காப்பாற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. கைது செய்யப்பட்ட 4 பேரும் யாழ்ப்பாணம் ஐந்து சந்தியைச் சேர்ந்தவர்கள். அவர்கள் பொலிஸ் தடுப்பில் வைத்து விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

(வ-4-26-101)

### பல்கலை. மாணவர்கள் படுகொலை:

## வழக்கைத் திசை திருப்புவதற்கு முல்லை. எஸ்.எஸ்.பி. முயற்சி

### யாழ். நீதிவான் மன்றில் முறையீடு

யாழ்ப்பாணம்.மே.17

"துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களது பெற்றோரிடம் சென்ற முல்லைத்தீவு மாவட்ட மூத்த பொலிஸ் அத்தியட்சகர், 5 பொலிஸார் மீதான வழக்கைத் திசை திருப்பும் வகையில் அவர்களிடம் பேசியுள்ளார்"

இவ்வாறு யாழ்ப்பாணம் நீதிவான் மன்றின் கவனத்துக்கு கொண்டு வந்தனர் மாணவர்களின் பெற்றோர் நலன்சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள்.

இந்த வழக்கு யாழ்ப்பாணம் நீதிவான் சி.சதீஸ்தரன் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தது. சந்தேக நபர்களான 5 பொலிஸ் உத்தியோகத்தர்களும் சிறைச்சாலை உத்தியோகத்தர்களால் மன்றில் முற்படுத்தப்பட்டனர்.

பாதிக்கப்பட்ட தரப்பினர் நலன் சார்பில் அரச தலைவர் சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் மற்றும் சட்டத்தரணி வி.ரி.சிவலிங்கம் ஆகியோரும் சந்தேகநபர்கள் சார்பில் சட்டத்தரணி மு.றெமிடியஸும் முன்னிலையாகினர்.

"துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட மாணவர்களின் வீடுகளுக்குச் சென்ற முல்லைத்தீவு மூத்த பொலிஸ் அத்தியட்சகர், மாணவர்களுடைய பெற்றோரிடம் இந்த வழக்கை திசை திருப்பும் வகையில் பேசியுள்ளார். பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குதேவையானமேலதிக உதவிகளைத் தாம் நிறைவேற்றுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

எனவே இவ்வாறு முல்லைத்தீவில் கடமையாற்றும் மூத்த பொலிஸ் அத்தியட்சகர், இவ்வாறு மாணவர்களின் பெற்றோருடன் ஏன் கதைத்தார்? இது தொடர்பில் அவர் மன்றுக்கு தெரியப்படுத்த வேண்டும். ஆனால் அவ்வாறு அவர் மன்றில் தெரிவிக்கவில்லை. மன்றில் இன்று வரை அவர் முன்னிலையாகவுமில்லை. இதுதொடர்பில் அவர் மன்றில் தெளிவுபடுத்த வேண்டும்" என்று பாதிக்கப்பட்ட குடும்பங்களின் நலன் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் மன்றில் கோரினர்.

முல்லைத்தீவு மூத்த பொலிஸ் அத்தியட்சகருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டதாக மன்று தெரிவித்தது. அவ்வாறு அனுப்பப்பட்ட அழைப்பாணையின் பிரதியை வழங்குமாறு சட்டத்தரணிகள் கோரினர்.

இவற்றைப் பரிசீலித்த நீதிவான் வழக்கை எதிர்வரும் 30ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (வ-12)

## முளைதிறன் கூடியமரக்கறி விதைகள் விநியோகம்

யாழ்ப்பாணம்,மே 17

யாழ். குடாநாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட முளைதிறன்கூடிய மரக்கறி விதைகளை விநியோகிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கம் (சிக்கோ) தனது விவசாய பண்ணையில் உற்பத்தி செய்யப்பட்ட இந்த மரக்கறி விதைகளை அறுவடைசெய்து விவசாயிகளுக்கு விநியோகிக்கின்றது.

பாகல், வெண்டி,கீரை, கத்தரி, போன்ற மரக்கறி விதை கள் விநியோகிக்கப்படுகின்றன என்று சங்கத்தின் பொது முகாமையாளர் ரி.ரவிமயூரன் தெரிவித்தார். (ற-17)

## தாதியர் தின நிகழ்வு இன்று

சாவகச்சேரி மே. 17

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் உலக தாதியர் தின நிகழ்வுகள் இன்று மு.ப.11 மணிக்கு வைத்தியசாலை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் என்று அரச தாதிய உத்தியோகத்தர் சங்கத்தினர் அறிவித்தனர்.

இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வைத்தியசாலை பதில் மருத்துவ அத்தியட்சகர் திருமதி மருத்துவர் வி.அச்சுதன் கலந்து கொள்வார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

(வ-9)

# முகநூல் தகவல்களின் உண்மைகளை ஆராயாமல் கருத்துக்களை வெளியிடலாமா?

## சட்டத்தரணி சுகாஸிடம் சிறிதரன் எம்.பி.கேள்வி

யாழ்ப்பாணம், மே 17

முகநூலில் வரும் தகவலின் உண்மைத் தன்மைகளை ஆராயாது சட்டத்தரணி ஒருவர் கருத்துக்களை வெளியிடலாமா? என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கேள்வி எழுப்பினார்.

வீ.வீ.சாந்தனின் உயர்தரத் தமிழ் நூல் வெளியீட்டு விழா மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியில், மருதங்கேணிப் பிரதேசசெயலர் க.கனகேஸவரன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இந்தக் கேள்வியை எழுப்பினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

சிறீதரன் அரச தரப்புக்கு ஜி.எஸ்.பி பிளஸ் வரிச் சலுகையைப் பெற்றுக்கொடுத்து விட்டார். அதற்காகத்தான் அவர் பெல்ஜியம் சென்றுள்ளார் என்று என்னைப் பற்றி தனது வாயில் வந்தபடி அண்மையில் சாவகச்சேரியில் நடைபெற்ற மே தினக் கூட்டத்தில் சட்டத்தரணி சுகாஸ் கூறியிருந்தார்.

முகநூலில் வந்த தகவலை வைத்து ஒரு சட்டத்தரணி இப்படிக் கூறலாமா? போலி முகநூல்களுக்குப் பின்னால் இருந்து மக்களைக் குழப்புபவர்கள் இப்போது அதிகமாகி விட்டார்கள்.

ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் பெல்ஜியத்தில் நடைபெற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான கருத்தமர்வில் எமது கட்சியின் சார்பில் கலந்து கொள்ளச் சென்ற என்னை அவர்கள், ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை பிரிட்டன் அரசிடமிருந்து பெற்று இலங்கை அரசுக்கு வழங்கியுள்ளார் என்றனர். இது வேடிக்கையான விடயம் மட்டுமல்ல எமது மக்களைக் குழப்பி தமிழ்த் தேசியப் பற்றை அழிப்பதற்கான முயற்சியாகவே தான் நோக்க வேண்டியுள்ளது.

எமது மொழியை வளர்க்க வேண்டும் எமது மொழியைப் பாதுகாக்க வேண்டும் என்பதில் நாம் மிகவும் கவனம் செலுத்த வேண்டிய காலகட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

-என்றார். (ஜ-10-426)

# பருவப் பெயர்ச்சிக் காற்றால் ஆழ்கடல் மீன்பிடியில் பாதிப்பு

## யாழ். கரையோர மீனவர்கள் கவலை



யாழ்ப்பாணம் மே 17

தற்போது ஆரம்பித்துள்ள பருவப் பெயர்சிக் காற்றால் ஆழ்கடல் மீனபிடித் தொழில் பாதிக்கபட்டுள்ளதாக யாழ்ப்பாண கரையோரப் பகுதி மீனவர்கள் கவலை தெரிவித்தனர்.

இது தொடர்பாக குருநகர் பகுதியைச் சேர்ந்த மீனவர் அழகையா தெரிவித்ததாவது:

குருநகரில் 300 குடும்பங்கள் படகுகள் மூலம் தொழிலில் ஈடுபடுகின்றோம். மீன் பிடியை நம்பித் தான் எமது குடும்பங்கள் உள்ளன. இப்படியான காற்று வீசும் காலங்களில் நாம் கடலுக்கு செல்வதில்லை. யாழ்ப்பாணத்தில் ஏனைய கரையோரப் பகுதிகளில் வாழும் மக்களை விட நாம் தான் அதிகமாக பாதிக்கப்படுகின்றோம். எமக்கு தொழில் செய்வதற்காக 14 இலட்சம் ரூபா வரை தேவைப்படும். இந்தப் பெறுமதியுள்ள எமது படகை காற்று வீசும் காலத்தில் கடலுக்குள் எடுத்துச் செல்ல முடியாது. அதானால் எம்மில் பலர் நேற்றில் இருந்து கடலுக்குச் செல்வதை நிறுத்தியுள்ளனர்.

சில படகுகள் கடலுக்குச் சென்றன. அவை பாதிப்படைந்த நிலையில் கரைக்கு வந்தன. இப்படியான காலகட்டத்தில் எமக்கு எந்தவொரு கொடுப்பனவும் கிடைப்பதில்லை. குருநகர் கடற்பரப்பினுள் நாம் மீன் பிடிப்பதில்லை. நாம் 7 மணித்தியாலங்கள் படகில் பயணம் செய்து மன்னார் கடற்பரப்பை அண்டிய பகுதிலேயே மீன் பிடிக்கின்றோம். அதனால் எமக்குச் செலவு அதிகம். நீண்ட தூரம் சென்று மீன்பிடிக்க வேண்டிய தேவை இருப்பதனால், காற்று வீசும் காலத்தில் நாம் கடலுக்குச் செல்ல முடியாத நிலை ஏற்படுள்ளது. ஒரு சிலர் மீன் பிடிக்க சென்றாலும் அவர்களின் படகுகள் சேதங்களுக்கு உள்ளாகின்றன.

காற்றுக் குறைவாக வீசுகின்ற போது நாம் கடலுக்குச் செல்வோம். ஆனால் நடுக்கடலில் என்ன ஆகும் என்று கூற முடியாது. காலம் காலமாக இந்த காற்று வீசும் காலத்தில் எமது வாழ்வாதாரம் கேள்விக்குறியாகத்தான் இருக்கும் என்றார். (வ-ரி)

# லொத்தர் மூலம் கோடீஸ்வரரானவர் ஹெரோயின் வர்த்தகத்தில் சிக்கினார்

கொழும்பு, மே 17

அதிர்ஷ்டக் குலுக்கலில் (லொத்தர்) ஐந்தரைக் கோடி ரூபாவைப் பரிசாகப் பெற்ற நபரொருவர் அநுராதபுர புனித பூமியில் மற்றொருவருடன் சேர்ந்து ஹெரோயின் விற்றுக்கொண்டி ருந்தபோது அநுராதபுரம் பொலிஸாரால் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைதுசெய்யப்பட்டார்.

பிரதேசவாசிகளால் "கோடிபதியா' (கோடீஸ்வரர்) என அழைக்கப்படும் 35 வயதான இவர் கைதுசெய்யப்பட்ட சமயம் அவரிடமிருந்து 450 மில்லிகிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

இவருடன் கைதுசெய்யப்பட்ட 24 வயதான நபரிடமிருந்து 800 கிராம் ஹெரோயின் மீட்கப்பட்டுள்ளது எனவும், லொத்தரில் ஐந்தரைக் கோடி ரூபா பரிசைப் பெற்ற நபர் அந்தப் பணத்தின் பெரும் பகுதியை ஹெரோயினுக்காகவே செலவு செய்துள்ளார் எனவும் விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது என்று அநுராதபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதான இருவரையும் அநுராதபுரம் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற)

# காணியை மீட்டுத் தரக் கோரி குடும்பப் பெண் கவனவீர்ப்பு

வவுனியா, மே 17

யாழ்ப்பாணத்திலுள்ள காணியைப் பெற்றுத்தருமாறு கோரி வவுனியாவில் குடும்பப்பெண் ஒருவர் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டார்.

வவுனியா மணிக்கூட்டுக்கோபுரத்துக்கு முன்பாக நேற்று மாலை 4.30 மணியளவில் குறித்த பெண் கவனவீர்ப்பில் ஈடுபட்டார்.

யாழ்ப்பாணம், தெல்லிப்பழைப் பகுதியிலுள்ள தனது காணியில் நபரொருவர் அத்துமீறிக் குடியேறியுள்ளார். அதை மீட்டுத்தர நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்று கோரி தனது போராட்டத்தை குடும்பப்பெண் மேற்கொண்டார்.

சம்பவ இடத்துக்குச் சென்றவர்கள் யாழ்ப்பாணக் காணியை யாழ்ப்பாணத்திலுள்ள மாவட்டச் செயலகம் ஊடாகப் பெற்றுக்கொள்ளுமாறும் வவுனியாவில் போராட்டம் மேற்கொள்வதில் பயனேதும் இல்லை என்றும் தெளிவுபடுத்தினர். அதனையடுத்து 15 நிமிடத்தில் தனது போராட்டத்தை முடித்து அந்த இடத்திலிருந்து அவர் நகர்ந்தார். அவர் தற்போது வவுனியா ஓமந்தைப்பகுதியில் வசித்து வருகிறார் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-4)



# பருத்தியடைப்பு கரையில் தங்கூசி வலைகள் சிக்கின

## அழிக்குமாறு உத்தரவிட்டது நீதிமன்று



யாழ்ப்பாணம் மே 17

ஊர்காவற்றுறை பருத்தியடைப்புக் கடற் கரைப் பகுதியில் தடைசெய்யப்பட்ட தங்கூசி வலைகள் யாழ்ப்பாணம் நீரியல் வளத்துறை அதிகாரி களால் நேற்று கைப்பற்றப்பட்டன.

ஊர்காவற்றுறை பருத்தியடைப்பு கடற்பகுதியில் சட்ட விரோதமான முறையில் தடை செய்யப்பட்ட உபகரணங்களை பயன்படுத்தி மீன்பிடிக்கப்படுகின்றது என்று யாழ்ப்பாணம் நீரியல்வளத்துறையி னருக்கு கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து அதிகாரிகள் திடீர் சோதனையில் ஈடுபட்டனர். அதில் கடற்தொழிலில் ஈடுபட்டவர்கள் தடைசெய்யப்பட்ட தங்கூசி வலைகளை பயன்படுத்தியுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டது. ஆயினும் வலையை பயன்படுத்தியவர்கள் அவ்விடத்தை விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

யாழ்ப்பாண நீரியல்வளத்துறை அதிகாரிகள் அங்கிருந்த தங்கூசி வலைகளை கைப்பற்றினர். கைப்பற்றிய வலைகளை ஊர்காவற்றுறை நீதிமன்றில் பாரப்படுத்தினர். ஊர்காவற்றுறை நீதிபதி கைப்பற்றப்பட்ட தங்கூசி வலைகளை அழிக்குமாறு உத்தரவிட்டார்.

தடைசெய்யப்பட்ட உபகரணங்களை பயன்படுத்தி மீன்பிடி யில் ஈடுபட்டால் கடுமை யான நடவடிக்கைகளை எடுப்போம் என யாழ்ப்பாணம் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.

(ற-8-101)

# தனியார் கல்வி நிலையங்களின் இயக்குநர்களுக்குச் செயலமர்வு

அச்சுவேலி, மே 17

வலி. கிழக்கு பிரதேச சபையின் நிர்வாகத்துக்கு உட்பட்ட பகுதிகளில் செயற்பட்டுக் கொண்டிருக்கும் தனியார் கல்வி நிலையங்களின் இயக்குநர்களுக்கான கலந்துரையாடல் இன்று புதன்கிழமை பி.ப 3 மணிக்கு பிரதேச சபையின் புத்தூர் தலைமைக் காரியாலயத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

வலி. கிழக்கு பிரதேச சபையின் செயலாளர் ஜெயராசா ஜெலீபன் தலைமையில் நடைபெறும் கலந்துரையாடலில் கோப்பாய் பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி இ.மகேந்திரன் "மாணவர்களுக்கான பொதுச் சுகாதார வசதிகள்" என்ற விடயத் தலைப்பிலும் அச்சுவேலி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி "தனியார் கல்வி நிலையங்களின் மாணவர்களுக்கான பாதுகாப்பு" என்ற விடயத்தலைப்பிலும் கருத்துரை வழங்கவுள்ளனர்.

சகல தனியார் கல்வி நிலையங்களின் இயக்குநர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வலி. கிழக்கு பிரதேச சபையின் செயலாளர் ஜெயராசா ஜெலீபன் கேட்டுள்ளார். (வ-11)

# மரநடுகை மாதத்தில் 1,000 பேருக்கு மரங்கள்

யாழ். குடாநாட்டில் ஆயிரம் பேருக்கு பயன்தரும் மரக்கன்றுகளை எதிர்வரும் கார்த்திகை (மரம் நடுகை) மாதம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கான பயன் தரும் மரக்கன்றுகளை உற்பத்தி செய்யும் பணியில் விவசாய திணைக்களம் ஈடுபட்டுள்ளது.

நெல்லி, கொய்யா, மாதுளை, பலா, கறிமுருங்கை, சண்டி, தேசி, யம்பு, தென்னை போன்ற பயன் தரும் மரக்கன்றுகள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. ஆயிரம் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு ஒவ்வொருவருக்கும் ஒன்பது வரையிலான மரக்கன்றுகள் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-17)

# சாவகச்சேரி வைத்தியசாலையில் கிளினிக்குகள் நேரத்தில் மாற்றம்

சாவகச்சேரி, மே 17

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் இதுவரை மாலை வேளைகளில் நடத்தப்பட்டு வந்த கிளினிக்குகள் நோயாளர்களின் நலன்கருதி அந்தந்தத் தினங்களில் காலை வேளைகளில் நடத்தப் படுகின்றன என்று வைத்தியசாலை நிர்வாகம் அறிவித்தது.

"சிறப்புத் தேவையுடையோருக்கான கிளினிக் திங்கட்கிழமைகளிலும் காது, மூக்கு, தொண்டைக் கிளினிக் புதன்கிழமைகளிலும் அஸ்மா கிளினிக் வெள்ளிக்கிழமைகளிலும் தோல் மற்றும் பெண் நோயியல் கிளினிக்குகள் சனிக்கிழமைகளிலும் சத்திர சிகிச்சைக்குப் பின்னரான கிளினிக் ஞாயிற்றுக்கிழமைகளிலும் இடம்பெறுகின்றன. அவை காலை வேளையில் நடைபெறும். நோயாளர்கள் மாலை வேளைகளில் வருகை தந்து ஏமாற வேண்டாம்" என்று வைத்தியசாலை நிர்வாகத்தின் செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(வ- 9)

## சிறப்புத் தேவையுடைய மாணவர்களின் விளையாட்டு விழா


யாழ்ப்பாணம், மே 17

யாழ்ப்பாணக் கல்வி வலய சிறப்புத் தேவையுடைய மாணவர்களின் விளையாட்டு விழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கோப்பாய் மகா வித்தியாலயத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணக் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளரும் கல்வி முகாமைத்துவ தலைவருமான அ.அகிலதாஸ் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் ந.தெய்வேந்திரராஜா கலந்துகொள்வார் என்று தெரிவிக்கப்பட்டது.

(வ)

## மரண அறிவித்தல்கள்



### சின்னத்துரை நடனசிவராசா

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் நீர்வேலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை நடனசிவராசா நேற்று (16.05.2017) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா சேதுலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும் நவமணியின் அன்புக் கணவரும் ஜெயந்தி (டென்மார்க்), தயாளினி (சுவிஸ்), சசிதரன் (சுவிஸ்), ராகினி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் தனபாலன், குணரத்தினம், நளினி, காலஞ்சென்ற நித்தியானந்தன் ஆகியோரின் அன்பு மாமனும் கெனோஜா, தரியா, றொசாந்தன், லதுசன், தாரணி-சுசேன், கௌதம், சந்தோஷ், யதுஷா, மிருதிலா, கார்த்திகா, கார்த்திகன், கீர்த்திகா, மயூரிகா, தர்ஷிகன் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான கனகமுத்து, தெய்வானைப்பிள்ளை, வேலாயுதப்பிள்ளை மற்றும் பூதத்தம்பி, முத்துலிங்கம் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.05.2017) வியாழக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### திருமதி ஜதீஸ்வரி சிவபாலன்


ஏழாலை மேற்கைப்பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி ஜதீஸ்வரி சிவபாலன் (16.05.2017) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்புமகளும் கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த (மாத்தனை) காலஞ்சென்ற கந்தையா - சந்திரவதனி தம்பதியரின் அன்பு மரு மகளும் காலஞ்சென்ற கந்தையா சிவபாலன் (முகாமையாளர் இலங்கை வங்கி காங்கேசன் துறை) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கௌரிபாலன் மற்றும் சிவப்பிரகாசம் ஜதீஸ்வரன், ஜெகதர்மினி ஆகியோரின் பாசமிகு சகோ தரியும் சிவஜா (லண்டன்), நிருஜா, அனுஜா (லண்டன்), சிவஜயன், சிவகஜன் (பீப்பிள்ஸ் லீசிங் சுன்னாகம்) ஆகியோரின் அன்புத் தாயும் சந்திரகுமார் (லண்டன்), சசிதரன், டினேஷ்கரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியும் அபிநயா (லண்டன்), ஆர்த்திகா (லண்டன்), அக்ஷயா (லண்டன்) ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.05.2017) வியாழக் கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஏழாலை மேற்கு உசத்தியோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

ஏழாலை மேற்கு,
ஏழாலை.

தகவல்:
குடும்பத்தினர்.
077 189 4677 (சிவகஜன்)
077 622 7743 (சிவப்பிரகாசம்)



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 19 | 14 |
| 10 | 05 |
| 1947 | 2017 |

### சின்னத்தம்பி வேலுப்பிள்ளை

தாவளை, இயற்றாலை கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும், இணுவிலை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி வேலுப்பிள்ளை (14.05.2017) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - செல்லம்மா தம்பதியரின் அன்புமகனும் பரமேஸ்வரியின் அன்புக்கணவரும் கந்தையா - நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் குணசிங்கம் (குணம்), விஜயராணி, ஜீவராணி, வித்தியா (ஆசிரியர், நாரந்தனைறோமன் கத்தோலிக்க தமிழ் வித்தியாலயம், ஊர்காவற்துறை) ஆகியோரின் பாசமிகுதந்தையும் காலஞ்சென்றவர்களான சி.சின்னத்துரை, தங்கராசா, கிருஷ்ணசாமி, குஞ்சுதம்பி மற்றும் தெய்வானைப்பிள்ளை ஆகியோரின் சகோதரரும் சுபா (நோர்வே), ஐ. ரசிதன் (கனடா), சிவசுப்பிரமணியம் (லண்டன்), தேவமுகுந்தன் (ஆசிரியர், நீர்கொழும்பு விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.05.2017) வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரின் தற்போதைய இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இணுவில்
(பரராசசேகரபிள்ளையார் கோயிலடி).
077 4512 740

தகவல்:
மருமகன் (தேவமுகுந்தன்)

இம்முறை தனயோகம் உங்களுடையதா?
திகதி 16.05.2017
வெற்றிவாரம் 2133
வர்ணம் நீலம்
சிம்மம்
02 07 51 56
வெள்ளிக்கிழமை வெற்றிப்பொதி
ரூ 4, 807, 872/=
2017.05.19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சிவப்பு நிற டிக்கட்டுக்களாகும்.
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து
1919 இற்கு அனுப்பவும்.


சீட்டிழுப்பு வாரம்: 565 வர்ணம்: மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 16.05.2017
வெற்றி இலக்கங்கள்
05 19 62 64
ஆங்கில எழுத்து J
அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 27,361,415/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

கோட்டிபதி
சீட்டிழுப்பு வாரம்: 137
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 16.05.2017
அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 86,758,728/-
ஆங்கில எழுத்து மற்றும் இலக்கங்கள்
K 19 29 35 67
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

## மரண அறிவித்தல்கள்

### கனகசபை சின்னையா அருளானந்தம்

*(ஓய்வுபெற்ற இலங்கை விமானப்படை அதிகாரி)*




ஈச்சமோட்டையை பிறப்பிடமாகவும் அத்தியடியை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை சின்னையா அருளானந்தம் (ஓய்வுபெற்ற இலங்கை விமானப்படை அதிகாரி) கடந்த 15.05.2017 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் வேலுப்பிள்ளை இராமலிங்கம் அம்மணியம்மா தம்பதியரின் அன்புமருமகனும் மகாலட்சுமியின் அன்புக் கணவரும் சிவப்பிரகாசம் குணேஸ்வரி, செல்வரட்ணம் சிவசோதி காலஞ்சென்ற நடராசா வடிவம்மா, காலஞ்சென்ற சின்னைய்யா கனகசபை (ரீகல சவுண்ட்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் விஜயானந்தன் (லண்டன்), இராமநாதன் (இந்தியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் கமலாதேவியின் அன்பு மாமனும் ஆரணிகா, அருண்ராம், ஸாய்லக்ஷ்மி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.05.2017) வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

0212221002

தகவல்:
குடும்பத்தினர்.



### நாகலிங்கம் சரவணமுத்து (குணசிங்கம்)

சாவகச்சேரி, சங்கத்தானையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் சரவணமுத்து (குணசிங்கம்) நேற்று 16.05.2017 செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் செல்லம்மா தம்பதிகளின் அன்பு புதல்வனும், ருக்மணியின் அன்புக் கணவரும் மணிவாசகம் பிள்ளை (இலண்டன்) தனபாக்கியம், சந்திரபூபதி, லோகேஸ்வரி, ஞானசவுந்தரலிங்கம், (இலண்டன்), குணமணி (இலண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், ரோபானந்தி (அவுஸ்ரேலியா), கேதா (சமுர்த்தி அலுவலர் சாவகச்சேரி), முகிர்நாத் (அவுஸ்ரேலியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சரத்ஜெயன் (அவுஸ்ரேலியா), செந்தூரன் (சமுர்த்தி அலுவலர் சாவகச்சேரி), பிருந்தா (அவுஸ்திரேலியா), ஆகியோரின் அன்பு மாமனாரும் ராகுல்யுவன், கௌசல்யுவன், அப்சரன், கேசவி, ஹன்சிகா, ஜதி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 18.05.2017 வியாழக்கிழமை காலை 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பொற்தொழிலாளர்வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.

**இராமநாதன் நுண்கலைக்கழகம்**
**கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
**கல்வியாண்டு 2014/2015**
**நுண்கலைமாணி - நடனம்**
**நுண்கலைமாணி முதலாம் வருட பரீட்சைகள் 2015**
**(இரண்டாம் அரையாண்டு)**

நுண்கலைமாணி (நடனம்) முதலாம் வருட .கற்கைநெறி மாணவர்களுக்கான பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

முதலாம் வருட நுண்கலைமாணி (நடனம்) கற்கைநெறி மாணவர்கள் பரீட்சைக்கான விண்ணப்பப்படிவங்களை பூர்த்தி செய்து 18.05.2017 ஆம் திகதி வியாழக்கிழமைக்கு முன்னர் இராமநாதன் நுண்கலைக்கழகத்தின் நிர்வாக அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

மீள் பரீட்சார்த்திகளும், மருத்துவசான்றிதழ் சமர்ப்பித்து ஏற்றுக் கொள்ளப்பட்டோரும் பரீட்சைபெறுபேற்றினை தரமுயர்த்துவதற்கு ஒவ்வொரு பாட அலகிற்கும் ரூபா 250.00 வீதமும் யாழ்ப் பாணப்பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையில் செலுத்திப் பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்தல் வேண்டும். விண்ணப்ப முடிவு திகதியின் பின் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என்பதனை மாணவர்கள் கவனத்தில் கொள்ளவும்.

***பதிவாளர்***
***யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.***

## கண்ணீருடன்.....



ஈழத்தின் புகழ்பூத்த
இசைநாடகக்
கலைஞரும்
திருமறைக்
கலாமன்றத்தின்
மூத்த அங்கத்தவரும்
மூதவை
உறுப்பினரும்
இசைநாடகப் பிரிவின்
பொறுப்பாளருமான

**கலைவேந்தன்**
**ம.பொ. தைரியநாதன்**

அவர்கள் 16.05.2017 இல் காலமானதையிட்டு ஆழ்ந்த துயரடைந்துள்ளோம். அவருக்கு எமது நெஞ்சம் கனக்கும் கண்ணீர்துளிகளை காணிக்கையாக்கி அவரது இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அவரது ஆத்ம சாந்திக்காக இறைவனை இறைஞ்சிநிற்கின்றோம்.

**238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.**
**இயக்குநர், அங்கத்தவர்கள், திருமறைக்கலாமன்றம்.**

**குறிப்பு - இன்று பி.ப. 1.30 மணியளவில் அன்னாரின் பூதவுடல் யாழ். திருமறைக்கலாமன்றத்தில் வைக்கப்பட்டு அஞ்சலி நிகழ்த்தப்படவுள்ளது. இந் நிகழ்வில் மன்ற அங்கத்தவர்கள் ஆதரவாளர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.**

## மரண அறிவித்தல்

**சவரிமுத்து பற்றிமாராஜா (பொன்ராசா)**
(இளைப்பாறிய தபால் ஊழியர்)



சில்லாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சவரிமுத்து பற்றிமாராஜா (பொன்ராசா) நேற்று (16.05.2017) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சவரிமுத்து - அக்னஸ் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கிறிஸ்தோப்பர் - விறிசித்தம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், இசபெலா சுகந்தியின் பாசமிகு கணவரும், சந்துரு, லாவண்யா, சுகன்யா, பிறவீனியா ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான யோசவ், அலோசியஸ் மற்றும் யோண் ஒப் ஆர்க், வுளோறிமண்ட், ராணி, Fr. பீற்றர் பொன்கலன், ஜெகநாதன், காலஞ்சென்ற அன்ரன் பிரான்சிஸ் மற்றும் ஜொய்சி ஆகியோரின் அன்பு சகோதரனும், பிறவுண்சன், பிரசன்நாத் ஆகியோரின் அன்பு மாமனாரும், பெற்றான்யா, அக்னலா, யோசுவா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 19.05.2017 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில்அவரது இல்லத்திலிருந்து சில்லாலை கதிரை மாதா ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலி ஒப்புக் கொடுக்கப் பட்ட பின்னர் கதிரைமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சில்லாலை,**
**பண்டத்தரிப்பு.** (C/29832)(11)
**தகவல்**
**மனைவி, பிள்ளைகள்.**

**077 408 5949, 021 225 1373**

## திருவிழா உபயகாரர் பொதுக் கூட்டம்

எமது ஆலயத்திருவிழா
எதிர்வரும் **30.05.2017** அன்று
ஆரம்பிக்கவுள்ளது.
**21.05.2017 காலை 9.00 மணியளவில்**
**திருவிழா உபயகாரர் பொதுக்கூட்டம்**
**ஆலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.**
அனைத்து உபயகாரர்களையும் தவறாது
கலந்துகொள்ளுமாறு
அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

செயலாளர்
தர்மகர்த்தாக்கள் சபை,
அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோயில், அளவெட்டி.

(சி.எஸ். 4009) (13)

## FLC FRENCH LANGUAGE CENTRE



**பிரெஞ்சு**
**வகுப்புக்கள்**
2006 முதல் இன்றுவரை 1261 மாணவர்கள்

| | | |
|---|---|---|
| இல.40, பலாலி வீதி, (ஆரியகுளம்) 03.06.2017 சனி 8.00 0779 789 456 021 221 7781 | No.181, 1st Floor, பிரதான வீதி, நெல்லியடி 29.05.2017 பி.ப. 4.00 021 320 2973 | IELTS Life Skills Al, B1 வகுப்புக்களும்.... |

(சி.29797)(13) (இலுப்பையடி சந்திக்கு அண்மையில் கராஜ் முன்பாக)

## காணி குத்தகைக்கு

காங்கேசன்துறை வீதியில், யாழ்ப்பாணம்
முட்டாஸ் கடை சந்திக்கு அருகில் சுமார் நிலப்பரப்பு
இரண்டரை (நிலப்பர இலா $2\frac{1}{2}$) கொண்ட காணி
குத்தகைக்குக் கொடுக்கப்படவுள்ளது. வர்த்தக
கட்டடம் கட்டிக் கொள்ளக் கூடியவர்கள் மட்டுமே
கீழ்க் காணும் தொலைபேசி இலக்கத்திற்குத்
தொடர்புகொள்ளவும்.

**தொடர்பு: 076 981 1472**

## அறிவித்தல்

**பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பம் கோருதல்**
**மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு வடக்குமாகாணம்**

வடக்குமாகாண பொதுச்சேவையின்
முன்பள்ளி ஆசிரியர் சேவையின் தரம் - III பதவிக்கு
ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சை -2017

தமிழ்/சிங்களம் மொழி மூலம் மேற்படி பதவிக்குரிய போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் வடக்குமாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் கோரப்பட்டுள்ளது. இப் பதவிவெற்றிடங்கள் திறந்த போட்டிப் பரீட்சை மூலம் நிரப்பப்படும். இவ் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித்திகதி 2017.06.16 ஆகும்.

விண்ணப்பதாரிகள் www.np.gov.lk → Recruitment and Exam → Advertisement என்ற வடக்குமாகாண இணையத்தளத்தில் மேலே குறிப்பிடப்பட்ட பதவிகளுக் கான ஆட்சேர்ப்புத் தகவல்களையும், தகைமைகளையும் பார்வையிட்டு தகைமையுடையவர்கள் அம் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைவாக விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

**ரூ. வரதலிங்கம்**
**செயலாளர்,**
**மாகாணபொதுச் சேவை ஆணைக்குழு, வடக்குமாகாணம்.**
**16.05.2017**

## மரண அறிவித்தல்

**அருமைநாயகம் தயானந்தன்**
(முன்னாள் பேராயரின் செயலாளர் - (CSI)



அளவெட்டி, டச் வீதியைப் பிறப்பிடமாகவும், ஏழாலை வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட அருமைநாயகம் தயானந்தன் 14.05.2017 ஞாயிற்றுக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஜேக்கப் செல்வநாயகம் அருமைநாயகம், திருமதி மேரி அன்னபூரணம் அருமைநாயகம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற திருமதி சுகிர்தரத்தினம்மாவின் அன்புக் கணவரும், ஜோய் இம்மானுவேல் என்பவரின் அருமைத் தந்தையும், திருமதி கிருஷாந்தியின் மாமனும், மத்தியூ, மெலானி (கனடா) ஆகியோரின் அன்புப் பாட்டனும், காலஞ்சென்ற திருமதி லீலா செல்லத்துரை, செல்வி கமலாதேவி அருமைநாயகம், திருமதி விமலா ஈஸ்வரன், சித்திரரஞ்சன், அருமைநாயகம் (அமெரிக்கா) ஆகியோரின் அன்பு சகோதரனும், D.S.செல்வதுரை, மோசஸ் ஈஸ்வரன், திருமதி றோகினி சித்திரரஞ்சன், காலஞ்சென்ற விக்ரோறியா றஞ்சிதம்மா, அருள் ராசமலர், விக்ரர் கனகசுந்தரம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதி வழியனுப்பும் வழிபாடு இன்று (17.05.2017) புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு ஏழாலை வடக்கு "ராஜஸ்தான்" இல்லத்தில் நடைபெற்று கிறிஸ்து அரசர் ஆலயக் கல்லறைத் தோட்டத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ள வும்.

**ஏழாலை வடக்கு,**
**ஏழாலை.** (AJA CS 4000)
**தகவல்**
**மகன் - குடும்பத்தினர்.**

## நாயுடன் மோதுண்டு இருவர் படுகாயம்

அளவெட்டி, மே.17

மோட்டார் சைக்கிளுக்கு குறுக்காக நாய் பாய்ந்ததால் ஏற்பட்ட விபத்தில் 2 பேர் படுகாயமடைந்து தெல்லிப்பழை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்றது.

ஏழாலைப் பகுதியைச் சேர்ந்த இருவர் காங்கேசன்துறை தல்செவன விருந்தினர் விடுதிக்கு சென்றுவிட்டு வீடு திரும்பிய போது, அவர்களின் மோட்டார் சைக்கிளுடன் நாய் குறுக்காக வந்து மோதியது. இருவரும் மோட்டார் சைக்கிளிலிருந்து தூக்கி வீசப்பட்டு படுகாயமடைந்தனர்.

அவர்கள் தெல்லிப்பழை ஆதாரவைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். ஏழாலை மயிலங்காட்டைச் சேர்ந்த சந்திரகுமார் துஸ்யந்தன் (வயது -22), பரலோகசிங்கம் ஐங்கரன் (வயது -24) ஆகிய இருவருமே படுகாயமடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-10-36)

## கடை வாடகைக்கு

புதுக்குடியிருப்பு சந்தியில் இருந்து 300M
தொலைவில் கந்தசாமி கோயில் வீதியில்
அமைந்துள்ள இரண்டு கடைகள் வாடகைக்கு
விடப்படும். கடை அகலம் 32 அடி
நீளம் 70 அடி கொண்டுள்ளது.

**தொடர்பு: 077 434 0246**

## அறைகள் வாடகைக்கு உண்டு

தொழில்புரியும் மற்றும் கல்வி கற்கும் பெண்களுக்கு உணவு மற்றும் சகல வசதிகளுடன்கூடிய அறைகள் யாழ். மத்தியில் மாத வாடகைக்கு உண்டு.

**தொடர்புகளுக்கு:- 076 919 8259**

## Double Cab வாடகைக்கு உண்டு

Mitsubishi Worrior, Model Full Auto / AC, Double Cab வாகனம் மாதாந்த வாடகைக்கு கொடுக்கப்படும். அரச / தனியார் நிறுவன மேலதிகாரிகளுக்கு உகந்தது.

**தொடர்பு:- 075 904 8775**

## பெயர்மாற்றம்

பேச்சி அம்மன் கோயிலடி, கோப்பாய் தெற்கைச் சேர்ந்த **வேலுப்பிள்ளை தேவசிகாமணி** ஆகிய நான் (17.05.2017) இன்றிலிருந்து எனது பெயரை **வேலுப்பிள்ளை மனோன்மணி** என்று மாற்றம் செய்வதோடு, சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பம் இடுவேன் என்று அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**- வேலுப்பிள்ளை மனோன்மணி -**

## விஷேட பல் வைத்திய சேவை

- **பல் முக சீராக்கல்** (Consultant Orthodontist)
- **முக சத்திரசிகிச்சை** (Consultant Facio Maxillary Surgeon)

**மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்**

- **மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)**
- **ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்**
- **நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல்** (Crown & Bridges, Implants)
- **வேர்முறை சிகிச்சை** (Root Canal Filling)
- **நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்**
- **பற்களை வெண்மையாக்குதல்** (Vital Bleeching)

**சன்றைஸ் மெடி கிளினிக்**
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 934 7687 (லதா)

**றோயல் மெடிக்கல் சென்ரர்**
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்சினி)

## முகநூலில் அவதூறு பதிவுகள் செய்த இளைஞர்கள் சிக்கினர்

வவுனியா, மே 17
முகநூலில் ஆண்கள், பெண்கள் தொடர்பாக தொடர்ச்சியாக அவதூறுச் செய்திகளை பதிவிட்டு வந்தவர்கள் வவுனியாவில் நடைபெற்ற திருமணம் ஒன்றில் சிக்கிக் கொண்டனர்.
அண்மைக்காலமாக வவுனியாவைச் சேர்ந்த ஆண்கள், பெண்கள் தொடர்பாக முகநூல் கணக்கு ஒன்று அவதூறாகப் பதிவிடப்பட்டுவந்தது. பதிவிடுபவர்கள் தொடர்பாக எந்தத் தகவலையும் பெற முடியாது இருந்தது.
நேற்று நடந்த திருமணம் ஒன்றில் இனந்தெரியாத இருவர் ஒளிப்படம் எடுப்பதை அங்கிருந்தவர்கள் அவதானித்தனர். அவர்கள் மீது சந்தேகம் கொண்ட திருமண வீட்டுக்கு வந்திருந்த ஏனைய இளைஞர்கள் அவர்கள் இருவரையும் பிடித்து உரிய முறையில் விசாரித்தனர். அதன்போதே முகநூலில் பதிவிடும் தகவல் கிடைத்துள்ளது.
இரு இளைஞர்களும் சிக்கிக் கொண்டதை அடுத்து முகநூலில் பதிவிடப்பட்டிருந்த சில அவதூறுப் பதிவுகள் அகற்றப்பட்டன என்று தெரிவிக்கப்படுகின்றது.
இது தொடர்பாக சமூக சேவை அமைப்பின் தலைவருக்குத் தகவல் வழங்கப்பட்டது. அந்த இளைஞர்களிடம் இருந்து தகவல்கள் பெற்றுக்கொண்ட பின்னர் அவர்கள் எச்சரித்து விடுவிக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.
(ற-10)

### வவுனியாவில் அமைக்கப்பட்ட

## புதிய பேருந்து நிலையத்திலேயே சேவைகள் நடத்தப்படவேண்டும்

### வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் தீர்மானம்

வவுனியா, மே 17
கடந்த மார்ச் மாதம் வவுனியா மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி வவுனியா புதிய பேருந்து நிலையத்தில் இணைந்த நேர அட்டவணைப்படி பேருந்து சேவைகள் நடத்தப்பட வேண்டும் என்று வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டது.
வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் அதில் இந்தப் பிரச்சினையைச் சுட்டிக்காட்டினார்.
"அரசதுறையினர், தனியார் துறையினர் ஆகிய இரு தரப்பினருடனும் கலந்துரையாடியே தீர்மானம் எடுக்கப்பட்டது. புதிதாக அமைக்கப்பட்ட பேருந்து நிலையத்தில் வெளியூர், உள்ளூர் பேருந்து சேவைகள் நடத்தப்பட வேண்டும் என்று முடிவு எடுக்கப்பட்டிருந்தது. எனினும் அது இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை. அதை நடைமுறைப்படுத்த வேண்டும்" என்று அவர் வலியுறுத்தினார்.
"மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி தனியார், அரச பேருந்துத் தரப்பினர் எதிர்வரும் 22ஆம் திகதி முதல் இதனை நடைமுறைப்படுத்த வேண்டும். புதிய பேருந்து நிலையம் தொடர்பில் நாளைமறுதினம் வர்த்தமானி அறிவித்தல் வெளியாகும் என்று எதிர்பார்க்கின்றேன். அனைவரும் உடன்பட்டமைக்கு அமைய எதிர்வரும் 22ஆம் திகதி புதிய பேருந்து நிலையத்தை பயன்படுத்துவதை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்" என்று அமைச்சர் ரிசாத் பதியுதீன் தெரிவித்தார். (ற-8,402)

## சிறுப்பிட்டி அ.த.கவில் மாணவர் வரவு வீழ்ச்சி

யாழ்ப்பாணம், மே 17
சிறுப்பிட்டி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் இரண்டாம் தவணை ஆரம்பமானதில் இருந்து மாணவர்களின் வரவு வீழ்ச்சியடைந்துள்ளதுள்ளது என்று கிடைத்த தகவலின் அடிப்படையில் கோப்பாய் பிரதேச செயலகத்தில் நேற்று மாலை கலந்துரையாடல் நடைபெற்றது.
அந்தப் பாடசாலையில் 200 க்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்கின்றநிலையில் இரண்டாம் தவணை ஆரம்பமானதில் இருந்து 100க்கும் மேற்பட்ட மாணவர்கள் பாடசாலைக்குச் சமூகமளிக்கவில்லை.
இந்தப் பாடசாலைக்குப் பிள்ளைகள் செல்லும் பாதை பாதுகாப்பின்மையாக உள்ளது. இதனால் பாடசாலைக்கு எமது பிள்ளைகளை அனுப்ப நாம் விரும்பவில்லை. எமது பிள்ளைகளை வேறு பாடசாலைக்கு மாற்றும்படி வலயக் கல்விப்பணிப்பாளரிடம் கோரியுள்ளோம் என அந்தப் பகுதி மக்கள் கூறினர் எனத் தெரிவிக்கப்பட்டது.
இது தொடர்பாக நேற்று அந்தப் பகுதியில் இருந்து வந்த பெற்றோர்கள், அதிகாரிகளுடன் கலந்துரையாடினர். இது குறித்து கிராமத்துக்கு நேரில் சென்று கருத்துக்களைத் தெரிந்து கொள்வதற்காகக் கோப்பாய்ப் பிரதேச செயலக சிறுவர் நன்னடத்தை பிரிவு நடவடிக்கை எடுக்கவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (த -10)

## எல்லைக் கிராமங்களில் இருந்து அரசியல் பிரதிநிதித்துவம் தேவை

### கிழக்கு மாகாண சபை உறுப்பினர் கலையரசன் தெரிவிப்பு

மட்டக்களப்பு, மே 17
கிழக்கு மாகாணத்தின் எல்லைகளைப் பாதுகாத்துத் தக்கவைத்துக் கொண்டிருக்கும் கிராமங்களில் இருந்து நல்லதோர் அரசியல் பிரதிநிதித்துவம் உருவாக்கப்பட வேண்டும்.
இவ்வாறு கிழக்கு மாகாண சபை உறுப்பினர் த.கலையரசன் தெரிவித்தார்.
துறைநீலாவணை முன்னேற்றமையப்படுத்தல் அமையத்தின் ஏற்பாட்டில் நடந்த சாதனையாளர் கௌரவிப்பு நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
துறைநீலாவணை மக்கள் அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களின் எல்லைகளில் இருந்து கொண்டு அந்த இடங்களின் இருப்பைப் பாதுகாப்பவர்களாகவே உள்ளனர். போர்க்காலம் தொடக்கம் இன்று வரைக்கும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இவ்வாறு இந்த மக்கள் பல இடங்களில் பரந்து வாழ்ந்து கொண்டு இருக்கின்றனர்.
ஒரு பிரதேசத்தினைப் பொறுத்தமட்டில் அரசியல் பிரதிநிதித்துவம் கட்டாயம் இருக்கவேண்டும்.
துறைநீலாவணை கிராமத்தினைப் பொறுத்தமட்டில் சுமார் 60 வருடத்திற்கு முன்னர் இந்த கிராமத்தின் புளியடி எனும் பகுதியில் கிராமத்திற்குள் நுழைந்த இராணுவத்தைத் துரத்தித் துரத்தி அடித்த பெருமை இந்த கிராமத்திற்கு இருக்கின்றது என்றார். (ய-46)



## 82 நாள்களைக் கடந்து தொடரும் போராட்டம்

வவுனியா, மே 17
காணாமல் ஆக்கப்பட்டவர்களை வெளிப்படுத்தக் கோரி வவுனியாவில் நடத்தப்படும் போராட்டம் நேற்று 82ஆவது நாளாகத் தொடர்ந்தது. யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அவர்களுக்கு ஆதரவு வழங்கினர்.
"வவுனியாவில் போராட்டம் நடத்துபவர்களுக்கு ஆதரவு வழங்குவதற்காக யாழ்ப்பாணத்தில் இருந்து வந்துள்ளோம். எங்கள் பிள்ளைகளை விடுவிக்கவே கோருகின்றோம். வீதி வீதியாகப் பெற்றோர்கள் பிள்ளைகளைத் தேடிக் கொண்டிருக்கின்றார்கள். இந்த அரசு ஏன் என்றும் எம்மைக் கேட்கவில்லை. நாம் சாகும் வரை எமது பிள்ளைகளைத் தேடிக் கொண்டிருப்போம்" என்று தெரிவித்தார் காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத் தலைவி திருமதி கமலநாயகி துரைசிங்கம். (ற-5)

## கல்லடி கடற்கரையில் உடலம் மீட்பு

மட்டக்களப்பு கல்லடிக் கடற்கரையில் நேற்றுக்காலை ஆணொருவரின் உடலம் மீட்கப்பட்டது என காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர். நேற்று அதிகாலை கடற்கரையில் உடலம் கரையொதிங்கியதை அவதானித்த மக்கள் பொலிஸாருக்கு தெரியப்படுத்தியுள்ளனர்.
உடலம் தொடர்பான தகவல்கள் தெரியாத நிலையில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற-ய-46)

## வனவளத் திணைக்களத்தால் வீதிச் சீரமைப்புக்குத் தடை

### வவு. மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டு

வவுனியா, மே 17
வவுனியா, மூன்று முறிப்பு வீதிச் சீரமைப்பு, வனவளத் திணைக்களத்தினர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தமையால் இடைநிறுத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.
வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதிலேயே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டது.
"உள்ளூர் சிறுவீதிகள் சீரமைப்பின் கீழ் மூன்றுமுறிப்பு பிரதான வீதிச் சீரமைப்பும் முன்னெடுக்கப்பட்டது. தமது பிரதேசம் ஆக்கிரமிக்கப்படுகின்றது என்று தெரிவித்து வனவளத் திணைக்களத்தினர் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். நீதிமன்றம், சீரமைப்புக்கு இடைக்காலத் தடை பிறப்பித்துள்ளது. பணிகள் இடை நிறுத்தப்பட்டுள்ளன. வழக்கு நிறைவு பெறாத பட்சத்தில் ஆண்டின் இறுதியில் பணம் திரும்பிச் செல்லும் நிலமையே ஏற்படும்.
உள்ளூராட்சித் திணைக்களங்களால் வீதி செப்பனிடப்படுகின்றனவே தவிர அந்த வீதியை நாம் ஆக்கிரமிக்கவில்லை. நாங்கள் செப்பனிட்டு மக்கள் பயன்பாட்டுக்கே வழங்குகின்றோம். எமது பணியை செய்யமுற்பட்டமையால் நாம் இன்று சட்டத்தின் பார்வையில் குற்றவாளிகளாக்கப்படும் நிலமையும் காணப்படுகின்றது " என்று உள்ளூராட்சித் திணைக்களத்தினர் சுட்டிக்காட்டினர்.
"பிரதான பாதையின் சீரமைப்புக்கு நாம் ஆட்சேபனை தெரிவிக்கவில்லை. காடுகளை வெட்டி மேற்கொள்ளும் பணிக்கே சட்ட நடவடிக்கை எடுக்கப்படுகின்றது" என்று வனவளத் திணைக்களத்தினர் தெரிவித்தனர்.
"குறிப்பிட்ட பகுதியின் வரைபடத்தின் பிரகாரம் அங்கு நீண்டகால வீதிகள் உண்டு. அவை போரால் பாவிக்கப்படவில்லை. வீதியை மூடி மரங்கள் வளர்ந்துள்ள காரணத்தைக்காட்டியே வனவளத் திணைக்களத்தினர் உரிமை கொண்டாடுகின்றனர்" என்று உள்ளூராட்சித் திணைக்களத்தினர் தெரிவித்தனர். (ற-101)

## சிறுதானிய செய்கை பாதிப்பு

யாழ்ப்பாணம்,மே 17
யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட சிறுதானியச் செய்கையில் ஐம்பது வீதமானவை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.
கடுமையான வறட்சியால் சிறுதானியச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளது என்று வடமாகாண பிரதி விவசாயப் பணிப்பாளர் அ.செல்வராசா தெரிவித்தார்.
பயறு, கௌப்பி, நிலக்கடலை, உழுந்து, குரக்கன், எள்ளு போன்ற சிறுதானியங்களே விவசாயிகளால் பயிரிடப்பட்டன. (ற-17)



# பொருத்து வீட்டை திணிக்கவே மணல் விநியோகத்துக்கு தடை

## சிலர் திட்டமிட்டு செயற்படுகின்றனர் என வடக்கு முதலமைச்சர் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், மே 17
பொருத்து வீட்டை எம் மக்கள் மீது திணிக்கவே இங்கு மணல் விநியோகத்துக்குச் சிலர் வேண்டும் என்றுதடை போட முயல்கின்றனர் என்று குற்றஞ்சாட்டுகின்றார் வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்.

வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. அதன் இணைத் தலைவர்களாக வடக்கு மாகாண முதலமைச்சர், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், அமைச்சர் ரிசாத் பதியுதீன், நாடாளுமன்ற உறுப்பினர் கே.கே. மஸ்தான் ஆகியோர் கலந்து கொண்டனர்.

"சிறு வீதிகள் சீரமைப்புக்கு கிரவல் மண் கண்டிப்பாகத் தேவை. வவுனியா மாவட்டத்தில் ஒரு லட்சத்து 20 ஆயிரம் ஏக்கர் வனப் பகுதியை ஆளுகைக்குள் வைத்துள்ள வனவளத் திணைக்களம் காட்டுப் பகுதியில் கிரவல் அகழ்வதற்குத் தடை விதிக்கின்றனர். தனியாருக்குச் சொந்தமான நிலங்களிலும், பிரதேச செயலரின் ஆளுகைக்குட்பட்ட நிலங்களிலுமே தற்போது கிரவல் பெறப்படுகின்றது.

வனவளத் திணைக்களத்தினர் தமது எல்லைகளை நிர்ணயம் செய்யும் சந்தர்ப்பங்களில் பிரதேச செயலர், நீர்ப்பாசனப் பொறியியலாளர் ஆகியோரின் பிரதிநிதிகள் சகிதமே எல்லைக் கற்களை நட முடியும் என்று கடந்த ஆண்டு நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. அதை மீறி அவர்கள் எதேச்சதிகாரமாகச் செயற்படுகின்றனர். அண்மையில் இரு குளங்களை ஆக்கிரமித்து எல்லைக் கற்கள் நட்டுள்ளனர். அந்தக் குளங்களைச் சீரமைப்பதற்குத் தற்போது நிதி கிடைத்துள்ளது. எனினும் குளச் சீரமைப்புக்கு வனவளத் திணைக்களம் தடையாக உள்ளது. அபிவிருத்திக்கு உதவ வேண்டுமே தவிர தடையாக இருக்க முயற்சிக்கக் கூடாது." என்று அதில் கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகன் சுட்டிக்காட்டினார்.

"அந்தப் பிரதேசங்கள் எமது திணைக்களத்துக்குரியது என்று வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. அந்தப் பகுதியில் ஏதாவது நடவடிக்கைகள் மேற்கொள்வதாயின் திணைக்களத்திடம் எழுத்து மூலம் அனுமதி பெற வேண்டும்." என்று வனவளத் திணைக்களத்தின் பிரதிநிதியாகக் கலந்து கொண்டவர் தெரிவித்தார். அதையடுத்து அங்கு வாய்த் தர்க்கம் மூண்டது.

"எவருக்கும் தெரியாது. எவரின் அனுமதியும் பெறாது அனைத்து இடங்களும் உங்கள் திணைக்களத்துக்குரியது என்று எவ்வாறு அறிவித்தல் விடுத்தீர்கள்?. குளங்களுக்குள்ளும் எல்லைக் கற்களை நட்டுவிட்டு பணி செய்வோரைக் கைது செய்தால் எவ்வாறு பணியாற்றுவது?. இவற்றை அனுமதிக்க முடியாது என்றால் திணைக்களம் அதனை எழுத்து மூலம் சமர்ப்பிக்க வேண்டும்." என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகன் குறிப்பிட்டார்.

இந்த விடயத்தை முடிவுக்குக் கொண்டு வந்து கருத்துத் தெரிவித்த வடக்கு முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன், "அபிவிருத்திக்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். அனுமதிக்க முடியாது என்று கூறுவதானால் அந்த விடயங்களை எழுத்து மூலம் சமர்ப்பியுங்கள். மணல் விடயமும் இவ்வாறுதான் தடுக்கப்படுகின்றது. பொருத்து வீட்டைத் திணிக்கவே மணல் விநியோகம் தடுக்கப்படுகின்றது"- என்றார்.

(ற -101)



## மட்டக்களப்பு வானூர்தி தளத்தில் தனியார் வானூர்திக்கு அனுமதி

மட்டக்களப்பு, மே17
இதுவரை காலமும் இராணுவ வானூர்திகளுக்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டு வந்த மட்டக்களப்பு வானூர்தி தளமானது இந்த மாத இறுதியிலிருந்து தனியார் மற்றும் வர்த்தக நோக்கிலான ஜெட் வானூர்திகள் தரையிறங்குவதற்கு அனுமதிக்கப்படவுள்ளது என சிவில் விமான அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் எச்.எம்.ஏ. நிமலசிறி தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது
தற்போது இலங்கை வான் படையின் கட்டுப்பாட்டிலுள்ள இந்த வானூர்தி தளமானது அமைச்சரவை அங்கீகாரத்தின்படி 2016ஆம் ஆண்டு ஜூலை முதலாம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் இம்மாதம் 31ஆம் திகதிமுதல் நடைமுறைக்கு வரும் வகையில் சிவில் விமான அதிகாரசபைக்கு கையளிக்கப்பட வேண்டும்.

இலங்கை வானூர்தி சேவை நிறுவனம் இதன் பராமரிப்பைப் பொறுப்பேற்கவுள்ளது.
மட்டக்களப்புவானூர்தி தளமானது ஜெட் மற்றும் 50 ஆசனங்களைக் கொண்ட வானூர்திகளை உள்வாங்கும். இதன் ஓடு பாதை 1200 மீற்றர் நீளமானது - என்றார்.

(ற - ய.46)

## தரமற்ற அமைச்சுகளை வழங்கினால் ஏற்கோம்

### ஐக்கிய தேசிய கட்சி திட்டவட்டம்



கொழும்பு, மே 17
அமைச்சரவை மாற்றத்தின்போது தரமற்றஒன்றுக்கும் உதவாத அமைச்சுக்கள் தமக்கு வழங்கப்பட்டால் அவற்றை ஏற்கப் போவதில்லை என்று ஐக்கிய தேசிய கட்சி தெரிவித்துள்ளது.

விரைவில் இடம்பெறவிருக்கும் அமைச்சரவை மாற்றம் தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜயசிறி கருத்து தெரிவிக்கும்போதே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
இந்த மாதம் 18ஆம் திகதி தொடக்கம் 25 ஆம் திகதிக்குள் அமைச்சரவை மாற்றம் ஒன்று இடம்பெறக்கூடும் என்று சொல்லப்படுகிறது.

அந்த மாற்றத்தை நாம் வரவேற்கிறோம். ஆனால், எமக்கு வழங்கப்பட்டிருக்கும் அமைச்சுக்களில் மாற்றம் செய்யப்பட்டாலும் பரவாயில்லை. அந்த மாற்றம் நியாயமானதாக இருக்க வேண்டும்.

தரமற்ற, ஆக்கபூர்வமான சேவைகள் எவையும் செய்ய முடியாத அமைச்சுக்கள் வழங்கப்பட்டால் அவற்றை நாம் ஏற்கமாட்டோம். ஒருமித்த எதிர்ப்பை நாம் வெளியிடுவோம்.

சில அமைச்சர்களின் திறமையற்ற செயற்பாடுகள் காரணமாகவே இந்த மாற்றம் செய்யப்படவுள்ளது என்று சிலர் கூறுகின்றனர். அந்த அமைச்சர்கள் எமது கட்சி அமைச்சர்கள்தான் என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

நாட்டின் அபிவிருத்தியை நோக்கிய எமது செயற்பாட்டை விரும்பாத வர்கள் தான் இவ்வாறு கூறு கின்றனர்.

எமது திட்டம் வெற்றியளிக்கும்பட்சத்தில் ஆட்சியைப் பிடிக்கவே முடியாது என்ற உண்மையை அவர்கள் உணர்ந்துள்ளமையே இதற்குக் காரணம் - என்றார்.

(கு -3)

## மட்டு. சமுர்த்தி வங்கிகளில் 270 கோடி ரூபா தேக்கம்

### யோகேஸ்வரன் எம்.பி.தெரிவிப்பு



செங்கலடி, மே 17
மட்டக்களப்பு மாவட்டத்தில் சமூர்த்தி சுயதொழில் திட்டத்திற்கு வந்த உதவிகள் சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்படுகின்றனவா என மீளாய்வு செய்யவேண்டிய நிலை உருவாகியுள்ளது. 270கோடிரூபாதொகை மதிப்பீடுடைய மக்களின் பணம் மாவட்டத்திலுள்ள சமுர்த்தி வங்கிகளில் தேங்கிக் கிடக்கிறது.

இவ்வாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் தெரிவித்தார்.

ஏறாவூர்ப்பற்று பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் மாலை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. அதில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:
"மட்டக்களப்பு மாவட்டத்தில் வறுமை 20.6 சதவீதமாகக் காணப்படுகிறது. வறுமை ஒழிப்பு திட்டத்திற்காக சுய தொழில் கடன் வங்குவதற்கான 2ஆயிரத்து 700 மில்லியன் ரூபா நிதி சமுர்த்தி வங்கியில் உள்ளது. இந்த நிதியில் 80 சதவீதத்தை மக்களுக்கு கடனாக வழங்க வேண்டும். ஆனால் 53 சதவீதம் மாத்திரமே இது வரை வழங்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக மாவட்டத்தில் அதிக வட்டிக்கு நுண் கடன் பெறுவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. மக்கள் பயன்பெறும் வகையில் நிதியை நான்கு சதவீத வட்டிக்கு வழங்கவேண்டும். மக்கள் சுயதொழில் செய்வதன் மூலம் கடனை மீளச் செலுத்துவார்கள். மாவட்டத்தில் மக்களுக்கான திட்டங்கள் சரியான முறையில் நடைமுறைப்படுத்த வேண்டும்" - என்றார்.

கிராமிய பொருளாதார அலுவல்கள் பிரதியமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர்அலி, மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ச.வியாழேந்திரன் ஆகியோரின் இணைத் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் நாடாளுன்ற உறுப்பினர்களான சீ.யோகேஸ்வரன், ஞா.ஸ்ரீநேசன், கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் கி.துரைராஜசிங்கம், உட்பட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

(ற - ய. 47)

சமூக சேவைகள் திணைக்களம், வடமாகாணம்
பெறுகைகளுக்கான அழைப்பு

**கைதடி அரச முதியோர் இல்லத்திற்கான புதிய உலர் உணவு, மரக்கறிகளும் பழங்களும், மாமிச உணவு, பொதியிடப்பட்ட உணவுப் பொருள்கள், வெதுப்பக உணவு, பால் மற்றும் தொற்றுநீக்கி பொருள்கள் விநியோகம்-2017/18**

1. வடமாகாண சமூகசேவைகள் திணைக்களத்தின் பெறுகைகள் குழுத் தலைவர் தகுதியான. தகைமை வாய்ந்த புதிய உலர் உணவு. மரக்கறிகளும். பழங்களும். மாமிச உணவு. பொதியிடப்பட்ட உணவுப் பொருள்கள். வெதுப்பக உணவு. பால் மற்றும் தொற்று நீக்கிப் பொருள்கள் விநியோகத்தர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட பெறுகைகளினைக் கோருகின்றார்.
2. விலைக்கேள்விதாரர் உலர் உணவு விநியோகம் தொடர்பில் வியாபார பெயர் பதிவினையுடைய ஒரு நபராக அல்லது நிறுவனமாக இருத்தல் வேண்டும்.
3. யாழ்ப்பாண மாவட்டத்தில் தலைமை அலுவலகம் அல்லது கிளையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
4. விலைமனுதாரர் கேள்வி கோரப்படும் திகதியில் அங்கீகரிக்கப்பட்ட அரச நிறுவனங்களுக்கான உணவு வழங்கல் சேவையில் மூன்று (03) வருடத்துக்குக் குறையாத முன் அனுபவத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
5. பொருத்தமான கேள்விவைப்புபணம் செலுத்தப்பட்டமை பெறுகைகளுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
6. கேள்வி சமர்ப்பிப்பில் நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர் இத்திணைக்களத்தில் கிடைக்கும் "Application for Bid Documents" என்ற படிவத்தினைப் பூர்த்தி செய்து பெறுகைக்கு மீளளிக்கப்படாத வைப்பாக ரூபா. 3,000 காசாக செலுத்தி தமிழ் மற்றும் ஆங்கில மொழியிலான பெறுகைப் பத்திரங்களை அலுவலக நாள்களில் 18.05.2017 தொடக்கம் 07.06.2017 வரையான காலப்பகுதியில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். மேலும் 31.05.2017 முற்பகல் 10.00மணிக்கு திணைக்களத்தில் இடம்பெறும் விலைக்கேள்விகள் தொடர்பான தெளிவுபடுத்தல் கூட்டத்திலும் கலந்துகொள்ளலாம்.
7. "Diet Supply -2017/18, Elders Home Kaithady, Reference No NP/24/2/3/Food/2017 - 2018" என்ற விவரம் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும். முத்திரையிடப்படாத விவரம் குறிப்பிடப்படாத மற்றும் தாமதமான விண்ணப்பங்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.
8. விலைக்கேள்விகள் 09.06.2017ஆம் திகதி பிற்பகல் 14.00 மணிக்கு முன்பதாகப் பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாக இவ் திணைக்கள பணிப்பாளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் இடுவதன் மூலம் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். இவ்விலைக் கேள்விகள் 09.06.2017 ஆம் திகதி பிற்பகல் 14.00 மணிக்குத் திறக்கப்படும்

**வனஜா செல்வரட்ணம்.தலைவர்,
திணைக்களபெறுகைகள் குழு,
சமூகசேவைகள் திணைக்களம் வ.மா
கண்டிவீதி, கைதடி.**

தொலைபேசி: 0213202464 தொலைநகல்: 0212231725
மின்னஞ்சல்: ssdeptnp@gmail.com (C/29820)(11)

# ஆஸி. கூட்டு முகவர் அதிரடிப்படைக் குழு இலங்கைக்கு வருகை

கொழும்பு.மே 17
ஆஸ்திரேலியாவின் கூட்டு முகவர் அதிரடிப்படையின் தளபதியான எயர் வைஸ் மார்ஷல் ஸ்டீபன் ஒஸ்போர்ன் தலைமையிலான குழுவினர் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர். அவர்கள் பாதுகாப்பு அமைச்சின் முக்கிய அதிகாரிகளைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தினர்.

பாதுகாப்பு அமைச்சில் நேற்று இடம்பெற்ற இந்தச் சந்திப்பில், இலங்கை சார்பாகப் பாதுகாப்புச் செயலர் கருணாசேன ஹெட்டியாராச்சி, இலங்கைக் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ரவிந்திர விஜேகுணரத்ன, தேசிய புலனாய்வுப் பிரிவின் தலைவர் சிசிர மென்டிஸ், கடற்படை நடவடிக்கைப் பணிப்பாளர் றியர் அட்மிரல் பியல் டி சில்வா, கடலோரக் காவல்படையின் தளபதி றியர் அட்மிரல் சமந்த விமலதுங்க, பாதுகாப்பு அமைச்சின் இராணுவ இணைப்பதிகாரி, பிரிகேடியர் ரணவக்க ஆகியோர் கலந்து கொண்டனர். ஆஸ்திரேலியக் குழுவில், எயர் வைஸ் மார்ஷல் ஸ்டீபன் ஒஸ்போனுடன், கடல்சார் எல்லைக் கட்டளைப் பீடத்தின் பிரதித் தளபதி ஜோ குறூக்ஸ், இலங்கைக்கான ஆஸ்திரேலியத் தூதுவர் பிரைஸ் ஹட்சிசன் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்தச் சந்திப்பின் போது, மனிதக் கடத்தல் உள்ளிட்ட நாடு கடந்த குற்றங்களுக்குஎதிராகஇரண்டு நாடுகளும் இணைந்து செயற்படுவதை உள்ளடக்கிய இருதரப்பு ஒத்துழைப்புத் தொடர்பாக விரிவான பேச்சுக்கள் இடம்பெற்றன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)



## சரணாலயங்களில் குடியமர்வோர் தொடர்பில் விசாரணை



கொழும்பு.மே 17
சரணாலயங்களில் அனுமதியின்றி குடியமர்வோர் மற்றும் பயிர்ச் செய்கைகளில் ஈடுபடுவோர் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்படும் என்று வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் டபிள்யூ. எஸ் .கே. பத்திரத்ன தெரிவித்தார்.

அதற்கான அமைச்சரவை அனுமதி பெறப்பட்டுள்ளது.

வனஜீவராசிகள் திணைக்கள சரணாலயங்களில் ஏற்கனவே குடியமர்ந்துள்ளவர்கள் மற்றும் பயிர்ச் செய்கைகளில் ஈடுபடுகின்றவர்கள் தொடர்பில் இதன்போது மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படும்.

இந்த விசாரணைகளை மேற்கொள்வதற்காகக் குழுவொன்றும் நியமிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார். (ஐ)

# இலங்கையின் அபிவிருத்திக்கு சீனா முழுமையான ஆதரவு வழங்கும்

*அந்த நாட்டு அரச தலைவர் உறுதி*



கொழும்பு.மே 17
துறைமுகங்கள் மற்றும் கப்பல் துறை உள்ளிட்ட இலங்கையின் அனைத்து அபிவிருத்தி முயற்சிகளுக்கும் சீனா முழுமையான ஆதரவை வழங்கும். இவ்வாறு சீன அரச தலைவர் ஷி ஜின்பிங் உறுதியளித்தார்.

பீஜிங்கில் நடைபெறும் "ஒரு அணை ஒரு பாதை" உச்சி மாநாட்டில் கலந்து கொண்டுள்ள தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, சீன அரச தலைவரைச் சந்தித்தார். அதன் போது அவர் இந்த வாக்குறுதியை வழங்கினார். 'அனைத்துலக கடல்சார் போக்குவரத்தில் இலங்கை மிக முக்கியமான பங்கை வகிக்கிறது. சீனாவின் கடல்சார் பட்டுப்பாதையில் இலங்கை ஒரு முத்தாக இருப்பதால், அதன் துறைமுகங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. இந்தத் துறையின் அபிவிருத்தியைச் சீனா உறுதிப்படுத்தும்' என்றும் அவர் குறிப்பிட்டார். (ஐ)

# மக்கள் கூட்டத்தை வைத்து ஆட்சியைப் பிடிக்கமுடியாது

*அரச தலைவர் தெரிவிப்பு*



கொழும்பு, மே 17
அரசியல் கூட்டங்களில் கலந்துகொள்பவர்களின் எண்ணிக்கையை வைத்து தேர்தல் பெறுபேறுகள் தொடர்பான தீர்மானத்துக்கு வரமுடியாது. இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

அரலகங்வில விலயாய மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற காணி உறுதிகளை வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த மே தினக் கூட்டத்துக்கு வந்த நபர்களுடைய தலைகளின் எண்ணிக்கையை வைத்துக் கொண்டு அரசுக்கு எதிரான பல்வேறு பரப்புரைகளைக் மகிந்த அணியினர் முன்னெடுத்து வருகின்றனர். அடுத்த நாளே அரசைக் கவிழ்க்க முடியும் என்பது போன்ற கதைகளைப் பரப்பி வருகின்றனர். நான் கடந்த அரச தலைவர் தேர்தலில் கூட்டங்களுக்குச் சென்ற போது, என்னுடைய கூட்டத்தை விடவும், யாருடைய கூட்டத்துக்குச் சனக் கூட்டம் அதிகமாகக் காணப்பட்டது என்பது யாரும் அறிந்திருப்பர். இருப்பினும், யாருடைய வாக்குப் பெட்டி நிரம்பிக் காணப்பட்டது என்பதை நாங்கள் தேர்தல் முடிகளின் போது கண்டோம்.

நாட்டு மக்களின் சமூக குழுக்கள், சமய பின்னணி, கலாசார நிலைமை, இனரீதியான பிரச்சினைகள் என்பவற்றின் அடிப்படையிலேயே தேர்தல் பெட்டிக்குரிய வாக்குகள் விழுகின்றன. அதனால், ஒரு கூட்டத்துக்கு ஆள்களை அதிகம் வரவழைத்து அரசைப் பிடிக்கப் பார்க்கிறார்களள் என்றால் அது மிகப் பெரிய நகைச்சுவையாக இருக்கும் - என்றார். (ஐ -21)

## போர் வெற்றியைக் கொண்டாட மகிந்த அணியினர் தீர்மானம்

கொழும்பு.மே 17
கடந்த 2009 ஆம் ஆண்டு நடைபெற்ற இறுதிப் போரின் போது, இராணுவத்தினர் பெற்றதாகக் கூறப்படும் போர் வெற்றியைக் கொண்டாடுவதற்கு மகிந்த அணியினர் தீர்மானித்துள்ளனர் என்று கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அதற்கமைவாக எதிர்வரும் 18 ஆம் திகதி கண்டியில் சிறப்பு நிகழ்வொன்றை மகிந்த அணியின் ஏற்பாடு செய்துள்ளனர். இந்த நிகழ்வில், போரின்போது அங்கவீனமடைந்த முன்னாள் இராணுவச் சிப்பாய்கள் கலந்து கொள்ளவுள்ளனர் என்றும் அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

## தேரர்களுக்கு வழங்கப்பட்ட கடவுச்சீட்டுக்கள் இடைநிறுத்தம்

கொழும்பு.மே 17
நாட்டின் பௌத்த மாநாயக்க தேரர்களுக்கு வழங்கப்பட்டு வந்த ராஜதந்திரக் கடவுச்சீட்டுக்கள் இடை நிறுத்தப்படவுள்ளன. கொழும்பு அரசால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

அதற்கமைவாக கண்டி அஸ்கிரி, மல்வத்து, ரமன்ய மற்றும் அமரபுர பீடங்களின் மாநாயக்க தேரர்களைத் தவிர்ந்த, ஏனைய பௌத்த மாநாயக்க தேரர்களின் வெளிநாட்டு ராஜதந்திரக் கடவுச்சீட்டுக்கள் இடை நிறுத்தப்படவுள்ளன.

வெளிநாட்டு ராஜதந்திரக் கடவுச்சீட்டு இடை நிறுத்தப்படவுள்ள மாநாயக்க தேரர்கள் தொடர்பிலான பட்டியல் தற்போது தயாரிக்கப்பட்டு வருவகிறது என்று குடிவரவு குடியகழ்வுத் திணைக்களக் கட்டுப்பாட்டாளர் எம்.என். ரணசிங்க தெரிவித்தார். என்ன காரணத்துக்காக இவ்வாறு பௌத்த மாநாயக்க தேரர்களின் ராஜதந்திர கடவுச்சீட்டு இடைநிறுத்தப்படுகின்றது என்பது தொடர்பான தகவல்கள் வெளியிடப்படவில்லை. (ஐ)

# தனியார் கல்வி நிறுவனங்களின் தரத்தை தீர்மானிக்க அதிகாரசபை

கொழும்பு.மே 17
நாட்டின் உயர் கல்வித் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக அரச, தனியார் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுடன் மிகவும் நெருக்கமாக இணைந்து செயற்படுவதற்குத் தயாராக உள்ளோம். அதேவேளை, தனியார் கல்வி நிறுவனங்களின் தரத்தைத் தீர்மானிப்பதற்காகத் தர நிர்ணய அதிகார சபையொன்றை நிறுவுவதற்கும் தயாராகி வருகின்றோம்.

இவ்வாறு மின்சக்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி பிரதி அமைச்சர் அஜித்.பி.பெரேரா தெரிவித்தார்.

தனியார் மருத்துவக் கல்லூரிகள் தொடர்பில் விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் மாநாடு அரச தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதில் பங்கேற்று உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தத் தர நிர்ணய அதிகாரசபை சுயமாக இயங்கும். தனியார் நிறுவனங்களின் தரத்தை ஆராய்வதற்கும், முறைப்படி இயங்காத நிறுவனங்களை மூடுவதற்குமான அதிகாரம் அந்தச் சபைக்கு வழங்கப்படும். இந்த அதிகார சபையை அமைப்பதற்கான நகல் சட்டம் சட்டமா அதிபர் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ள நிலையில், விரைவில் அது நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும்.

சைட்டம் கல்லூரியின் தரம் மற்றும் தனியார் மருத்துவக் கல்லூரி தொடர்பில் எழுந்துள்ள சர்ச்சையையடுத்து, அரசு, தனியார் உயர் கல்வி தொடர்பிலான தனது கொள்கையை மேலும் உறுதி செய்வதற்கு எத்தனித்துள்ளது.

கொள்கை மட்டத்தில் எவ்வாறான தீர்மானத்தை முன்னெடுப்பது என்பது தொடர்பில் அரசு ஆரம்பத்தில் பெரும் குழப்பங்களுக்கு உள்ளாகியிருந்த பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் அனைத்து ஊடகங்களிலும் அறிக்கை வெளியிடப்பட்ட பின்னர் இவ்விடயத்தில் அனைவருக்கும் தெளிவு கிடைத்து ள்ளது.

நெவில் பெர்ணான்டோ போதனா மருத்துவமனையை அரச மருத்துவமனையாக உள்வாங்குவதன் மூலம் அனைத்து மருத்துவன் கல்லூரி மாணவர்களுக்கும் அதில் பயிற்சிகளை வழங்புவதற்கு அரச தீர்மானித்துள்ளது.

அனைத்து பரிந்துரைகளும் நடைமுறைப்படுத்தும் வரை, சைட்டம் கல்லூரிக்குப் புதிய மாணவர்கள் அனுமதிக்கப்படுவதுத் தடை செய்யப்பட்டுள்ளது. அதேபோன்று சைட்டம் கல்லூரியிலிருந்து வெளியேறிய மாணவர்களை முறையான மருத்துவர்களாகத் தெரிவு செய்வதற்கென அரச மருத்துவச் சபை சிறப்புப் பரீட்சையை முன்னெடுக்கும் - என்றார். (ஐ)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# இடறுப்படும் வடமாகாண சபை

வடக்கு மாகாண சபையின் முதலமைச்சருக்கும் ஆளுநருக்கும் இடையில் முறுகல், முட்டி மோதல் தொடங்கியுள்ளது என்று தகவல்கள் வருகின்றன. இதற்கு முன்னரும் இருவருக்கு இடையிலும் இதுபோன்ற உரசல்கள் இருந்தே வந்தன என்றாலும், இவ்வளவு வெளிப்படையாக இருதரப்பினரும் மோதிக் கொண்டதில்லை எனலாம்.

மாகாண சபையின் அதிகாரிகள் சிலருக்கு ஆளுநர் றெஜினோல்ட் கூரே இடமாற்றம் வழங்கியமைதான் இப்போது எழுந்துள்ள பிரச்சினைக்குக் காரணம். ஆளுநர் தன்னிச்சையாக, தான்தோன்றித்தனமாகச் செயற்பட்டுவிட்டார் என்று குற்றஞ்சாட்டப்படுகிறது. முதலமைச்சர் அமைச்சின் செயலாளருக்கு முதலமைச்சரிடம் கேட்காமலேயே இடமாற்றம் வழங்கப்பட்டுவிட்டது என்பதே பிரச்சினைக்குக் காரணம் என்றும் கூறப்படுகிறது.

இருதனிநபர்கள் இடையிலான அதிகாரப் போட்டி போன்று இது தோன்றினாலும் இது மாகாணசபைப் பொறிமுறையில் உள்ள குறைபாடு. கொழும்புக்கும் மாகாணத்திற்கும் இடையிலான அதிகாரப் பிணக்கின் மற்றொரு வடிவம்.

இலங்கை அரசமைப்பின்படி மாகாண சபைக்கெனக் குறித்தொதுக்கப்பட்ட அதிகாரிகளாயினும், அவர்கள் கொழும்பு அரசின் கட்டுப்பாட்டிலேயே சேவையாற்றுகிறார்கள். அவர்கள் மீது மக்கள் பிரதிநிதிகளான மாகாண சபையினருக்கு எந்தவித அதிகாரமும் இல்லை. கொழும்பு அரசின் நேரடிப் பிரதிநிதியான ஆளுநரே அவர்கள் மீதான சகல அதிகாரங்களையும் கொண்டிருக்கிறார். அவருக்கு ஆலோசனைகளையும் பரிந்துரைகளையும் வழங்க மட்டுமே மக்கள் பிரதிநிதிகளால் முடியும்.

மக்கள்பிரதிநிதிகளுக்கு எந்த அதிகாரமும் இல்லாத மாகாண சபை முறைமையே இத்தகைய இழுபறிகளுக்கான அடிப்படை. அப்படிப்பட்ட அதிகாரமற்ற சபையில் தனக்குள்ள கொஞ்சநஞ்ச அதிகாரத்தையும் விட்டுக்கொடுக்காமல் இருப்பதற்கு முதலமைச்சர் முயற்சிக்கிறார் என்று இந்த மோதலை எடுத்துக் கொள்ளலாம்.

தனது பரிந்துரையோ ஆலோசனையோ இன்றி தனது அமைச்சின் செயலாளரை ஆளுநர் இடமாற்றி விட்டார் என்பது, தன்னுடைய அதிகார எல்லைக்குள்ளேயே ஆளுநர் மூக்கை நுழைத்துவிட்டார் என்று முதலமைச்சரை ஆத்திரப்படுத்திவிட்டது. அது நியாயமானதும்கூட. தன்னோடு கலந்தாலோசிக்காது செய்யப்பட்ட இடமாற்றங்கள் என்பதால் அவற்றை ஏற்க முதலமைச்சர் மறுக்கிறார்.

அதேநேரத்தில் இந்த விடயத்தில் கவனிக்கப்படவேண்டிய மற்றொரு விடயமும் உள்ளது. தாபன விதிக் கோவைக்கு முரணாக உரியவர்களை உரிய பதவிகளில் அமர்த்துவதற்குப் பரிந்துரைக்காமல், தமக்கு வேண்டியவர்கள், தேவையானவர்களை, அவர்களின் தகுதிக்கு மீறிய பதவிகளில் வைத்திருக்க வடக்கு மாகாணசபையின் அமைச்சரவை முயற்சிக்கிறது என்கிற குற்றச்சாட்டு அது. இந்த விவகாரமே ஆளுநரை அதிகாரிகள் இடமாற்ற விடயத்தில் நிறுத்திட்டமாகத் தலையிட வைத்தது என்பதையும் மறுக்க முடியாது. அந்த வகையில் ஆளுநர் மூக்கை நுழைப்பதற்கான இடத்தை வழங்கியவர்கள் மாகாண சபையினரே!

எப்படியிருந்தபோதும் முதலமைச்சரின் செயலரை அவரது அனுமதியும் ஆலோசனையும் இன்றி ஆளுநர் மாற்றியிருப்பது ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. மறுபுறத்தில் ஓர் அதிகாரியைக்கூட, தான்விரும்பும் இடத்தில் நியமிக்கவோ இடமாற்றம் செய்யவோ அதிகாரமற்ற முதலமைச்சர், அந்த அதிகாரிகளைக் கொண்டு எப்படிச் செம்மையாக வேலைவாங்க முடியும் என்பதும் நியாயமான கேள்வியே. அதனால் ஆளுநரின் நியமனத்தை அவர் எதிர்ப்பதில் ஒரு நியாயம் உண்டு.

அதே நேரத்தில் தமது விருப்பத்திற்கு ஏற்றபடி, தம்மோடு ஒத்தூதுபவர்களைத்தான் முக்கிய பதவிகளில் வைத்திருக்க முடியும் என்று மாகாண அமைச்சரவை அடம்பிடிக்குமாயின், அது ஊழலும் லஞ்சமும் நிறைந்த நிர்வாகத்திற்கே வழிவகுக்கும். அதிகாரிகள் மீதான அரசியல் பழிவாங்கல்களுக்கும் இடமளித்துவிடும். நிர்வாக அலகைச் சீர்குலைக்கும். ஆக, அதனையும் ஏற்க முடியாது.

எனவே முதலமைச்சரும் ஆளுநரும் இந்தவிடயத்தில் இணங்கிப்போவதன்மூலமும், புரிந்துணர்வை வளர்த்துக் கொள்வதன்மூலமும் மட்டுமே இந்தப்பிரச்சினையைத் தீர்க்கமுடியும். அதனை அவர்கள் செய்வார்கள் என்று எதிர்பார்ப்போம்!



# சீனாவுடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் அம்பாந்தோட்டை துறைமுக ஒப்பந்தம் பற்றிய குறிப்பு

## ரணில் பீஜிங் புறப்பட முன்னர் அரச தலைவர் திட்டவட்டமாகத் தெரிவிப்பு

## மே 19 பிரதமர் நாடுதிரும்பும்வரை அமைச்சரவை மாற்றம் இடம்பெறாது

சண்டே ரைம்ஸ் கட்டுரையிலிருந்து
ரெங்கன்

சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும் ஐ.தே.கட்சிக்குமிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் எதிர்வரும் ஒகஸ்ட் மாதத்துடன் முடிவுக்கு வருவதுடன், அதனைப் புதுப்பிப்பதற்குத் தாங்கள் விரும்ப வில்லையென்று கூறியுள்ள சில சிறிலங்கா சுதந்திரக்கட்சி அமைச்சர்கள், தாம் தமது பதவிகளைத் துறந்து நாடாளுமன்றத்தில் சுயேச்சைகளாக அமர்வதற்கு தீர்மானித்திருப்பதாக தெரிவித்துள்ளனர்.

இதனை நிராகரித்துள்ள அரசதலைவர் சிறிசேன, நாங்கள் தொடர்ந்து ஒன்றாக இருக்க வேண்டும்; அமைச்சரவை மாற்றங்கள் பற்றி தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுடன் பேசியிருக்கிறேன். அதனால்தான் வெசாக் தினத்துக்கு முன்னராக அமைச்சரவையில் மாற்றம் செய்யப்படும் என்று மக்களுக்கு வாக்குறுதியளித்தேன் என்று அவர்களை சமாதானப்படுத்தியிருக்கிறார். நிலைமைகளில் திருப்பங்கள் ஏற்பட்டமை குறித்து தாம் ஏமாற்றம் அடைந்திருப்பதை அவர் மறைக்க விரும்பவில்லை. சுதந்திரக்கட்சி அமைச்சர்களுடன் பின்னர் தனியாகக் கலந்துரையாடிய அரச தலைவர், தீர்க்கமான மாற்றங்கள் செய்யப்பட வேண்டியது அவசியமாகியுள்ளது; மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளில் இருந்து நான் பின்வாங்கப் போவதில்லை; அவைகளை மறந்து போகவுமில்லை என்றார்.

### ஐ.தே.க. அமைச்சர்கள் பற்றிக் கடும் எதிர்ப்பு

ஐ.தே.க அமைச்சர்கள் இருவர் குறித்து சுதந்திரக்கட்சி அமைச்சர்கள் கடும் கண்டனங்களை வெளியிட்டனர். அவர்களில் ஓர் அமைச்சர் இன்றைய பொருளாதாரச் சீர்குலைவுக்குக் காரணமாக இருந்துள்ளார் என்று கூறிய அவர்கள், மற்றவர் வெளிநாட்டு விடயங்களில் தம் போக்கில் நினைத்தபடி முடிவுகளை எடுக்கின்றார்; இவர் அரசதலைவரைக் கலந்தாலோசிக்காமல் பல தீர்மானங்களை எடுத்துள்ளார், என்று தெரிவித்துள்ளனர். இவைகளைக் கவனமாகக் கேட்டுக் கொண்ட அரச தலைவர், இவைகளில் கவனம் செலுத்துவதாகத் தெரிவித்ததுடன், அமைச்சரவையில் மாற்றங்கள் செய்யப்படும்வரை அமைச்சரவைக் கூட்டங்கள் நடைபெறமாட்டாது என்று சமிக்ஞை வெளியிட்டார். செவ்வாய்க்கிழமை சிலமணி நேரம் தாமதமாக அரசதலைவர் செயலகத்தில் வாராந்த அமைச்சரவைக் கூட்டம் ஆரம்பமானபோது, அங்கே சூழ்நிலை

சூடுபறப்பதாகக் காணப்பட்டது. நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க சுதந்திரக் கட்சி அமைச்சர்களைச் சாடிக் கருத்து வெளியிட்டார். தேர்தலின் பின்னர் அரசில் சேர்ந்து கொண்டவர்கள் பதவி மாற்றங்களைப் பற்றிப் பேசக்கூடாது என்றார் அவர். தேர்தலுக்கு முன்னர் அவர்கள் எங்கே இருந்தார்கள்? என்று கேட்டார். இப்போது தான் குற்றச்சாட்டுக்களை வைக்கத் தொடங்கியுள்ளார்கள் என்றார். அடுத்த அரசதலைவர் தேர்தலில் ஐ.தே.க வெற்றி பெறும் என்றும் கூறினார். அப்போது குறுக்கிட்ட சிறிசேன, நீங்கள் (யு.என்.பி) தெளிவான பெரும்பான்மையைப் பெற்றிருக்கவில்லை. தேசிய அரசு ஒன்றை அமைக்க விரும்பினீர்கள். சுதந்திரக்கட்சியினரைக் குறை கூறாதீர்கள், அரசிலிருந்து விலகிக் கொள்ள அவர்கள் விரும்புகிறார்கள், பெரும்பாடுபட்டு நான் அவர்களைச் சமாளித்து வருகிறேன் என்றார். அமைச்சர் சம்பிக்க ரணவக்க குறுக்கிட்டுப் பேசுகையில், செப்ரெம்பருக்குப் பின்னர் நடத்தப்பட இருக்கும் மாகாணசபைகள் தேர்தலின்போது மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்பது தெரியவந்துவிடும் என்றார். கட்சி ஆதரவாளர்கள் மட்டுமன்றி பொது மக்களும் மாறிக் கொண்டுவருகிறார்கள் என்றார்.

அரசியல் பிரச்சினைகள் மட்டுமன்றி இலங்கைக்கும் சீனாவின் 'மேர்ச்சன்ட்ஸ் போர்ட் ஹோல்டிங் நிறுவனத்'துக்கும் இடையேயான முக்கிய ஆவணம்-சலுகை ஒப்பந்தமும் ஒப்புதலுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இந்த ஒப்பந்த வாசகமானது மே மூன்றாம் திகதி இலங்கை துறைமுக அதிகாரசபையின் கருத்தறிவதற்காகக் கொடுக்கப்பட்டிருந்தது. அதன் பதிலறிக்கையானது, ஆவணத்துடன் அமைச்சர் அமுனுகமவுக்கான கடிதம் ஒன்றுடன் தாக்கல் செய்யப்பட்டது. சீனநிறுவனமானது பல காலவரைவுகள், (Terms) சொற்றொடர்கள், சொற்கள் போன்றவற்றை, சலுகை ஒப்பந்தத்தில் சேர்த்திருப்பதாகவும், அவை நியாயப்படுத்தவோ ஏற்றுக் கொள்ளப்படவோ முடியாதவை என்றும் அதிகாரசபை தனது பதிலறிக்கையில் தெரிவித்துள்ளது. தலைமை அமைச்சரின் சீனப்பயண அவசரம் காரணமாக அமைச்சரவையில் ஒப்பந்தம் அங்கீகரிக்கப்பட வேண்டியது அவசியமாயிற்று. துறைமுக அதிகார சபையின் எதிர்ப்புகளிலிருந்தாலும். சலுகை ஒப்பந்தத்தை தற்காலிகமாக அங்கீகரிப்பதென அமைச்சரவை முடிவு செய்தது. சீனாவுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் மட்டுமே தாம் கையெழுத்திடுவார் என்று தெளிவுபடுத்திய தலைமைஅமைச்சர், சலுகை ஒப்பந்தத்தில் அல்ல என்றும் தெரிவித்தார். புரிந்து ணர்வு ஒப்பந்தத்தில் சலுகை ஒப்பந்தம் தொடர்பாக குறிப்புரை மட்டுமே இடம் பெற்றிருக்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

**அரசதலைவரின் கண்டிப்பு**

சிறப்புப்பணிகள் அமைச்சரும், அம்பாந்தோட்டை துறைமுகத் திட்டம் தொடர்பான உபகுழுவின் தலைவருமான சரத்அமுனுகமவால் முறைப்படுத்தப்பட்டிருந்த சலுகை ஒப்பந்தத்தின் முன்கூட்டிய பிரதியானது, அரச தலைவருக்குக் கிடைத்திருக்கவில்லையென்பது இப்போது தெரியவந்துள்ளது. இத்தகைய பின்புலத்தில், வெள்ளிக்கிழமை இரவு தலைமைஅமைச்சர் சீனாவுக்குப் புறப்படவிருந்த நேரத்துக்குச் சற்று முன்னர், அரசதலைவர் சிறிசேன தம்மாலும் அரசின் ஏனைய பிரிவினராலும் கிளப்பப்பட்டுள்ள கவலைகள் முழுமையாக தீர்க்கப்படும்வரை இந்த விடயம் மேலும் தொடர்வதைத் தாம் விரும்பவில்லை என்பதைத் தெளிவுபடுத்தினார். எனவே புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் சம்பிரதாய முறையில்கூட சலுகை ஒப்பந்தம் தொடர்பாக எதுவும் குறிப்பிடப்படத் தேவையில்லை என்றும் அவர் தெரிவித்தார். தலைமைஅமைச்சர் பீஜிங்கிற்கு புறப்படுவதற்குமுன்னர் அரசதலைவருடன் நடந்த கலந்துறையாடலின்போது சலுகை ஒப்பந்தம் தொடர்பாக எதுவித குறிப்புரைகளையும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் தெரிவிக்க வேண்டாம் என்று அரசதலைவர் அழுத்தமாகத் தெரிவித்ததாகவும், அதற்கு தலைமைஅமைச்சர் ஒப்புக் கொண்டதாகவும் விஷயம் அறிந்தவர்கள் தெரிவித்துள்ளனர். அமைச்சரவையில் மாற்றங்கள் செய்வதுபற்றியும் ஆலோசனை நடைபெற்றுள்ளது. அமைச்சரவை மாற்றத்துக்கு தலைமைஅமைச்சர் இணங்கியதுடன் ஐ.தே.க அமைச்சர்களை அங்குமிங்கும் நகர்த்துவதற்குச் சம்மதித்ததாகவும் தெரிகின்றது. மே 19 ஆம் திகதி தலைமைஅமைச்சர் நாடுதிரும்பியதன் பின்னர் இந்த மாற்றங்கள் இடம்பெறவிருக்கின்றன.

> “ தலைமை அமைச்சர் பீஜிங்கிற்கு புறப்படுவதற்கு முன்னர் அரசதலைவருடன் நடந்த கலந்துறையாடலின்போது சலுகை ஒப்பந்தம் தொடர்பாக எதுவித குறிப்புரைகளையும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் தெரிவிக்க வேண்டாம் என்று அரசதலைவர் அழுத்தமாகத் தெரிவித்ததாகவும், அதற்கு தலைமைஅமைச்சர் ஒப்புக் கொண்டதாகவும் விடயம் அறிந்தவர்கள் தெரிவித்துள்ளனர்.




**அம்பாந்தோட்டை துறைமுக ஒப்பந்தம் ஒத்திவைப்பு**

எனவே அரசதலைவர் தலைமை அமைச்சருக்கு விடுத்தபணிப்புரையின்படி, அம்பாந்தோட்டை துறைமுக ஒப்பந்தம் ஒத்திப் போடப்படவிருப்பது நிச்சயமாகியுள்ளது. இலங்கை துறைமுக அதிகாரசபையானது அமைச்சர் அமுனுகமவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் பின்வருமாறு முறைப்பாடு செய்துள்ளது; சலுகை ஒப்பந்தத்தில் காணப்படும் முக்கிய வசனப்பகுதிகளில் அல்லது கருத்துக்களில் சட்டமா அதிபரினால் வழங்கப்பட்டுள்ள அம்சங்கள் கவனத்தில் எடுக்கப்பட்டிருக்கவில்லை. அபிவிருத்தி மற்றும் செயற்பாட்டு உரிமைகள் காலவரையறை, கவனம் செலுத்தல் மற்றும் பங்கு வைத்திருத்தல், இலாபப் பங்கீடு, ஆகியவை இதில் அடங்கும். தனித்துவம், மேற்கொண்டும் அபிவிருத்தி செய்தல், இட குத்தகை, துறைமுகசேவைகள், சுங்கவரி, ஊழியர்கள், வெளியாரைப் பயன்படுத்தல், தொழில் நீக்கம், இழப்பீடு, துறைமுக சொத்தை கையேற்றல் போன்றவையும் இதில் அடங்கும்.

**குத்தகைக் காலம் குறைக்கப்படவேண்டும்**

இலங்கை துறைமுக அதிகாரசபையின் இன்னொரு முக்கிய கவலை என்னவென்றால், சீன நிறுவனத்துடன் பேரம்பேசுபவர்களால் குத்தகைக் காலத்தை 99 வருடங்களில் இருந்து குறைக்கமுடியாமல் இருப்பதாகும். 50 இல் இருந்து 70 வருடங்களாக இது இருக்கலாம் என்பது அரசதலைவரின் பரிந்துரை. பங்கு வகிபாகமானது சீன நிறுவனத்துக்கு 60 வீதமும், மீதி 40 வீதம் அரசுக்கும் இருக்கவேண்டும் என்பது அவர்விருப்பம். சீனநிறுவனத்தின் 60 வீத பங்கை, உள்ளூரில் விற்பனை செய்யக்கூடியதான அம்சங்கள் இருக்க வேண்டும் என்றும் அவர் விரும்புகிறார். இருந்தபோதும் அமைச்சர் அமுனுகமவால் இறுதியாக்கப்பட்டுள்ள வடிவமைப்பில் அரசதலைவரின் விருப்பங்கள் இடம்பெற்றிருக்கவில்லை என்று தெரிகின்றது.

மைத்திரி-ரணில் விக்கிரமசிங்க கூட்டமைப்பு அரசுக்குள் காணப்படும் முரண்பாடுகள் மே 19 ஆம் திகதிக்குப் பின்னர் ஓரளவுக்கு ஒருமுடிவுக்கு வரும் என்று எதிர்பார்க்கலாம். இருந்தாலும் அமைச்சர்கள் மாற்றத்தின் பின்னரும் அதுதொடர்பில் ஏற்படக்கூடிய கருத்து மோதல்கள் சிலகாலத்துக்கு நீடிக்கும் என்றே சோ... ...கின்றது.



# ஆசிரியருக்கான கடிதம்

## சலுகையைப் பயன்படுத்தி பணம் பண்ணுவது நியாயமா?

நாட்டு மக்களுக்குச் சிறந்த சேவை ஆற்றவேண்டுமென்ற எதிர்பார்ப்பில் கட்சி பேதங்களோ, அரசதரப்பு மற்றும் எதிரணித்தரப்பு என்ற பேதங்களோ இல்லாது, நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருக்கும். சகலருக்கும் அரசு பற்பல சிறப்புச் சலுகைகளை ஏற்படுத்திக் கொடுப்பது வழமையான தொன்றே. அதேபோன்று பொது மக்களுக்குச் சிறந்த சேவையாற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பொதுமக்களது கௌரவத்தையும் மதிப்பையும் ஈட்டுவதில் வெற்றிபெறுவதையும் நாம் காண்கிறோம். கூட்டு அரசில் அங்கம் வகிக்கும் கணிசமான தொகையினரான நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசால் தமக்கு வழங்கப்பட்ட தீர்வையற்ற வாகன இறக்குமதிக்கான அனுமதிப்பத்திரச் சலுகையை முறையற்ற விதத்தில் வெளியாருக்குப் பெருந்தொகைப் பணத்துக்கு விலைக்கு விற்றிருப்பது தெரிய வந்துள்ளதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

குறித்த வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான தீர்வை அறவிடப்பட்டிருப்பின் அதனால் அரசுக்குப் பெருந்தொகை நிதி கிட்டியிருக்கும். ஆனால் தமக்குக் கிட்டிய சலுகையைப் பயன்படுத்தி தமக்கென வாகனங்களை இறக்குமதி செய்யாமல், அதற்கான இறக்குமதி அனுமதிப் பத்திரத்தை வெளியாருக்கு விற்றுப் பணம் பண்ணியுள்ளனர். மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்கா வெளியிட்டுள்ள மேற்குறித்த தகவல் உண்மையாயின், அதற்காக குறித்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெட்கித்தலைகுனிய வேண்டியிருக்கும். அதேசமயம் குறித்த நாடாளுமன்ற உறுப்பினர்களை தமக்கான ஆதரவாளர்களாக வைத்துக்கொள்ள வேண்டிய நிலை காரணமாகவே, குறித்த நாடாளுமன்ற உறுப்பினர்களது இத்தகைய முறையற்ற பணத்தேடலைக் கண்டிக்க இயலாது அரசு இந்த விடயத்தில் கண்டும்காணாத போக்கைக் கடைக்கொள்கிறது என்ற குற்றச்சாட்டிலும் நியாயம் இருப்பதாகத் தோன்றுகிறது. எது எப்படியோ, குறிப்பிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மக்கள் பிரதிநிதிகளாக இருந்து நாட்டு மக்களுக்குச் சேவையாற்றும் தகமையைவிட வர்த்தகர்களாக இருந்து பணம் பண்ணும் அருகதையே உண்டு எனக் கொள்வதில் தப்பில்லை. இதில் வேடிக்கை என்னவென்றால், மாகாணசபைகளது உறுப்பினர்களுக்கும் மேற்குறித்த சலுகை வழங்கப்படும் ஏது நிலை இருப்பதால், நாடாளு மன்ற உறுப்பினர்களது மேற்குறித்த செயற்பாடு, மாகாணசபை உறுப்பினர்களுக்கும் வழிகாட்டுமொன்றாக அமைய இடமுண்டு என்பதாகும்.

பூ.பூபாலசிங்கம்
வேலணை




# வர்த்தமானியில் பிரசுரிக்கப்படவுள்ள அரசின் புதிய முதலீட்டு வரிச்சலுகை

### தேசிய வருமான வரிச் சட்டத்தின் கீழாக நடைமுறைக்கு

வர்த்தமானியில் பிரசுரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள புதிய தேசிய வருமான வரி சட்டத்தின் கீழான புதிய முதலீட்டு வரிச்சலுகை முறைமையொன்றினை அரசு அறிமுகப்படுத்தியுள்ளதான தகவல் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி புதிய தேசிய வருமான வரி சட்டத்தின் கீழாக மூன்று மில்லியன் அமெரிக்க டொலர்களுக்குக் குறைவான முதலீடுகள் மற்றும் தொழில் வாய்ப்புகளை உருவாக்கும் அடிப்படைகளை உடையதாக வட மாகாணத்திற்குள் மேற்கொள்ளப்படும் முதலீடுகளுக்கு 200 வீதமான நிவாரண விகிதாசாரங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் ஏனைய மாகாணங்களைப் பொறுத்தவரையிலே இந்தக் கொடுப்பனவானது 100 வீதம் என்ற அடிப்படை விகிதத்தில் வழங்கப்படவுள்ளதாகக் கூறப்படுகிறது.

அரசின் புதிய முதலீட்டு வரிச்சலுகை முறைமை தொடர்பில் தெளிவூட்டும் பத்திரிகையாளர் சந்திப்பு நிகழ்வுகள் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தலைமையில் அண்மையில் இடம்பெற்றிருந்த போதே இந்த விடயங்கள் அவரால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தப் புதிய முதலீட்டு வரிச்சலுகை முறைமை தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

"பாரியளவிலான முதலீடுகளுக்கான சலுகைக் கொடுப்பனவுகள் 100 தொடக்கம் 150 வரையான விகிதத்தில் வழங்கப்படவுள்ளதுடன் துறைமுக அபிவிருத்திக்கான முதலீடுகளுக்காக 100 வீதம் வரையான வரிச்சலுகைகள் வழங்கப்படவுள்ளன.

புதிய தேசிய வருமான வரி சட்டமூலத்தின் கீழ் நிறுவன வருமான வரி வீதம் என்பது 03 பிரிவுகளை உள்ளடக்கியதாக குறித்துக் காட்டப்பட்டுள்ளது.

அத்துடன் வங்கி, நிதி மற்றும் காப்புறுதி துறைகளுக்காக 28 வீதம் வரையிலான வரிச்சலுகையும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

காணி, கட்டடம் மற்றும் பட்டியலிடப்பட்ட பங்குகள் தவிர்ந்த ஏனைய வகையான முதலீடுகளுக்கு தொடர்பற்ற விதத்தில் உள்வருவதான மூலதன லாபங்கள் மீதான வரி விதிப்பனவுகள் 10 வீதமாகவும், கூட்டுமுயற்சி வியாபாரங்கள், மீதான வரி விதிப்பனவுகள் 10 வீதமாகவும் காணப்படுகிறது.

அதேவேளை மதுசாரம், புகையிலை, சூதாட்டம் ஆகியவற்றுக்கு அதிகபட்சமாக 40 வீத வரி விதிப்பனவுகளும் குறித்துக்காட்டப்பட்டுள்ளது



" 2017 ஆம் ஆண்டுக்குரித்தான வரவு செலவுத் திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட அரச சலுகை வட்டிக் கடன் திட்டம் இந்த வருடத்தின் மார்ச் மாதம் 31 ஆம் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

## மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தனிநபர் வருமானம் 0.21 வீதம் வீழ்ச்சி

### மத்திய வங்கி வெளியிட்டுள்ள புள்ளிவிவரங்களில் சுட்டிக்காட்டு

இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தனிநபர் வருமானமானது கடந்த 15 ஆண்டுகளுக்குப் பின்பாக வீழ்ச்சியைச் சந்தித்துள்ளதான தகவல்தரலை இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள புள்ளிவிவரங்கள் வெளிப்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மத்திய வங்கி வெளியிட்டுள்ள 2016ஆம் ஆண்டுக்கான அறிக்கையின் பிரகாரம் கடந்த ஆண்டு இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தனிநபர் வருமானமானது 8 டொலர்களினால் (0.21 வீதம்) வீழ்ச்சியடைந்துள்ளது.

அதேவேளை இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தனிநபர் வருமானம் இறுதியாக 2001ஆம் ஆண்டிலேயே வீழ்ச்சியடைந்திருந்தது.

இந்த சந்தர்ப்பத்திலே குறிப்பாக, 31 டொலர்கள்; வீழ்ச்சியைச் சந்தித்துத் தனிநபர் வருமானமானது 838 டொலர்களாகப் பதிவாகியிருந்தமை நோக்கத்தக்கது. கடந்த ஆண்டு தனிநபர் வருமானம் 3 ஆயிரத்து 835 டொலர்களாக பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## திறமையை வெளிப்படுத்திய வர்த்தகர்களுக்கு விருது

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில் சம்மேளனத்தின் 53 ஆவது ஆண்டு நிறைவுவிழாவும், பத்தாவது கைத்தொழில் ஆற்றல் விருது வழங்கும் வைபவமும் பத்தரமுல்ல வோட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டலில் அண்மையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வின் போது சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில்துறையில் திறமையை வெளிப்படுத்திய வர்த்தகர்களுக்கான பிளாட்டினம் மற்றும் தங்க விருதுகள் அரச தலைவரால் வழங்கி வைக்கப்பட்டது.

துறைசார்ந்த பங்களிப்பிற்கான தனிச்சிறப்பு அங்கீகார விருதை அலோய் ஜயவர்தன என்ற வர்த்தகர் பெற்றுக்கொண்டார்.

நாட்டின் சகல மாகாணங்களையும் சேர்ந்த சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில் முயற்சியாளர்களை அங்கீகரிக்கும் வகையில் இந்த விருதுகள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் அமைச்சர்கள் ரவி கருணாநாயக்க, ரிசாத் பதியுதீன், பைஸர் முஸ்தபா, சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் சம்மேளனத்தின் தலைவர் மொஹைதீன் காதர் ஆகியோர் கலந்துகொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சிலிம் வர்த்தக நாம சிறப்பு விருதை களனி கேபிள்ஸ் பெற்றுக்கொண்டது

இலங்கையின் பாதுகாப்பான இலத்திரனியல் மற்றும் தொடர்பாடல் கேபிள்கள் விற்பனையில் முன்னோடியாக திகழும் களனி கேபிள்ஸ் பி.எல்.சி. அண்மையில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றிருந்த 15 ஆவது சிலிம் வர்த்தக நாமச் சிறப்புகள் விருதுகள் வழங்கல் 2016 நிகழ்வில் சிறந்த பி.ரு.பி வர்த்தக நாம பிரிவின் கீழாக வெள்ளி விருதை பெற்றுக்கொண்டுள்ளது.

அந்தவகையிலே இலங்கை சந்தைப்படுத்தல் கல்வியகத்தினால் வருடாந்தம் சிலிம் வர்த்தக நாமச் சிறப்பு விருதுகள் வழங்கும் நிகழ்வு ஏற்பாடு செய்யப்படுவதுடன் இலங்கைச் சந்தைகளில் சிறப்பாக இயங்கும் வர்த்தகநாமங்களுக்கான கௌரவமும் வழங்கப்பட்டுவருகின்றது.

இந்த விருது தொடர்பில் கருத்துரைத்துள்ள களனி கேபிள்ஸ் பி.எல்.சியின் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான மகிந்த சரணபால,

"இலங்கையின் பாதுகாப்பான மற்றும் முதல் தர இலத்திரனியல், தொடர்பாடல் கேபிள்கள் விற்பனை நிறுவனமாக திகழும் களனி கேபிள்ஸ் முன்னணி வியாபாரங்கள், அரச நிறுவனங்கள் மற்றும் நாட்டின் வெவ்வேறு செயற்றிட்டங்களுக்கான அதிக பங்களிப்பைவழங்குகிவருகிறது. மேற்படி சிலிம் வர்த்தக நாமச் சிறப்புவெள்ளிவிருதைதொடர்ந்து இரண்டாவது ஆண்டாக நாம் வெற்றி கொண்டுள்ளமையானது மகிழ்ச்சி தருகிறது. உள்நாட்டு வியாபாரங்கள் மற்றும் வாடிக்கையாளர் தன்னிறைவு போன்றவற்றுக்கு கிடைத்த கௌரவிப்பாகவே இது அமைந்துள்ளது."

- என்றார்.

களனி கேபிள்ஸ் பி.எல்.சி நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் பொது முகாமையாளர் அனில் முனசிங்க கருத்துத் தெரிவிக்கையில்,

"களனி கேபிள்ஸ் தனது தரம் மற்றும் தயாரிப்புகள் குறித்து அதிகளவு கரிசனை காண்பிக்கிறது. வாடிக்கையாளர் தன்னிறைவுடன் சமூக பொறுப்பு வாய்ந்த நிறுவனமாக களனி கேபிள்ஸ் விளங்குவதை இந்த கௌரவமானது எடுத்துக்காட்டியுள்ளது."

என்றார்.

## நிதிச் சந்தையில் தாக்கம் செலுத்தும் இரகசிய அறிக்கை

### அரச தலைவர் விசாரணை ஆணைக்குழுவிடம் சமர்ப்பிப்பு

நிதிச் சந்தையில் தாக்கம் செலுத்தும் மத்திய வங்கியின் இரகசிய அறிக்கையொன்று மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் சார்பாக ஆஜராகியிருந்த சட்டத்தரணி ஒருவரால் அரச தலைவர் விசாரணை ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி எதிர்காலத்தில் அரச முறிகளை விற்பனை செய்வது தொடர்பில் பின்பற்றப்பட வேண்டிய வழிமுறைகள் தொடர்பிலான தொழில்நுட்ப ஆலோசனைகள் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் ஆகியவற்றினால் தயாரிக்கப்பட்ட இந்த அறிக்கையானது 2016 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் மத்திய வங்கியிடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தமை நோக்கத்தக்கது.




CSE
COLOMBO STOCK EXCHANGE

கொழும்பு பங்குப்பரிவர்த்தனை - 147-2/3, கே.கே.எஸ் வீதி , யாழ்ப்பாணம் - 212221455

16/5/2017
www.cse.lk

பங்குச்சந்தைத் தகவல்கள்

| சுட்டிகள் | | இன்று | நேற்று |
|---|---|---|---|
| ASPI | 32.46 | 6,692.33 | 6,659.87 |
| S&P SL20 | 5.48 | 3,841.92 | 3,836.44 |
| வியாபாரப்புரள்வு | | 1,173,245,180 | 465,439,680 |
| உள்நாடு:- கொள்வனவு | | 409,471,584 | 260,188,848 |
| விற்பனை | | 690,519,810 | 250,056,160 |
| வெளிநாடு: கொள்வனவு | | 763,773,570 | 205,250,832 |
| விற்பனை | | 482,725,312 | 215,383,520 |




| கம்பனி அதிகூடிய பங்குப்பரிமாற்றம் | குறியீடு | இறுதி விலை | பங்குகள் | புரள்வு (Rs) |
|---|---|---|---|---|
| டயலொக் | DIAL.N | 12.20 | 33,238,082 | 402,149,866 |
| ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் | JKH.N | 165.10 | 919,547 | 151,969,136 |
| நெஸ்லே லங்கா | NEST.N | 2,200.00 | 57,000 | 125,400,000 |
| டெக்ஸ்சர்ட் ஜேர்சி லங்கா | TJL.N | 41.50 | 2,092,267 | 85,865,066 |
| பியூப்பிள் லீசியங் | PLC.N | 19.00 | 2,235,816 | 42,456,939 |
| பிறவன்ஸ் இன்வெஸ்மென் | BIL.N | 2.00 | 20,120,412 | 38,009,433 |
| பிறவன்ஸ் கப்பிற்றல் | FLCH.N | 2.50 | 9,874,310 | 23,583,507 |
| சம்பத் வங்கி | SAMP.N | 286.90 | 74,623 | 21,202,228 |
| செலான் வங்கி | SEYB.N | 91.00 | 137,981 | 12,860,535 |
| ஆர் ஐ எல் புறப்பட்டி | RIL.N | 8.50 | 1,273,013 | 10,821,098 |

அறிவித்தல்கள்
முதலீட்டு உத்திகள் பயிற்சிப்பட்டறை
**June 17 & 18**

பங்குலாபம்
பெகஸ் ஹோட்டல் ரூபா. 0.50 - இறுதிப்பங்குலாபம்.

| சந்தைக் குறிகாட்டிகள். | |
|---|---|
| கம்பனிகள் | 296 |
| பரிமாற்றத்தில் | 234 |
| விலை உழைப்பு | 12.7 |
| புத்தகப்பெறுமதி | 1.5 |
| பங்குலாப விளைவு | 2.62 |

# கடைசிக் கட்டத்தில் மோசூல் மீட்புப் போர்



பக்தாத், மே 17
ஈராக்கின் மேற்கு மோசூல் நகரை ஐ.எஸ்.ஐ.எஸ். ஆயுததாரிகளிடம் இருந்து கைப்பற்றும் போர் கடைசிக் கட்டத்தில் உள்ளது என்று பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் ஒளிப்பட ஆதாரங்களுடன் செய்தி வெளியிட்டது.
ஈராக், சிரிய நாடுகளின் சில பகுதிகளைக் கைப்பற்றி அவற்றை ஓர் தனிநாடு என்று அறிவித்திருந்தது ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பு. அந்த அமைப்பின் பிடியில் ஈராக்கின் இரண்டாவது பெரிய நகரமான மோசூல் இருந்தது.
இதன் கிழக்குப்பகுதி கைப்பற்றப்பட்டுவிட்ட நிலையில் மேற்குப் பகுதிக்கான போர் தற்போது நடைபெற்று வருகிறது.
கடந்த சில வாரங்களுக்கு முன்னர், மேற்கு மோசூலில் 7 சதவீதம் மட்டுமே ஐ.எஸ். அமைப்பின் பிடியில் உள்ளது. ஏனைய பகுதிகள் மீட்கப்பட்டுவிட்டன என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.
இந்த நிலையில் மீட்புப் போர் தற்போது கடைசிக் கட்டத்தில் உள்ளது என்றும் இன்னும் சில தினங்களில் அல்லது ஓரிரு வாரங்களில் போர் முடிவுக்கு வரலாம் என்றும் ரொயிட்டர்ஸ் குறிப்பிட்டது.

**ஐ.நா. கவலை**

மேற்கு மோசூல் போர் கடைசிக்கட்டத்தில் மிகத்தீவிரமாக நடைபெறலாம் என்று கருதப்படுகிறது.
ஐ.எஸ்.ஐ.எஸ். ஆயுததாரிகளின் பக்கம் கிட்டத்தட்ட 2 லட்சம் மக்கள் குறுகிய நிலப்பரப்புக்குள் பிடித்து வைக்கப்பட்டுள்ளனர் என்று சொல்லப்படுகிறது. அவர்களை மனிதக்கேடயங்களாக அந்த அமைப்பு பயன்படுத்துவதால் அவர்களின் நிலை தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபை கவலை தெரிவித்தது.

**எங்கிருக்கிறார் பக்தாதி**

ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் தலைவர் அல் பக்தாதி மேக்கு மோசூல் நகரிலேயே உள்ளார் என்று கடந்த இருவாரங்களுக்கு முன்னர் அமெரிக்கா அறிவித்திருந்தது.
இதனால் மோற்று மோசூலில் இருந்து அவர் தப்பிச் செல்ல முடியாதவாறு தற்போது சுற்றி வளைக்கப்பட்டுள்ளார். (ம)

மக்ரோன் மற்றொரு அதிரடி நகர்வு

## தனதுகட்சியைச்சாராதவரை தலைமை அமைச்சராக்கினார்



பிரான்ஸ் நாட்டின் புதிய அதிபராக பதவியேற்ற இம்மானுவேல் மக்ரோன், தனதுகட்சியைச் சாராத ஒருவரை தலைமைஅமைச்சராக அறிவித்தார்.
பிரான்ஸ் அதிபர் பிரான்கோயிஸ்ஹோலண்டேவின் பதவிக்காலம் முடிவதைத்தொடர்ந்துபுதிய அதிபராக 39 வயதேயான மக்ரோன் தெரிவு செய்யப்பட்டார். பிரான்ஸின்புகழ்பெற்றகணிதவியல் வல்லுநர், ஓர் ஆரம்பப்பள்ளி அதிபர், காளைச்சண்டைவீராங்கனை, கணினித்துறை மாணவன், உள்ளூர் விவசாயி, தீவிரவாதத் தாக்குதலில்உயிரிழந்த ஒருவரின் சகோதரி என்று அரசியல் வாடை அறவே இல்லாத சாதாரணங்களைத் தனது வேட்பாளர்களாக நியமித்து நாடுமுழுவதையும்வியப்பில்ஆழ்த்தியிருந்தார் மக்ரோன். தற்போது அவர் தனது கட்சியான லிபரல் சென்டிரிஸ்ட்டில் இருந்து அல்லாமல் மாற்றுக் கட்சியில் இருந்து தலைமை அமைச்சரை நியமித்துள்ளார்.

> “ வலதுசாரி கட்சியான குடியரசுக் கட்சியின் முக்கிய தலைவரான 46 வயது எடோர்ட் பிலிப் என்பவரே மக்ரோனால் பிரான்சின் தலைமை அமைச்சராக்கப் பட்டுள்ளார்.

வலதுசாரி கட்சியான குடியரசுக்கட்சியின்முக்கிய தலைவரான 46 வயது எடோர்ட் பிலிப் என்பவரேமக்ரோனால் பிரான்சின் தலைமை அமைச்சராக்கப்பட்டுள்ளார். இவர் தற்போது நாடாளுமன்ற உறுப்பினராகவும்உள்ளார்என்பதுகுறிப்பிடத்தக்கது. (ம)

## ஸ்டாலின் அவசர ஆலோசனை

தி.மு. கழகத்தின் சட்டமன்ற உறுப்பினர்களுடன் அந்தக் கட்சியின் செயல் தலைவரும் தமிழக சட்டசபை எதிர்கட்சித் தலைவருமான ஸ்டாலின் நேற்று அவ ரச ஆலோசனை நடத்தினார்.
சென்னை அறிவாலயத்தில் நேற்றுக் காலை இந்த அவசர கூட்டம் நடைபெற்றது. தமிழகத்தில் தற்போது நிலவும் குழப்பமான அரசியல் நிலவரம் தொடர்பில் ஆலோசிக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்ட போதிலும் என்னென்ன விவரங்கள் ஆலோசிக்கப்பட்டன என்று தெரிவிக் கப்பட்டவில்லை. (ம)



லொஸ்வெகாஸ்நகரில்நேற்றுமுன்தினம்நடைபெற்றஅமெரிக்கஅழகிகளின்போட்டியில் 25வயதேயானஇளம்விஞ்ஞானிகாராமெக்கல்லோவெற்றிபெற்றார். (ம)

MedExPo
Jaffna 2017 International Healthcare and Medical exhibition
வடக்கின் மாபெரும் சுகாதாரக் கண்காட்சி
இந் நிகழ்வில் கலந்து கொண்டு அனைவரும் பயன்களை பெறலாம்
மே 19 20 21 ஆகிய திகதிகளில்
10.00 am - 6.30 pm
யாழ். வேம்படி மகளிர் கல்லூரி யாழ்ப்பாணம்
+ வைத்தியசாலைகள்
+ மருத்துவ உபகரணங்கள்
+ மருந்து வகைகள்
+ ஆயுர்வேதம் - சித்தமருத்துவம்
+ ஒப்பனையும் அழகுசாதனமும்
+ FMCG
+ உணவு மற்றும் போசாக்கு
+ ஆயுட் காப்புறுதி
+ மருத்துவக் கல்வி
வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகளின் ஏற்பாட்டில் உயிரியல் கண்காட்சி
பிரசித்தி பெற்ற இந்திய மருத்துவர்களினால் மகப்பேறு இல்லாத தம்பதியர்களுக்கு இலவச ஆலோசனைகள் வழங்கப்படுகின்றது
பதிவுகளுக்கு : 0773436927
www.evolutionecs.com
Platinum Sponsor
Official Cosmeceutical Partner
Official Healthcare Partner
Official Event Partner
Official Print Media Partner
Official Electronic Media Partner
Official Digital Media Partner
Event Organized by
Supported by

# இணையத் தாக்குதல் விவகாரம்

*ஆசிய நாடுகளிலும் உணரப்பட்டது*

லண்டன், மே 16
உலகமெங்கும் உள்ள பல்லாயிரக் கணக்கான நிறுவனங்கள் மற்றும் அரச இணையத் தளங்கள் மீது அண்மையில் நடத்தப்பட்ட ரான் சம்வேர் இணையத் தாக்குதல் ஆசியாவைப் பொறுத்த வரை சீனாவிலேயே அதிகம் உணரப்பட்டது என்று முதல்கட்டமாகத் தெரிவிக்கப்பட்ட போதிலும் தற்போது அது இந்தியா, தென்கொரியத, இந்தோனேசியா உள்ளிட்ட நாடுகளிலும் மிகையாக உண ரப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அண்மையில் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் உலகெங்கிலும் உள்ள 99 நாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.
உலகம் முழுவதும் உள்ள பல்வேறு நிறுவனங்களின் மீது இந்த இணையத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. தமது இணையத் தளங்களை வலுவாகக் கண்காணிக்கும் அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன், சீனா, ஸ்பெய்ன் நாடுகளிலும் இந்தத் தாக்கு தல் உணரப்பட்டுள்ளது. சுகாதாரம், கல்வி போன்றவற்றுடன் தொடர்புடைய நிறுவனங்களே தாக்குதலுக்கு பெரிதளவில் இலக்கானதால் ஐ.எஸ்.ஐ.எஸ். ஆயுதக் குழு நடத்தியிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது. தற்காலிகத் தீர்வின் அடிப்படையில் தாக்குதலில் இருந்து மீண்டுள்ள போதிலும் அடுத்த சில தினங்களில் மீண்டும் மீண்டும் சில தாக்குதல்கள் நடத்தப்படலாம் என்று பிரிட்டன் எச்சரித்துள்ளமை குறிப்பி டத்தக்கது. (ம)




# 13 ஆயிரம் கைதிகளைக் கொன்று எரித்தது சிரியா

## 5 ஆண்டுகளில் நடந்தது என்று குற்றம் சுமத்தியது அமெரிக்கா



வொஷிங்டன், மே 17
கடந்த ஐந்து ஆண்டுகளில் 13 ஆயிரத்துக்கும் அதிகமான அரசியல் கைதிகளை கொன்று எரித்தது சிரியா இவ்வாறு குற்றம் சுமத்தியது அமெரிக்கா.
சிரியாவில் கடந்த 2011 ஆம் ஆண்டு முதல் உள்நாட்டுப் போர் நடைபெற்று வருகிறது. அதிபர் அல் அசாத்தின் பதவி விலகலை வலியுறுத்தி தோற்றம் பெற்ற அழுத்தக் குழுக்கள் ஆயுதக் கழுக்களாக மாறியுள்ளது. கிளச்சியாளர்களுக்கு அலெப்போ, டமஸ்கஸ் உள்ளிட்ட முக்கிய நகரங்களிலேயே பெரும் ஆதரவு உள்ளது. அவர்களுக்கு ஆயுத உதவிகளை அமெரிக்கா நேரடியாகவும் மறைமுகமாகவும் செய்து வந்தது.
டமஸ்கசில் சைத்னயா என்ற இடத்தில் மிகப்பெரும் இராணுவச் சிறைச்சாலை உள்ளது. அங்கு கடந்த 5 வருடங்களில் சிறையிடப்பட்டிருந்த அரசியல் கைதிகள் 13 ஆயிரம் பேருக்கு சாவுத் தண்டனை நிறை வேற்றப்பட்டுள்ளது. தண்டனை நிறைவேற்றப்பட்டவர்களின் உடல்கள் சிறை வளாகத்திலேயே எரியூட்டப்படுகின்றன. அதற்கென பிரத்தியேக அறைகளும் அமைக்கப்பட்டுள்ளன. இந்த நடவடிக்கைகளுக்கு ரஷ;யா மற்றும் ஈரான் முழு ஆதரவை வழங்குகின்றன என்று அமெரிக்கா குற்றம் சாட்டியுள்ளது. இது தொடர்பிலான செய்மதிப் படங்களையும் வெளியிட்டுள்ளது.
“சிரியாவின் அரசியல் எதிர்காலம் சிரிய மக்களால் சுதந்திரமாக தீர்மானிக்கப்பட வேண்டும் என்று ட்ரம்ப் நிர்வாகம் எண்ணுகிறது. ஆனால் சிரியர்கள் சுதந்திரமாக செயல்படுவது அசாத் ஆட்சியில் நினைத்து பார்க்க முடியாதது என்று எங்களுக்கு நன்கு தெரியும்.
சிரிய அதிபர் தலைமையில் சிரியாவில் நிலையான மற்றும் பாதுகாப்பான சூழல் ஏற்படாது” என்று அமெரிக்க அதிபரின் உத்தியோகபூர்வ இல்லமான வெள்ளை மாளிகையின் செய்தித் தொடர்பாளர் சீன் ஸ்பைசர் தெரிவித்தார். (ம)



# 330 ஆமைகள் மலேசியாவில் மீட்கப்பட்டன

கோலாலம்பூர், மே 17
மலேசியா நாட்டில், வசீகரிக்கும் தன்மை வாய்ந்த 330 ஆமைகள் நேற்றுமுன்தினம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. பறிமுதல் செய்யப்பட்ட ஆமைகளின் மதிப்பு இலங்கை மதிப்பில் கிட்டத்தட்ட 6 கோடி ரூபா என்று தெரிவிக்கப்பட்டது.
மலேசிய சுங்கத் துறை, கடத்தல் அபாயம் உள்ள ஆமைகளை பாதுகாக்கும் நடவடிக்கையில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது. மடகஸ்கர் தீவில் இருந்து மலேசியாவுக்குக் கடத்த முயன்றபோது கோலாலம்பூர் பன்னாட்டு விமான நிலையத்தில் வைத்து அத்தனை ஆமைகளும் மீட்கப்பட்டன. பறிமுதல் செய்யப்பட்ட ஆமைகள் அனைத் தும் உயிரோடு இருந்தன என மலேசிய சுங்கத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர். (ம)

# பாதுகாப்பு சபையைக் கூட்டுவதற்கு ஜப்பான் அழைப்பு

வடகொரியா நேற்றுமுன்தினம் ஏவுகணைச் சோதனையை நடத்தியதை அடுத்து பாதுகாப்புச் சபையைக் கூட்டுவதற்கு ஜப்பான் அழைப்பு விடுத்துள்ளது.
இந்தப் பரிசோதனையை அடுத்து கொரியத் தீபகற்ப விவகாரம் மீண்டும் அனல் பிடிக்க ஆரம்பித்துள்ளது. உலக நாடுகள் பலவும் வடகொரியா மீது பொருளாதாரத் தடையைவிதிக்கமுன்வரவேண்டும்என்று அமெரிக்கா அழைப்பு விடுத்திருந்தது.
தற்போது ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபைக் கூட்டத்தைக் கூட்ட ஜப்பான் அழைப்பு விடுத்துள்ளது. (ம)



வெனிசுலா அதிபர் நிக்கோலஸ் மதுரோவுக்கு எதிராக அவரது பதவி விலகலை வலியுறுத்தி அங்கு நடைபெற்று வந்த இளைஞர்கள் போராட்டம் தற்போது மிகவும் வலுப்பெற்றுள்ளது. வெனிசுலாவில் வரலாறு காணாத பொருளாதாரப் பின்னடைவு ஏற்பட்டுள்ளதாலும் எதிர்கட்சித் தலைவர் லொபாஸ் சிறையிடப்பட்டுள்ளதாலும் இந்தப் போராட்டம் கடந்த ஒரு மாதத்துக்கும் மேலாக நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

# 30 ஆண்டுகள் பழமையான அனல் மின்நிலையங்களை மூட தென்கொரியா முடிவு

சியோல், மே 17
சுற்றுச்சூழல் மாசுபாட்டைக் கட்டுப்படுத்த 30 ஆண்டுகள் பழமையான 10 அனல் மின்நிலையங்களை மூட தென்கொரியா முடிவெடுத்துள்ளது. தென்கொரிய அதிபர் மூன் ஜெ இன் இந்த அறிவிப்பை வெளியிட்டார்.
தென்கொரியாவின் அதிபராக சமீபத்தில் பதவியேற்ற மூன் ஜெ இன் நாட்டில் நிலவும் கடுமையான காற்று மாசுபாடை குறைப்பதற்காக சில நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். அதன், ஒருபகுதியாக 30 ஆண்டுகளுக்கும் பழமையான நிலக்கரிகள் மூலம் இயங்கும் அனல் மின்நிலையங்களை மூட முடிவெடுத்துள்ளார். நாடுமுழுவதுமுள்ள 59 அனல் மின்நிலையங்களில் வரும் ஜூன் மாதத்திற்குள் 10 அனல் மின்நிலையங்களை மூட திட்டமிட்டுள்ளார். 2020 ஆம் ஆண்டுக்குள் பழமையான அனைத்து அனல் மின்நிலையங்களையும் மூட தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் நேற்று முன்தினம் தெரிவித்தார். (ம)



# மிரட்டுவதை விடுத்து வடகொரியாவை அழைத்துப் பேசுங்கள்

## தீபகற்பப் போர்ப் பதற்றத்தில் முதல்முதலாக புடின் தலையீடு

வடகொரியா நேற்றுமுன்தினம் ஏவுகணைச் சோதனை நடத்தியது. இதற்கு அமெரிக்கா வழக்கம் போல் முந்திக்கொண்டு கண்டனம் தெரிவித்தது. ஐக்கிய நாடுகள் சபையும் வடகொரியாவை கடுமையாகக் கண்டித்தது.
இந்த நிலையில் வடகொரியாவை மிரட்டுவதை விடுத்து அந்த நாட்டுடன் சிறந்த முறையில் பேச்சு நடத்துமாறு ஐ.நா மற்றும் அமெரிக்காவைக் கேட்டுள்ளார் புடின்.
சீனாவில் நேற்றுமுன்தினம் உரையாற்றுகையிலேயே புடின் இவ்வாறு தெரிவித்தார். வடகொரியாவின் ஏவுகணைச் சோதனைகள் தவறானவை. அதற்காக அந்த நாட்டுடன் தொடர்ந்து முருண்படாமல் ஆக்கபூர்வமாகப் பேச்சு நடத்த வேண்டும் என புடின் மேலும் தெரிவித்தார். (ம)



சி.ப.வேந்தன்

பத்து நாடகங்கள், பாடல் இறுவெட்டுக்கள், சுப்ரபாத நடையிலமைந்த பாடல்கள் என ஏராளமான பல படைப்புக்களை உருவாக்கி பாசையூர் அந்தோனியார் கலைக் கழகத்தினால் இரத்தினக்கவி என்ற விருது வழங்கிக் கௌரவிக்கபட்டவர் மூத்த படைப்பாளரான வெ. மிக்கேல். அவருடைய படைப்புலக அனுபவங்கள் பற்றி புதன்பொய்கைக்காகப் பேசத்தொடங்கினேன். மிக அமைதியாக மென்மையான குரலில் அவர் உரையாட ஆயத்தமானார்.

# இப்போதும் மனதில் கற்பனைகள் தோன்றுகின்றன

## எழுத்தாளர் வெ.மிக்கேலுடன் ஒரு சந்திப்பு

**புரட்சிப் படைப்பு**

"கயல்விழி" என்ற புரட்சிப்படைப்பு இந்த மென்மையான மனிதருக்குள் இருந்து வந்ததா? எனும் ஆச்சரியம் எனக்குள் மேலிட, அவர் மிக அமைதியாக தன்னைப்பற்றிப் பேசத்தொடங்கினார்.

நான் எழுத்துத்துறையிலும் நாடகத் துறையிலும் வாறத்துக்கு காரணம் எங்கட ஊர்தான். இங்க எழுத்துத்துறையில பெரியளவில ஆட்கள் இல்லாட்டியும் கலைத்துறையில ஏராளம் பேர் இருந்தார்கள். முன்பெல்லாம் தொடர்ந்து கூத்து, இசை நாடகங்கள் நடந்துகொண்டே இருக்கும். எனக்கு அதில நல்ல விருப்பம் ஆனா விடிய விடிய நித்திரை முழிக்க முடியாததால அவற்றைப் பார்ப்பதில்லை.

அப்படிப் பார்த்த சில நாடகங்களும் என்னை இந்தத்துறைக்குள்ள கொண்டுவந்தன. நான் எந்த நேரமும் எதையாவது கற்பனை செய்து கொண்டிருப்பேன். கற்பனைவளம் கூட. அதால வேலை செய்துகொண்டிருக்கேக்ககூட எதையாவது கற்பனைசெய்துகொண்டுதானிருக்கிறது. அப்பிடி கற்பனையில வாற கவிதை, பாட்டு, கதைகளை பிறகு கொப்பியில குறிச்சுவைக்கத் தொடங்கினன்.

**கடற்தொழிலுக்குச் சென்றேன்**

எஸ்.எஸ் சி படிச்சிட்டு அதுக்குப்பிறகு கடற்தொழிலுக்குப் போக வெளிக்கிட்டன். படிக்கேக்கயே என்னட்டை கற்பனை செய்யிற ஆற்றல் இருந்தது ஆனா ஆரும் அதை கண்டுபிடிச்சு ஊக்கப்படுத்தி வளர்க்கேல்லை. நானும் அதைக் கண்டுகொள்லேல்ல.

கடற்தொழில் செய்யும்போது வலைகள் பழுதுபட்டு அறுந்து போகும். அதை தைக்கேக்க நான் கொப்பியையும் பக்கத்தில வைச்சுக் கொண்டு கற்பனையில வாறதுகள எழுதுவன். அதோட இப்ப தான் இஞ்சின் எல்லாம் ஆனால் அப்ப பாய்மரத்தில தான் தொழிலுக்குப் போறது. நான் அனேகமா சுக்கான் பிடிக்கிற துக்குத் தான் போவன். (துடுப்பு) அதில இருந்தா நல்ல நல்ல சிந்தனைகள் எல்லாம் வரும் கரைக்கு வந்தவுடன எல்லாம் மறந்து போயிடும். (சிரிக்கிறார்)

**கனவு நிஜமானது**

அப்ப அருள்பிரகாசம் என்றவருடைய "சாம்ராட் அசோகா" என்ற நாடகத்துக்கு நான் கொப்பி பார்க்கப் போறது வழக்கமாகும். சில நேரம் சில கட்டங்களையும்(காட்சி) சுவாரஸ்யமா எழுதிக்குடுப்பன் அப்பிடி கொஞ்சங்கொஞ்சமா நாடகத்தில அனுபவம் வரத்தொடங்கிட்டுது. அப்பிடியே தொடர்ந்து இந்த நினைப்போடயே இருந்ததால சரி நானும் ஒரு நாடகம் எழுதுவம் எண்டு வெளிக்கிட்டு முதன்முதலா பலகார வள்ளி என்டு சிரிப்பு நாடகம் ஒன்றை எழுதினன். 1968ம் ஆண்டு. அப்ப எனக்கொரு 23 வயசு இருக்கும். அந்த நாடகம் நல்ல வரவேற்பைப் பெற்று என்னட்டை கனகாலமா இருந்த ஆசையைப் புர்த்தி செய்ததோட ஒரு நம்பிக்கையையும் தந்தது. அதுக்குப் பிறகு கொஞ்சங்கொஞ்சமா நாடகம், பாட்டு, கவிதை என்று கூடுதலா எழுததத் தொடங்கினன்.

தொர்ந்து அம்பிகாபதி(71). மீட்பின் ஒளி(71), புனித செபஸ்தியார்(71), புனித லோறன்ஸ், சாலமோன், புனித அருளானந்தர், கயல்விழி, இருளில் நடந்த மக்கள் ஒளியைக் கண்டனர் என்று இசைநாடகங்கள் எழுதினன். அப்பிடி இசைநாடகங்கள் எழுதும்போது எனக்கிருந்த ஓரளவு இசைஞானமும் விருப்பமும் சேர்ந்து தனியாகப் பாடல்கள் எழுதுற ஆர்வத்தை தூண்ட கிறிஸ்தவ திருவிழாக்கால நடைசாரிப்பாடல்களை எழுத ஆரம்பிச்சன். அதையும் நிறையப் பேர் பாராட்டி ஊக்குவிச்சினம்.

அம்பிகாபதி நாடகம் எல்லாம் நூறு தடவைக்கு மேல போட்டனாங்கள். சில நாடகங்கள் இரண்டு தடவையோடயே நின்றுவிடும். அம்பிகாவதி நாடகத்தை. இங்க மட்டுமில்ல வேற வேற ஊர்களுக்கும் கொண்டுபோய்ப் போட்டது. அப்ப கோயில் திருவிழாக்களில அதுக்கு நல்ல வரவேற்புக் கிடைச்சது. அதுக்குபிறகு இடம்பெயர்ந்து வன்னியில போயிருக்கேக்க என்ர தம்பியின் மகள் பள்ளிக்கூடத்தில ஆசிரியரா இருந்தவா பள்ளிக்கூட விழாவுக்காக நாட்டுக்கூத்து ஒன்று எழுதித்தரச்சொல்லி கேட்க, அப்ப நான் வேற ஒரு விசயமா மன்னாருக்குப் போகேக்க அருளானந்தர் என்ற ஒரு புனிதரின்ட புத்தகம் ஒன்று வாசிக்கக் கிடைச்சது அதை எப்பிடியாவது நாடகமாக்க வேணுமெண்டு நினைச்சுக்கொண்டிருந்தனான். அதால அந்தக் கதையை நாடகமாக்கி வன்னியில் இரண்டு தடவைகள் மேடையேத்தினனாங்கள் மூன்றாம் கட்டையில இருந்து பன்னிரண்டு மைல்களுக்கு அங்கால சைக்கிள்ள விடத்தல்தீவுக்குப் போய் ஆர்மோனியம் வாங்கிக் கொண்டுவந்து நாடகம் போட்டனாங்கள்.

> நான் எழுத்துத்துறைக்குள்ளயும் சரி நாடகத்துறைக்குள்ளயும் சரி வாறத்துக்கு காரணம் எங்கட ஊர்தான். இங்க எழுத்துத் துறையில பெரியளவில ஆட்கள் இல்லாட்டியும் கலைத்துறையில ஏராளம்பேர் இருக்கினம். முன்பெல்லாம் தொடர்ந்து கூத்து, இசை நாடகங்கள் நடந்துகொண்டே இருக்கும். எனக்கு அதில நல்ல விருப்பம் ஆனா விடிய விடிய நித்திரை முழிக்க முடியா ததால பார்க்கிறது குறைவு. அப்பிடி பார்த்த சில நாடகங்களே என்னை இந்தத்துறைக்குள்ள கொண்டுவந்தன.

**இசையும் எழுத்தும்**

நான் கேட்டதையும், என் வாசிப்பு அனுபவத்தையும் வைச்சுக் கொண்டு எழுத்துத்துறைக்குள்ள வந்தனான். நாடகம் எழுத்தேக்க வரையறைகள் இருக்கு அது ஒன்றையும் நான் படிக்கேல ஆனால் ஒரு கற்பனையை மனசுக்குள்ள வைச்சுக்கொண்டு தான் எழுதிறனான். நாடகங்கள் எழுதிற விசயத்தில எனக்கு உதவி செய்தது கொலின்ஸ் தான். புத்தகங்கள், பேப்பரில நாடக, இசை விடயங்கள் வந்தால் அதையும் தேடித்தேடிப்படிச்சுக்கொண்டதால நாடகம் எழுதிறதில பரீட்சயம் வந்தது.

இசைநாடகம் எழுதுறது நிறைய கஸ்டம். இசையை நான் மனதுக்குள்ள முழுமையா இதுதான் மெட்டு என்று எடுத்துக்கொண்டன் என்றால் அதுக்கேற்ற சொற்களைப் போட்டுக்கொள்ளலாம். ஆனாலும் அதுவும் கஸ்டம் தான். எழுத்துக்கு இசை அமைக்குறது கொஞ்சம் சுகம்.

(21 ஆம் பக்கம் பார்க்க)

11



இல்வாழ்வின் மிகப் பெரும் பயனே விருந்தோம் பல்தான் என்கிறது வள்ளுவம். விருந்து போற்றுதலை உணர்ந்த வள்ளுவர், "விருந்தோம்பல் என்று ஓர் அதிகாரத்தையே படைத்துள்ளார். அமிழ்தமாக இருந்தாலும் விருந்தினருக்குக் கொடுத்து விட்டு உண்பதுதான் நமது மரபு என்கிறார். விருந்தினரை நோப்பக் குழையும் அனிச்சம் என்றும் கூறுகிறார்.

# இலக்கியத்தில் விருந்தோம்பல்

எஸ்.மல்லிகா

காதலும் வீரமும் கோலோச்சியிருந்த சங்க இலக்கியத்தில், அன்பும் அறமும் ஓங்கியிருந்தன. ஒருவரையொருவர் பாராட்டுதல், அரவணைத்தல், பகிர்ந்துண்ணல், கலந்துண்ணல் (கூடி உண்ணுதல்) முதலான பண்புகளும் சிறந்திருந்தன. இவற்றை இலக்கியங்கள் வாயிலாக அறியமுடிகிறது. மறத்தமிழர் வீரத்தை மட்டுமன்றி, நெஞ்சின் ஈரத்தையும் எடுத்தியம்பும் தங்கத் தமிழ் எனும் சங்கத் தமிழ் நூல் புறநானூறு. அன்பு, விருந்தோம்பல் பண்பு முதலான நல்ல பண்புகளைக் கற்றுத்தரும் நன்னூல். பிறருக்காக வாழும் வாழ்க்கையின் அர்த்தம் சொல்லும் அறநூல். "உண்டாலம்ம இவ்வுலகம் இந்திரர்" என்ற புறநானூற்றுப் பாடலில், விருந்தினர்களைப் பண்டைத் தமிழர்கள் எந்தளவுக்கு நேசித்தனர் என்பது புலப்படுகிறது.

உண்டால் அம்ம இவ்வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும், இனிதுஎனத்
தமியர் உண்டலும் இலரே; முனிவிலர்;
துஞ்சலும் இலர்; பிறர் அஞ்சுவது அஞ்சிப்
புகழ்எனின் உயிருங் கொடுக்குவர்; பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர்; அயர்விலர்;
அன்ன மாட்சி அனைய ராகித்
தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே.

பிறருக்காக வாழ்பவர்களால்தான் இந்தப் பழமை பொருந்திய உலகம் இன்றும் வாழ்ந்துகொண்டிருக்கிறது. இவர்கள், இந்திரனுக்குரிய அமிழ்தம் கிடைத்தாலும், அது இனிமையானது என்று தனித்து உண்ணமாட்டர்கள்; யாரையும் வெறுக்கமாட்டார்கள்; சோம்பலின்றிச் செயற்படுவார்கள்; பிறர் அஞ்சுவதற்குத் தாமும் அஞ்சுவார்கள்; புகழ்வரும் என்றால் தம் உயிரையே வேண்டுமானாலும் கொடுப்பர்; பழிவரும் என்றால் உலகம் முழுவதும் கிடைப்பதானாலும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்; மனம் தளரமாட்டார்கள்.
இத்தகைய சிறப்புடையவர்களாகித் தமக்காக உழைக்காமல், பிறருக்காக வலிய முயற்சியுடன் உழைப்பவர்கள் இருப்பதால்தான் இவ்வுலகம் இயங்கிக்கொண்டிருக்கிறது என்பது இப்பாடலின் பொருள்.
திருக்குறளில் பல அதிகாரங்களில் விளக்கமாகக் கூறப்பட்டிருக்கும் கருத்துகள் இப்பாடலில் சுருக்கமாகக் கூறப்படிருக்கின்றன. குறிப்பாக, விருந்தோம்பல், அன்புடைமை, வெகுளாமை, அறிவுடைமை, மடியின்மை, தீவினையச்சம், ஊக்கமுடைமை, புகழ், ஈகை, ஒப்புரவு, பண்புடைமை ஆகிய அதிகாரங்களின் மையக்கருத்துகளை இப்பாடலில் காணலாம்.

**வள்ளுவத்தில்
விருந்தோம்பல்**

இல்வாழ்வின் மிகப் பெரும் பயனே விருந்தோம்பல்தான் என்கிறது வள்ளுவம். விருந்து போற்றுதலை உணர்ந்த வள்ளுவர், "விருந்தோம்பல்" என்று ஓர் அதிகாரத்தையே படைத்துள்ளார். அமிழ்தமாக இருந்தாலும் விருந்தினருக்குக் கொடுத்துவிட்டு உண்பதுதான் நமது மரபு என்கிறார். விருந்தினரை நோப்பக் குழையும் அனிச்சம் என்றும் கூறுகிறார். விருந்தோம்பலை இத்தனை சிறப்பாக யாராலும் சொல்ல முடியாது.
விருந்தினர்களாக வருபவர்களைப் பற்றி வள்ளுவர் எதுவும் கூறவில்லை. ஆனால், நம் வீடுதேடி வரும் விருந்தினரை எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் மனமார உபசரிக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்துகிறார். இல்வாழ்க்கை என்பதே விருந்தி னர்களை உபசரிப்பதற்குத்தான் என்பது வள்ளுவர் கோட்பாடு.

`இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு.'

இதில், இல்லறத்தானுக்குரிய தலையாய கடமை என்னவென்று வள்ளுவர் கூறுகிறார்.

விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று.

வந்த விருந்தினர்க்கு வாரி வாரிக் கொடுத்து உபசரித்துக் கொண்டிருந்தால், நம் செல்வம் தேயாதா என்ற சந்தேகம் வரும். கட்டாயம் அப்படி நேராது என அறைகூவுகிறார் வள்ளுவர்.

`வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுதல் இன்று.'

அதுமட்டுமல்ல. மலர்ந்த முகத்துடன் எவனொருவன் விருந்தினரைப் போற்றுகிறானோ, அவன் இல்லத்தில் அகம் மலர்ந்து இலட்சுமி வாசம் செய்வாள் என்கிறார்.

`அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து
நல்விருந் தோம்புவான் இல்.'

விருந்தினரை நன்கு உபசரிப்போனின் வயலில்விதைபோடாமலேபயிர்முளைக்குமாம். அவ்வளவு தூரம் சொல்லி, செலவைப் பற்றிக் கவலைப்படாமல் விருந்துபசாரம் செய் என்கிறார் வள்ளுவர்.

`வித்தும் இடல்வேண்டுங் கொல்லோ
விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலம்.'

சொர்க்கம் செல்வதற்கு எளிதான வழி ஒன்றிருக்கிறது. வந்த விருந்தினரை உபசரித்து, வரும் விருந்தினரை எதிர்பார்த்து நாம் காத்திருப்போமானால், வானகத்துத் தேவர்கள் நம்மை விருந்தினராக ஏற்பார்கள்.

`செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்
திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு!'

செல்வமிருந்தும் வறுமையில் வாடுகிறவர்கள் உண்டு என்றால், வியப்பாக இருக்கிறதா? அப்படிப் பட்டவர்கள் யார் எனக் கூறி நகைக்கிறார் வள்ளுவர். செல்வந்தர்களிலேயே வந்த விருந்தினரை உபசரிக்காத அறிவிலிகள்தான் அத்தகையவர்கள்.

`உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா
மடமை மடவார்கண் உண்டு.'

விருந்தோம்பல் என்பதே ஒரு வேள்விதான். அந்த வேள்வியால் விளையும் பயனைப் பற்றி என்ன சொல்ல? அது வந்த விருந்தினரின் தகுதியைப் பொறுத்தது என்கிறார் வள்ளுவர்.

`இனைத்துணைத் தென்பதொன்றில்லை விருந்தின்
துணைத்துணை வேள்விப் பயன்.'

விருந்தினரை உபசரித்தல் என்ற வேள்வியில் ஈடுபடாமல் தன் பொருளைக் காத்தவர் பின்னர் அந்தப் பொருளையும் இழந்து, பற்றுக்கோடு இல்லாமல் போனோமே என வருந்துவர் என்கிறார் வள்ளுவர்.


`பரிந்தோம்பிப் பற்றேற்றேம் என்பர் விருந்தோம்பி
வேள்வி தலைப்படா தார்.'

அனிச்ச மலர் முகர்ந்து பார்த்தாலே வாடிவிடும்.. விருந்தினர்கள் அனிச்சம் போன்றவர்கள். முகம் வேறுபட்டுப் பார்த்தாலே போதும், தன்மானமுள்ள விருந்தினர் வாடி விடுவார்கள்.

`மோப்பக் குழையும் அனிச்சம், முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து.'


இந்தக் குறளுக்குப் பரிமேலழகர் சொல்லும் உரை மிக அழகானது. தொலைவில் வரும்போதே விருந்தினரை வரவேற்கிறோம் எனும் பொருளில் இன்முகம் காட்ட வேண்டும். அருகில் வந்தபோது அவர்கள் மனங்குளிர இன்சொல் சொல்லி வரவேற்க வேண்டும். பின் அவர்களுக்கு அன்போடு விருந்துபசாரம் செய்ய வேண்டும் என்கிறார் அவர். (சேய்மைக் கண் கண்டுழி இன்முகமும், அதுபற்றி நண்ணிய வழி இன்சொல்லும், அதுபற்றி உடன்பட்ட வழி நன்று ஆற்றலும்... பரிமேலழகர்.) நம் ஆன்மிகம் விருந்துபசரித்தலை உயர்ந்த நெறியாகப் போற்றுகிறது. வையத்தில் மனிதன் வாழ்வாங்கு வாழ்வதற்கான வழிகளை உரைத்த வள்ளுவம், தமிழர்தம் பண்பாட்டின் உச்சமான விருந்தோம்பலையும் சிறப்பித்துக்கூற மறக்கவில்லை.

(தொடரும்....)



# காவியாபிமானி கல்வயல் வே. குமாரசாமி

வை. இராசரத்தினம்



ஈழவளத் திருநாட்டில் யாழ். குடாநாடு பல அறிஞர்களையும் கலைஞர்களையும் துறைசார்ந்த வல்லுநர்களையும் பெற்றெடுத்துக்கொண்ட பெருமையுடை பூமியாக விளங்குகிறது. அதிலும் யாழ்ப்பாண மண்ணில், தென்மராட்சிப் பிரதேசத்தில் கல்வயல் பிரதேசம் கவிஞர்களையும், இசை விற்பன்னர்களையும், சிற்பாசிரியர்களையும், கல்வியாளர்களையும், சைவ ஆசார சீலர்களையும் தோற்றுவித்தது.

இவ்வாறு அமையப்பெற்ற கல்வயல் கிராமத்திலேயே 1944 ஆண்டு தை மாதம் முதலாம் திகதி வேலுப்பிள்ளை தையல் முத்து தம்பதியினருக்கு குமாரசாமி நான்காவது புத்திரனாகப் பிறந்தார். பிறந்த மண்ணுக்கும் தான் சார்ந்த சமூகத்துக்கும் தமிழ் மொழிக்கும் தன்னாலான பங்களிப்பை வழங்கிய பெருமகனாகத் திகழ்கிறார். தான் பிறந்த மண் கல்வயல் என்றும் புனிதமான பூமி என்பதை அறிவுபூர்வமாக உணர்ந்த பின்பும் தனது பெயருக்கு முன்பா கல்வயல் வே.குமாரசுவாமி என ஊரின் சார்புடைய பெயரிட்டுக் கொண்டார். இலக்கிய வாதிகள் கவிஞர்கள் என்போர் கூடுதலாக தாம் அவதரித்த மண்ணை நேசித்து. மக்களை நேசித்து மகிமையடைந்துள்ளனர்.

**கல்வி அறிவின் நாடல்**

கல்வயல் வே.குமாரசாமி தமது ஆரம்பக் கல்வியை அயலிலுள்ள கல்வயல் ஸ்ரீசண்முகானந்த வித்தியாசாலையில் கற்றார். பின்பு உயர் கல்வி கற்பதற்காக சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இணைந்து கொண்டு தனது அறிவை வளர்த்துக் கொண்டார். அப்போது அங்கு கடமை புரிந்த அமரவித்துவான் மு.சபாரத்தினம், அமரர் பண்டிதர் வேலுப்பிள்ளை ஆகியோரிடம் தமிழ் இலக்கண, இலக்கிய அறிவைத் தேடிக் கொண்டார். தனது சமூகத்திலும், சமய வாழ்விலும், இலக்கிய உலகத்திலும் தடம் பதித்துக்கொள்ள முனைந்தார். அந்த முனைப்பு அவருக்கு அரியபெரிய சாதனைகளைச் சாதிப்பதற்கு அருந்துணையாக அமைந்தது எனலாம்.

1990 இல் இலக்கிய உலகத்தில் தடம்பதித்த கல்வயல் வே.குமாரசாமி கவிதை ஆக்குவதிலேயே முதலில் ஆற்றல் மிக்கவராய்த் திகழ்ந்து அனைவரையும் ஆச்சரியப்பட வைத்த சைவ ஆசார சீலராவார். அத்துடன் க.பொ.த (பத்திர) உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்துள்ள காலத்தில் தபால் தந்திப் போட்டிப்பரீட்சையிலும் தோற்றி அதிலும் சித்தியடைந்தார். அதன் காரணமாக கொழும்பில் கடமைபுரியும் வாய்ப்பும் அவருக்குக் கிடைத்தது. இவ்வாறாக கொழும்பில் கடமையாற்றும் பொழுதே தனது ஆங்கில, சிங்கள மொழி அறிவை நன்கு விருத்திசெய்து கொண்டார். மேலும் பட்டப்படிப்பையும் வெளிவாரியாக ஆரம்பித்துப் பேராதனைப் பல்கலைக்கழகம், யாழ் பல்கலைக்கழகம் என்பவற்றினூடாக பட்டங்களைப் பெற்றுக் கொண்டார். தொடர்ந்து காமராஜர் பல்கலைக்கழகத்திலும் மகாகவி கவிதைகளைப் பற்றி ஆய்வு செய்து முது தத்துவ மாணிப்பட்டத்தையும் பெற்றுக் கொண்டார். இத்துடன் அவர் நிறுத்தவில்லை. தமது கவித்துவத்தை வளர்த்து செம்மைப்படுத்துவதற்காக கல்வயலைச் சேர்ந்த கவிஞர் முருகையாவைத் தனது குருவாகக் கொண்டு தமது மொழி அறிவை மேலும் வளர்த்துக் கொண்டார்.

**கவி புனைதலும் பரீட்சைகளில் தலமும்**

தொடர்ந்து அன்னை சரஸ்வதி தேவியின் அருட்கடாட்சமும் அவருக்குக் கிடைக்கவே திறன்மிக்க கவிஞர்களில் ஒருவராக மிளிரத் தொடங்கினார்.

மேலும் யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாசா அபிவிருத்திச் சங்கம் நடத்திய பாலபண்டிதர் பரீட்சையில் சித்தியும், பண்டிதர் பரீட்சையில் நூன சித்தியும் அடைந்தார். அந்தக் காலப்பகுதியில் முது பெரும் அறிஞர்களான வித்துவான் பொன் முத்துக்குமரன், பண்டிதர் துரைசிங்கம், திருமதி சத்தியதேவி துரைசிங்கம் பண்டிதர் இராசையா, வித்துவான் வேந்தனார் போன்றோரிடம் தமிழ் இலக்கண இலக்கியத்தினை நன்றாகக் கற்றதுடன் யாப்பிலக்கணத்தினையும் அவர்களிடம் கற்றுத் தேர்ந்தார்.

தன்னுடைய இளம் பிராயத்திலேயே அறிஞர் பெருமக்களுடன், மொழி வல்லுநர்களுடனும் நட்பை ஏற்படுத்திக் கொண்டார். இவ்வாறு தன் அறிவை ஊக்கத்தினாலும், திறமையினாலும் வளர்த்துக்கொண்டமையால் தான் சரி எனக் கானும் விடயங்களில் துணிந்து நின்று வாதிடும் வல்லமையுள்ளவராக விளங்கினார். யாருக்கும் அஞ்சாமல் சரியானதைத் தெரிவிப்பதனால் சிலர் இவர் மீது வெறுப்புற்றும் காணப்பட்டனர். இளம் பிராயம் தொடக்கம்தன் வாழ்க்கைக்காலத்தில் ஆயிரத்துக்கு மேற்பட்ட கவியரங்குகளில் காலடி வைத்து சாதனை படைத்தார். குறிப்பாக யாழ். இலக்கிய வட்டத்தின் உறுப்பினராக இருந்து மகாகவி முருகையன், காரை சுந்தரம்பிள்ளை அம்பி, பண்டிதர் சச்சிதானந்தம், சோ.பத்மநாதன், கம்பவாரிதி இ.ஜெயராஜ் போன்றவர்களின் தலைமையில் நடைபெறும் கவியரங்குகளில் கலந்து கொண்டு தன் கவித்துவத்தை ஒலிக்கச் செய்தவர். கணீர் என்ற குரலில் கவியரங்குகளில் தமிழை கவிக்குயிலானார் இவரின் கவியரங்குகள் காண்பதற்காகவே இலக்கிய ரசனையாளர்கள் தேடிச்சென்று ரசித்துச் செல்வதுண்டு.

**பக்தியில் சிறந்தவர்**

மக்கள் நலன் சர்ந்த சமூக மேம்பாட்டுக்கான, சமய மறுமலர்ச்சிக்கான, வாழ்வியலுக்கான நீதி நெறிமுறைகள் அடங்கிய கவிதைகளை ஆக்கிப் பத்திரிகை வாயிலாகவும், சஞ்சிகைகள் வானொலிகள் மூலமும் வெளிப்படுத்தி வந்த கவிஞர் ஆவார்.

இலங்கை வானொலியில் பல கவியரங்குகளில் பங்குகொண்டு பதக்கம் பெற்றுள்ளார். தான் பிறந்த கல்வயல் கிராமத்திலே உள்ள இந்துக்கோயில்களுக்கு தவறாது சென்று வழிபாடுசெய்வதுடன் அங்கு அவ்வப்போது நடைபெறும் புராணப்படிப்புக்களிலும் ஆர்வமுடன் கலந்துகொண்டார். தமது இலக்கியப் பணியுடன் சமயப்பணி ஆற்றுவதற்கும் தன்னை அர்ப்பணித்துக் கொண்டார். கல்வயல் வேதவனப் பிள்ளையார் ஆலய பரிபாலன சபை உறுப்பினராகவும் பணிபுரிந்து பக்குவமடைந்தார். கல்வயலில் உள்ள ஆயிலடி வீர கத்தியார் ஆலயம், பெரும் குளம் பிள்ளையார் ஆலயம், சித்தன் மாவடிப்பிள்ளையார் ஆலயம் ஆகிய திருத்தலங்களுக்கும் சென்று வழிபட்டார்.

அங்கு புராணபடலம்செய்வதுடன் மேடைப் பேச்சு நிகழ்விலும் பங்கு கொண்டு அறிவாற்றலை மேம்படச் செய்த சைவ அபிமானியாவார்.

> *கவிஞரின் முதலாவது கவிதை "நான் மாட்டோன்" கலைச்செல்வி இதழில் வெளிவந்தது. 1980 இல் இருந்து இவரது கவிதைகள் தொகுதியாக வெளிவந்து கொண்டிருந்தன.*

**இலக்கியப் பணி**

கவிமாமணி கல்வயல் வே.குமாரசாமி இலக்கியச் செயற்பாடுகளில் பல் வேறுபட்ட பங்களிப்புகளைச் செய்துள்ளார். கவிதையாக்கம், கட்டுரைவரைதல், கீதங்கள் ஆக்கம், சஞ்சிகை செயற்பாடுகளிலும் ஈடுபாடு கொண்டிருந்தாலும் கவிதையாக்கத்திலேயே முழுமை யாகத்தன்னை ஈடுபடுத்திக் கொண்ட மூத்த கவிஞர் ஆவார். தபாற்தந்தி திணைக்களச் சேவையில் இருந்து ஓய்வுபெற்ற பின்பு கோப்பாய் ஆசிரியப் பயிற்சிக் கலாசாலையில் தமிழ் விரிவுரையாளராகக் கடமைபுரிந்து வரும் காலத்திலேயே பாரிசவாத நோயால் பீடிக்கப்பட்டு நோய்வாய்ப்பட்டிருந்தார்.

தன் இறுதி மூச்சுவரை பாரிசவாத நோயால் உடற்பலம் குறைந்திருந்தாலும் உள்ளத்திலும், அது தரும் உயர்விலும் சோர்வற்றுக் கவிதைகளைக் கனியமுதமாக ஆக்கியுள்ளார். தன்னால் எழுதமுடியாவிட்டாலும் தன் அருமைத் துணைவியார் மூலம் எழுதுவித்து ஒப்புநோக்கி மனம் மகிழ்ந்து நிறைவு கண்ட கவி மாமணி ஆவார்.

**படைப்பாக்க வெளி**

கவிஞரின் முதலாவது கவிதை "நான் மாட்டோன்" கலைச்செல்வி இதழில் வெளிவந்தது. 1980 ஆம் ஆண்டு களில் இருந்து இவரது கவிதைத் தொகுதிகள் வெளிவந்து கொண்டிருந்தன. சிரமம் குறைகிறது. மரண நினைவுகள், முருகச்சொற்பதம் எனும் மூன்று கவிதைத் தொகுதிகள் வெளிவந்துள்ளன. இவரது கவிதைகள் பெரும்பாலனவை மரபுக் கவிதைகளாகவும், பேச்சு வழக்கச் சொற்கள் கலந்தவையாகவும் காணப்படுகின்றது.

கவிதையாக்கத்தில் குழந்தைப் பிள்ளைகளின் பாடல்களிலும் சிறப்பான ஆக்கத்தை வெளிப்படுத்தியுள்ளார். பாடு பாப்பா, பாலர் பா, பாப்பாபாப்பா, மணிப்பா எனும் தலைப்புக்களில் தொகுப்புக்கள் வெளிவந்துள்ளன. தொடர்ந்து பல ஆக்கங்கள் எழுதியுள்ள நிலையில் வெளிவராமல் பல ஆக்கங்கள் உள்ளன. குடாநாட்டில் அப்பொழுது வெளிவந்த பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் சமூகம், சமயம், பண்பாடு, கலை இலக்கியசம்பந்தமான பல கட்டுரைகளையும் எழுதி வெளியிட்டுள்ளார். அடுத்து கவிதைத்துறையில் அந்தக் காலங்களில் ஏற்பட்ட தேவைக்கேற்ப கீதங்களை இயற்றியுள்ளார். பிரதேச கீதங்கள், கலாசார கீதங்கள் என வகைப்படுத்தப்பட்ட நிலையில் கவிபுனையும் கற்பனைத்திறனினால் கீதங்கள் இயற்றி அனைவரின் பாராட்டைப் பெற்றுள்ளார். கரைச்சிப் பிரதேச செயலகக் கீதம், தென்மராட்சிப் பிரதேச செயலகக் கீதம், யாழ்மாவட்ட கலாசாரப் பேரவைக் கீதம் என்பன அவற்றுள் குறிப்பிட த்தக்கனவாகும்.

மேலும் இதழியல் துறையிலும் 1983 ஆம் ஆண்டிற்குப் பின்பு யாழ்ப்பாணத்தில் தோற்றம் பெற்ற ஈழ முரசு, முரசொலி முதலிய இதழ்களின் ஆசிரியர்குழுவிலும் இடம் பெற்று இதழ் ஆசிரியராகவும் பணிபுரிந்துள்ளார். கலை இலக்கிய சமூக விஞ்ஞான இதழான தாயகம் என்ற சஞ்சிகையின் ஆசிரியர் குழுவிலும் இணைந்து செயற்பட்டார். இது மட்டுமல்ல மெல்லிசைப்பாடகராகவும் விளங்கியதுடன் இலங்கை ஒளிபரப்புக்கூட்டுத்தாபனத்திலும் இவரது பாடல்கள் ஒலிபரப்பாகி உள்ளன.

இவ்வாறு சகல துறைகளிலும் ஈடுபாடு கொண்டு தன் உழைப்பால் உயர்வடைந்து கொண்ட கவிஞராவார். கட்டுரையாளர், மெல்லிசைப்பாடகர், மேடைப்பேச்சாளர், புராணபாடகர் இதழாசிரியர், விரிவுரையாளர், முற்போக்கான கவிஞர் என முத்திரை பதித்து கவித்துவத்தை வளர்த்துக் கொண்டவராகத் திகழ்கிறார்.

தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகியமும் மொழிகளையும் நன்கு கற்றுக் கொண்டு யாரிடமும் எந்த விடையத்திலும் துணிந்து நின்று வாதிடும் வல்லமையாளராக பிற்காலத்தில் அடையாளப்படுத்தப்பட்டார். ஆனால் ஆண்டவனோ கவிஞரின் திறமையை உணர்ந்து உடல் நலமற்றவராக ஆக்கிவிட்டார் என்னே விதியின் விளையாட்டு.

**கௌரவத்தின் அடையாளங்கள்**

கல்வயல் வே.குமாரசாமிக்குத் தான் எழுதத் தொடங்கிய காலத்தில் இருந்து சாகும் வரை பெற்ற கௌரவங்கள், பட்டங்கள், பதக்கங்கள், பாராட்டுக்கள், பரிசுகள் பற்பல உண்டு. எமக்கறிந்த வகையில் 1969 ஆம் ஆண்டு கொழும்பு உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தமிழ் இலக்கிய மன்றம் நிகழ்த்திய முத்தமிழ் விழாவில் கவிதைப் போட்டியில் தங்கப்பதக்கம் பெற்றார். 2000ஆம் ஆண்டு ஆறுமுகநாவலரின் 121ஆவது குருபூசை விழாவில் யாழ். இந்து சமயப் பேரவையால் கவி மாமணி என்னும் விருது வழங்கப்பட்டது. 2009 ஆம் ஆண்டு இந்து சமயக் கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் கலாபூசணம் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார் 2011ஆம் ஆண்டு கொழும்பு கம்பன் கழகத்தால் கவிப் பேரரசு அப்துல் ரகுமான் நிறுவிய வாழ் நாள் உழைப்புக்கான மகரந்தச் சிறகினைப் பெற்றுக் கொண்டார் ஈழத்தின் நவீன தமிழ்க் கவிதை மரபின் தனித்துவ அடையாளம் என கவிஞரை ஞானம் சஞ்சிகை கௌரவப்படுத்தி யுள்ளது. 2012 உலகத் தமிழ் இலக்கிய மாநாட்டு விருதைப் பெற்றுக் கொண்டுள்ளார். தென்மராட்சிப் பிரதேச் செயலகம் 2014 ஆம் ஆண்டு கலாச்சாகரம் விருதை இவருக்கு வழங்கி கௌரவித்தது. 2015 ஆம் ஆண்டு பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சு முதலமைச்சர் விருதினை வழங்கிக் கௌரவித்தது. 2016 ஆம் ஆண்டு இறுதிக் காலத்தில் கலாசார அலுவல்கள் திணைக்களம் உலக கவிதை தினக் கொண்டாட்டத்தை முன்னிட்டு ஒழுங்கமைத்திருந்த நிகழ்வில் அகில இலங்கை ரீதியில் முதன்மையானவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

காவியாபிமாணி எனும் உயர் கௌரவ விருதினைப் பெற்றுக் கொண்டார். இந்தக் கௌரவம் என்பது அவரை இலக்கியப் பணியில் மேன்மைப்படுத்தியது எனலாம்.

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# 2017 வைகாசி மாத பலன்



## துலாம்

தன்மானம் அதிகம் கொண்ட நீங்கள் யார் தயவிலும் வாழ மாட்டீர்கள். ராகு வலுவாக இருப்பதால் கடினமான காரியங்களைக் கூட எளிதாக முடித்துக் காட்டுவீர்கள். பணவரவு அதிகரிக்கும். எதிர்பார்த்து ஏமாந்த தொகையும் கைக்கு வரும். வாகனப் பழுது நீங்கும். பிரபலங்களின் சந்திப்பு நிகழும். திடீரென்று அறிமுகமாகுபவர்களால் ஆதாயம் அடைவீர்கள். வேற்றுமதத்தவர்கள் உதவிக்கரம் நீட்டுவார்கள். வழக்கு சாதகமாகும். வீட்டில் கூடுதல் தளம் அமைப்பது, கூடுதல் அறை கட்டுவது போன்ற முயற்சிகளில் ஈடுபடுவீர்கள்.

வங்கிக் கடன் உதவி கிடைக்கும். அதிக வட்டிக்கு வாங்கியிருக்கும் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு குறைந்த வட்டிக்குப் பணம் கிடைக்கும். ஆனால் 25ஆம் திகதி வரை சப்தமாதிபதி செவ்வாயும், 27ஆம் திகதி வரை ராசிநாதன் சுக்கிரனும் சாதகமாக இல்லாததால் அலைபேசியில் பேசிக்கொண்டு வாகனத்தை இயக்க வேண்டாம். பணப்பற்றாக்குறை இருக்கும். அடிக்கடி குடும்பத்தில், கணவன் மனைவிக்குள் சண்டை, சச்சரவுகள் வந்து போகும். வீண் சந்தேகங்களைத் தவிர்க்கப்பாருங்கள். ஒவ்வாமை, தொற்றுநோய்கள் வந்துப் போகும். வீட்டில் குடிதண்ணீர்க் குழாய் பழுதாகும். மின்சாரத்தைக் கவனமாகக் கையாளுங்கள். குருதி அழுத்தம் அதிகரிக்கும்.

உடன்பிறந்தவர்கள், மனைவி வழியில் உறவினர்களால் தொந்தரவுகள் வந்து போகும். சொத்துப் பிரச்சினையில் இப்போது தலையிடாதீர்கள். 12இல் குரு தொடர்வதால் எதிர்காலம் பற்றிய பயம் வந்து போகும். வீண் பழிக்குள்ளாக வேண்டியிருக்கும். கன்னிப் பெண்களே! சூரியன் உங்கள் ராசியைப் பார்த்துக் கொண்டிருப்பதால் உடல் உஷ்ணத்தால் வேனல் கட்டி, மாதவிடாய்க் கோளாறு வந்து போகும். போட்டித் தேர்வுகளைக் கவனமாக எழுதுங்கள். வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும். புது வாடிக்கையாளர்களின் வருகையால் உற்சாகமடைவீர்கள். வெளிமாநிலத்தைச் சார்ந்தவர்களை வேலைக்கு வைக்கும் போது கவனமாக இருங்கள். 25ஆம் திகதி வரை ராசிக்கு 8இல் செவ்வாய் மறைந்திருப்பதால் சிறுசிறு நட்டங்கள் ஏற்படும். பண விடயத்தில் கறாராக இருங்கள். கடையை மாற்றுவதில் அவசரம் வேண்டாம். உத்தியோகத்தில் வேலைச்சுமை இருக்கும். பதற்றம் இருக்கும். உயரதிகாரி உங்களை உதாசீனப்படுத்துவார். கலைத்துறையினரே! போட்டிகள் இருக்கும். உங்களுடைய படைப்புக்களைப் போராடி வெளியிட வேண்டி வரும். அலுப்பு, சலிப்புக் கொள்ளாமல் ஆக வேண்டியதை பார்க்க வேண்டிய மாதமிது.



அரியாலையூர் செல்வி மிஷாந்தி செல்வராசாவின்

# காகிதங்கள் பேசுதடி

## கவிதை நூல் வெளியீட்டு விழா

அரியாலையூர் செல்வி மிஷாந்தி செல்வராசாவின் "காகிதங்கள் பேசுதடி" கவிதை நூல் வெளியீட்டு விழா அண்மையில் யாழ்ப்பாணம் நீராவியடிப் பிள்ளையார் கோவில் அருகாமையில். அமைந்துள்ள இலங்கை வேந்தன் கலைக்கல்லூரியில் அரியாலை சக்தி கலாசார மன்ற இயக்குநர் இராசையா மதிகரன் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வின் சிறப்பு விருந்தினராக வட மாகாணசபை உறுப்பினர் கே.என். விந்தன் கனகரத்தினம் கலந்து சிறப்பித்திருந்தார்.

மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமான இந்த நிகழ்வில் அக வணக்கத்தைத்தொடர்ந்து யாழ். இந்துக்கல்லூரி மாணவன் செல்வன் இரட்ணேஸ்வரன் அபிசாதன் தாய் மொழி வாழ்த்திசைக்க, வட மாகாண சுகாதார திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வி காந்தரூபன் கேமலாரூபினி வரவேற்புரையாற்றினார். தொடர்ந்து நல்லூர் சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார் ஜாக்ரத சைதன்யா, அரியாலை ஸ்ரீ சரஸ்வதி அம்பாள் அறக்காவலர் ஐயாத்துரை குமரதாசன் ஆகியோரின் ஆசியுரை, இராசையா மதிகரனின் தலைமையுரை, சிறுமிகளின் வரவேற்புநடனம் என்பனவும் இடம்பெற்றன. இதனையடுத்து வெளியீட்டுரையினை கம்பிகளின் மொழி பிறேமும், அறிமுகவுரையை யாழ். பல்கலைக்கழக மருத்துவப்பீட உதவிப் பதிவாளர் இரத்தினசிங்கம் சர்வேஸ்வரனும் ஆற்றினர். தொடர்ந்து "காகிதங்கள் பேசுதடி" கவிதை நூலை நூலாசிரியர், நூலாசிரியரின் பெற்றோர், கம்பிகளின்மொழி பிறேம், காவலூர் அகிலன், விஜய் பதிப்பக உரிமையாளர் விஜய் ஆகியோர் வெளியீட்டு வைக்க, வட மாகாணசபை உறுப்பினர் கே. என். விந்தன் கனகரத்தினம் பெற்றுக் கொண்டார்.



எழுத்தாளரும் சண்டிலிப்பாய் பிரதேச செயலக சமூகசேவை அபிவிருத்தி உத்தியோகத்தருமான திருமதி தர்மனி ரஜீவனின் நயப்புரையைத் தொடர்ந்து, சிறப்பு விருந்தினர் கே.என். விந்தன் கனகரத்தினம் சிறப்புரையாற்றினார். இறுதியாக நூலாசிரியரின் ஏற்புரையினையும், யாழ். கனகரட்கம் மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கச் செயலாளர் பாலசுப்பிரமணியம் பாலவரதனின் நன்றியுரையையும் தொடர்ந்து நிகழ்வு இனிதே நிறைவடைந்தது.

இந்த நிகழ்வில் எழுத்தாளர்கள், கலை இலக்கிய ஆர்வலர்கள் என பலரும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

# வரலாற்றில் இன்றைய தினம்

1521 - பக்கிங்சாமின் மூன்றாவது ஆட்சியாளர் எட்வர்ட்ஸ்ரபோட் தேசத்துரோக குற்றத்துக்காக சாவுத் தண்டனைக்கு உள்ளானார்.

1590 - டென்மார்க்கின் ஆன் ஸ்கொட்லாந்து அரசியாக முடி சூடினார்.

1863 - கலிசியன் மொழியில் முதல் நூலாக கன்ரறஸ் கலிகோஸ் எனும் நூல் றொசாலியா டிகஸ்ரோ என்பவரால் வெளியிடப்பட்டது.

1902 - கிரேக்க அகழ்வாராட்சியாளர் ஒருவரால் அனரி கைத்ரா பொறிமுறை கண்டுபிடிக்கப்பட்டது.

1940 - இரண்டாம் உலகப் போர் பெல்ஜியம் புருஷேல்சில், ஜேர்மனி நிலை கொண்டது.

1967 - எகிப்திலுள்ள ஐ.நா அவசரகால அமைதிப்படையைக் கலைக்குமாறு எகிபதிய அரசதலைவர் காமல் அப்துல் நஸார் கோரினார்.

1973 - வோட்டர்கேட் ஊழல் அமெரிக்க செனட்டில் தொலைக்காட்சி விசாரணை தொடங்கியது.

1980 - ஜெனரல் சுன்டுவானால் தென்கொரிய ஆட்சி அதிகாரம் கைப்பற்றப்பட்டு மாணவர் ஆர்ப்பாட்டத்தைக் கட்டுப்படுத்த மார்ஷல் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டது.

1980 - பெருநாட்டில், அரசதலைவர் தேர்தலுக்கு முதல்நாள், மாவோயிஸ்ட் கெரில்லாக் குழுவான ஷைனிங் பாத்தினரால் ஆயகுரோ நகரில் தேர்தல் நிலையம் ஒன்று தாக்கப்பட்டதையடுத்து, உள்நாட்டுக கலகம் தொடங்கியது.

1983 - லெபனானிலிருந்து இஸ்ரேல் வெளியேறும் ஒரு ஒப்பந்தத்தில் லெபனான் இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா ஒப்பமிட்டன.

1990 - உலக சுகாதார ஸ்தாபனத்தால் ஒரே பாலினச்சேர்க்கை உளவியல் நோய் பட்டியலிலிருந்து அகற்றப்பட்டது.

1992 - தாய்லாந்து பிரதமர் சுச்சிந்தாக்றப்றயூனின் அரசுக்கு எதிரான பிரபலமான எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் தொடங்கியது. இது இராணுவத் தாக்குதலுக்கு இட்டுச் சென்றதில் 52 பேர் உயிரிழந்ததாக உத்தியோகபூர்வாக உறுதிப்படுத்தப்பட்டதுடன் 100 பேர்வரை காயமடைந்தும், பலர் காணாமற் போனதுடன் 350 பேர் வரை கைதும் செய்யப்பட்டனர்.

1994 - மாலாவியில் முதன் முறையாக பலகட்சித் தேர்தல் இடம் பெற்றது.

2002 - கருணைக் கொலை புரிய பெல்ஜியத்தில் அனுமதி.

2006 - யாழ். பஸ் நிலையப் பகுதியில் இளைஞன் ஒருவர் சுட்டுக் கொலை.

2006 - பாதுகாப்பான இடங்களுக்குச் செல்ல அல்லைப்பிட்டி மக்கள் அங்கலாய்ப்பு அங்கு சென்ற மாவை எம்பியிடம் உருக்கமான வேண்டுகோள்.

2004 - அமெரிக்க மசாசூட்சில், முதன் முதலாக சட்டபூர்வமாக ஒரே பாலினத் திருமணம் இடம் பெற்றது.

## நாளை

வைகாசி-04
வியாழக்கிழமை -18.05.2017
திதி: ஸப்தமி பி.ப.01.41
நட்சத்திரம்: திருவோணம் கா.05.57
சுபநேரம்:07.23-08.53 வரை
ராகுகாலம்:01.23-02.53 வரை

# குறள் கண்ட வீரம்

"விழித்தகண் வேல்கொண்டெறிய அழித்திமைப்பின்
ஒட்டன்றோ வன்கணவர்க்கு"

இந்தக் குறட்பா, படைச் செருக்கு என்னும் அதிகாரத்திலே 775ஆவது குறட்பாவாக அமைந்துள்ளது. இதற்குப் பொருள் கூறிய எத்தனையோ அறிஞர்கள் தத்தம் அறிவாற்றலுக்கு எட்டியபடி நல்ல பொருள் விளக்கங்களைக் கொடுத்திருக்கிறார்கள். ஆயினும், எனது சிற்றறிவுக்கு எட்டிய அளவில் இதன் பொருளை விளக்கலாம் என்று நினைக்கிறேன்.

"விழித்த கண் வேல் கொண்டெறிய போர்க்களத்திலே சமரிட்டுக் கொண்டிருக்கும் ஒரு வீரன், எதிரியின் மேல் எறிவதற்குத் தன் கையிலிருக்கும் வேலை ஓச்சுகிறான். அதைக் கண்ட எதிரி கோபாவேசத்தோடு அந்த வீரனைப் பார்த்த கண்ணை மூடித் திறக்கிறான். அந்த ஒரு கணநேரத்தில் வேலை ஓச்சிய வீரன், எதிரி தன் வேலைக் கண்டு அஞ்சுவதாக எண்ணி அவன் மேல் வேலை எறியாது விடுகிறான். எறிந்தால் அவன் ஒரு கோழையைக் கொன்ற பழிக்கு ஆளாக நேரும் என்பது ஒன்று. அடுத்தது, போர்க்களத்தில் எதிரியை விழித்துப் பார்த்த கண்ணை இமைத்தாலும் ஒட்டு கோழைத்தனம். அதே இடத்தில் ஒரு கோழையைக் கொன்றாலும் இழிவு ஒட்டு. இத்தகைய ஒரு வீரமரபில் வளர்ந்தது தமிழனின் வீரம். புறநானூறு காட்டிய வீரமரபை விட வள்ளுவரின் வீரம் போர்த் தர்மத்தைப் பறைசாற்றி நிற்பது சிறப்புக்குரியது. ஆனால், இன்றைய தமிழனின் நிலையை எண்ணிப் பார்க்கும் பொழுது வேதனை, வெட்கம் இவைதான் எஞ்சி நிற்கின்றன எனக் கூறினால், மிகையன்று.

புலவர் வள்ளுவதாசன்

# இளையோரின் பங்களிப்புடன் திருவள்ளுவர் விழா














ஐ.சிவசாந்தன்

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் முன்னெடுத்த திருவள்ளுவர் விழா கடந்த 13ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில் சிறப்புற நடைபெற்றது. யாழ். பெரியகடை சிவகணேசன் ரெக்ஸ்ரைல்ஸ் புடவை நிறுவனத்தின் ஆதரவில் தமிழ்ச்சங்கத் தலைவர் பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸ் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் சிவகணேசன் புடவை நிறுவன உரிமையாளர் லயன். கனகசபை அருள்நேசன் மங்கலவிளக்கேற்றினார். அண்ணாமலைப் பல்கலைக்கழக இசை மாணி தெ.திருவேரகன் தமிழ்த்தாய் வாழ்த்து இசைத்தார். வரவேற்புரையை யாழ். பல்கலைக்கழகச் சட்டத்துறை மாணவன் ஸ்ரீ.சிவஸ்கந்தஸ்ரீயும் வாழ்த்துரையை கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச்சங்கத் தலைவர் நா.சோதிநாதனும் ஆற்றினர். சொல்லின் செல்வர் இரா.செல்வவடிவேல் 'உள்ளுவதெல்லாம் வள்ளுவம்' என்ற பொருளில் சிறப்புரையாற்றினார்.

### தலைவரின் உரை

தலைவர் தனது தலைமையுரையில் "திருக்குறளுக்கு பல மொழிகளில் மொழிபெயர்ப்புக்கள் அமைந்துள்ளன. ஆயினும் அவை யாவும் ஆங்கில மொழி மூலமான திருக்குறளை ஆதாரமாகக் கொண்டே எழுந்துள்ளன. இன்று யப்பான் மொழி, பிரான்சிய மொழி என புலம்பெயர் தேசத்து நம்பிள்ளைகள் பல மொழிகளில் ஆளுமை பெற்றுள்ளனர். இவர்கள் திருக்குறளை தமிழில் இருந்து நேரடியாக மொழிபெயர்க்க வேண்டும்". எனக் கேட்டுக்கொண்டார். இதற்காக இளைய சந்ததி திருக்குறளை நன்கு கற்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

சிறப்புரையாற்றிய ஆசிரியர் இரா. செல்வவடிவேல் வள்ளுவருடைய குறட்பாக்களைத் தொட்டுக் காட்டி அது வாழ்வியலுடன் பொருந்தியிருப்பதாகக் கூறினார். நிகழ்வில் வாழ்த்துரை வழங்கிய கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச்சங்கத் தலைவர் நா.சோதிநாதன் யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத்தின் திருக்குறள் விழாவிற்கான அழைப்பிதழ் அழகுற அச்சமைக்கப்பட்டிருந்தாலும் அதில் ஆண்டுப் பெயரைக் குறிப்பி டும்போது வள்ளுவர் ஆண்டுக் கணக்கில் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும் எனவும் இதனைத் தாம் ஒரு குறையாகக் காண்பதாகவும் குறிப்பிட்டார்.

சிறப்பு நடன நிகழ்வாக மேகிலா சிவஞானசுந்தர ஐயரின் நெறியாள்கையில் நல்லூர் சிவநர்த்தனாலய மாணவர் வழங்கிய குறள்வழி நடனம் இடம்பெற்றது. திருக்குறட்பாக்களை மையப்படுத்தி காதல், வீரம் உள்ளிட்ட பாவங்களை வெளிப்படுத்தி நடன நிகழ்வு அமைந்தது. இதில் நட்டுவாங்கம் சி.மேகிலா, பாட்டு ஜெ.மதுசிகன், வயலின் கலைச்சுடர் வ.மங்கைலட்சுமி, மிருதங்கம் ம.வினோகாந் ஆகியோர் மேற்கொண்டனர்.

### பல்துறை வள்ளுவம்

பல்துறை வள்ளுவம் என்ற பொருளில் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் வழங்கிய உரை அரங்கு அவையோரைக் கவரும் வகையில் அமைந்திருந்தது. சட்டத்துறை மாணவன் ஸ்ரீ.சிவஸ்கந்தஸ்ரீ தலைமையில் நடைபெற்ற இந்தச் சிந்தனை உரையரங்கில் திருவள்ளுவர் ஓர் இலக்கியவாதி என கலைப்பீட மாணவி ப.கதிர்தர்சினியும், திருவள்ளுவர் ஒரு மருத்துவர் என மருத்துவபீட மாணவன் ப.பிரதீசும், திருவள்ளுவர் ஒரு சட்டத்தரணி என சட்டத்துறை மாணவி க.துளசியும் திருவள்ளுவர் ஒரு முகாமைத்துவவர்தி என முகாமைத்துவத்துறை மாணவன் சி.யசோகுலனும் கருத்துரையாற்றினர்.

நிகழ்வின் நிறைவில் வாழ்க தமிழ் என்ற பொருளில் நாடகத்துறை ஆசிரியர்களான எஸ்.ரி.குமரன், எஸ்.ரி.அருள்குமரன் ஆகியோரது நெறியாள்கையில் புத்தாக்க அரங்க இயக்கக் கலைஞர்கள் வழங்கிய நாடகம் இடம்பெற்றது. தமிழ்ச்சங்கப் பொதுச் செயலாளர் செந்தமிழ்ச்சொல்லருவி ச.லலீசன் நிறைவுரையையும், நன்றியுரையையும் ஆற்றினார். பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி ஆசிரியர் வேல். நந்தகுமார் நிகழ்ச்சிகளை நெறிப்படுத்தினார்.

### இளையோரின் ஆற்றுகை

நிகழ்வில் இளையோரின் ஆற்றுகைகளுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டிருந்தன. தலைமையுரை, வாழ்த்துரை, சிறப்புரை, நிறைவுரை தவிர ஏனைய நிகழ்வுகள் யாவற்றிலும் முப்பது வயதிலும் குறைந்த வளரிளம் கலைஞர்களே பங்கேற்றமையையும் அவர்களது ஆற்றுகைத் திறன் சிறப்புற அமைந்திருந்தமையையும் பலரும் பாராட்டினர்.

# இப்போதும் மனதில் ....

(17 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இசைக்கு எழுத்தில எழுதவோனும் அதில சம்பவம் வரவேணும். நான் சொல்லக்கூடிய அறிவுப்புக்கள், கருத்துக்கள் எல்லாம் வரவேணும். நாடகம் என்று நான் ஒரு அளவுக்கு வந்தாப்பிறகு நாடகத்தை பற்றி யோசிச்சன் இங்க நாடகம் செய்கினம் ஏதோ ரசனைக்கு மட்டும். ஆனால் நாடகம் எண்டுற எப்படி இருக்க வேணும் என்று நான் ஒருக்காப் புத்தகத்தில படிச்சன். உலகத்திலேயே பிரசவ வேதனையை அனுபவிக்கிறது ஆண்கடற்குதிரைதான். பெண் கடற்குதிரை கருக்கட்டினாப்பிறகு ஆண் கடற்குதிரைக்கு முன்னால நின்று நடனமாடும். ஆண்குதிரை அதில மயங்கி நிற்க, பெண்குதிரை அதின்ட பைக்குள்ள வந்து முட்டையை இட்டிட்டு போய்விடும். அதைப்போல நாடகம் என்றால் நெறியாளன் கலையால ஒருத்தரை வசியப்படுத்தி தான் சொல்ல வந்த கருத்தை அவனுக்குள்ள கொட்டிவிட்டால் அது செயலாக வெளிவரவேண்டும். அப்பிடி நாடகங்கள் இருக்க வேணும்.

ஒரு கவிதையை எழுதினால் அதை மூன்று தரம் திருத்திச் சரிப்படுத்துவன். நிச்சயமாகக் கவிதை எழுதேக்க என்னத்தைப் பற்றி நான் எழுதிறனோ அது நல்ல கருத்தைச் சொல்லுற அளவுக்கு எழுதுவன். பாட்டும் அதுபோலத்தான். சொற்கள், சந்தம், பொருள் எல்லாம் சரியாக வரவேணும். அதேநேரத்தில அதுக்கேற்ற உவமைகளும், சுழலுக்கேற்ற விதத்தில அமைஞ்சதாக சரியாக வரவேண்டும்.

### கட்டுக்கடங்காத கற்பனை

தொழிலையும், கலையையும் சமாளிச்சுவளர்க்கநினைக்கிறதெண்டது சரியான கஸ்டம். நிதிப்பிரச்சனை என்ற ஒன்று இருக்கிறதால நான் நாடகம் எழுதிறதோடையே இறுந்திடுவன். நாடகம் எழுதிற கதாசிரியனுக்குத்தான் பாத்திரத்தின் தன்மை விளங்கும். ஒரு வசனம், உரையாடலைப் போடேக்க அவருக்குத்தான் விளங்கும்அதஎப்பிடிக்கையாள வேணும், முகபாவங்களை எப்பிடிக் காட்டவேணும் என்று, அதனால நான் எழுதிற நாடகங்களை பழக்கேக்க நானே நின்று கவனிச்சுக் கொள்ளுவன். கூடுதலாக என்ர நாடகங்களை எல்லாம் இயக்கம் செய்தது கொலின்ஸ் தான்.

டேமியன், தினேஸ், அல்போன்ஸ், சட்டத்தரணி அன்ரனிப்பிள்ளை என்று என்னைச்சுற்றி நிறைய கலைஞர்களும், நல்ல மனிதர்களும் இருந்ததால என்னால பயமில்லாம இவ்வளவு நாடகங்களையும், பாட்டு இறுவட்டுக்களையும் படைக்கக்கூடியதாக இருந்தது.

இப்பவும் ஏதாவது எழுதவேணுமெண்டு நினைப்பன். ஆனாலும் புறச்சூழல், நேரம் எல்லாம் சரியாக அமையுறதில்லை. ஆனாலும் மனசுக்குள்ள நிறையக் கற்பனைகள் வந்துகொண்டுதான் இருக்கும். அதைதடுக்க ஏலாதுதானே? என கற்பனைகளில் ஏராளம் படைப்புக்களை சிருஸ்டித்துக்கொண்டிருக்கிறார் இந்த அமைதியான படைப்பாளி.

# கர்நாடக இசை உலகின் ஜாம்பவானான நெய்வேலி சந்தான கோபாலனின் சிறப்பு இசைக் கச்சேரி

இ.குமாரசாமி சர்மா




மகாவித்துவான் ஏ.ஜி.ஐயாக்கண்ணு தேசிகரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு ஏற்பாடாகியிருந்த சிறப்பு இசையரங்க நிகழ்வு கடந்த சனிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு செல்வ மஹால் மண்டபத்தில் இடம்பெற்றது. அதன் கலசமாக கர்நாடக சங்கீதத்து வத்தில் உலகின் ஜாம்பவான் என போற்றப்படும் "சங்கீதரத்னாகர" குரு நெய்வேலி சந்தான கோபாலனின் சிறப்பு இசைக் கச்சேரி மண்டபம் நிறைந்த ரசிகர்களுக்கு மத்தி யில் சிறப்புற்றிருந்தது. இந்த நிகழ்வை யாழ். மண்ணின் இசைப்பிரியர்கள் பார்ப்பதற்கு கிடைத்தமை ஒரு வரப்பிரசாதமாகும்.

### சிறப்பான இசையரங்கம்


இதில் முதன்மை விருந்தினராக இந்திய துணைத்தூதுவர் ஆர். நடராஜன். கலந்து கொண்டு சிறப்பித்தார். மகாவித்துவான் ஏ.ஜி.ஐயாக்கண்ணு தேசிகர் மருதனார்மடம் இராமநாதன் நுண்கலைக்கல்லூரியில் இசைப் பேராசிரியராகக் கடமை புரிந்து பல சங்கீதக் கலைஞர்களை உருவாக்கிப் பாராட்டுக்கள் பெற்றவர். அவரது பிள்ளைகள் இருவர் இசைத்துறையில் சிறந்து விளங்குகின்றனர். ஒருவர் லண்டனில் வயலின் இசையில் சுருதி சிரோன்மணியாகவும் மற்றையவர் லய சுருதி சிரோன்மணியாகவும் சிறப்புற்ற கலைஞர்களாக உள்ளனர். அவர்களது ஏற்பாட்டில் இங்கு அரங்கிசை மேதாவிகளாக "சங்கீத ரத்னாகர" குரு நெய்வேலி சந்தானகோபாலன் இந்தியாவிலிருந்து வந்து சங்கீதகான மழை பொழிந்தார். இந்த நிகழ்வில் நினைவுப் பேருரையை கலாபூசணம் சங்கீதரத்தினம் திரு மதி ஞானகுமாரி சிவனேசன் நிகழ்த்தினர். இவர் தேசிகரின் பிரதம சிஷ்யை ஆவார். இந்த நிகழ்வில் மகாவித்துவான் ஏ.ஜி. ஐயாக்கண்ணு தேசிகரின் புதல்வர்களான சுருதி சிரோன்மணி ஏ.ஜி.ஏ.ஞானசுந்தரம் வயலினும் லயசுருதி சிரோன்மணி ஏ.ஜி.ஏ. சோமசுந்தர தேசிகர் மிருதங்கமும் யுவகலா பாரதி நெற்குணம் மருத்துவர் எஸ்.சங்கர் கெஞ்சிராவும் வாசித்து இசை விருந்தைப் பெருமைப்படுத்தினர். மேலும் நிகழ்வில் சங்கீதபூஷணம் சு.கணபதிப் பிள்ளைதலைமையுரை ஆற்றிச்சிறப்பித்தார். செல்வ மஹால் மண்டபம் இவ்வாறான சங்கீத நிகழ்வுகள் நடத்துவதற்கு ஏற்ற சிறப்பான மண்டபமாக உள்ளது. இந்த மண்டபம் யாழ். நகரின் முக்கிய கேந்திர மையத்தில் அமைந்துள்ளமையும், மிகுந்த அழகுடன் இருக்கைகள் ரசிகர்கள் நன்கு அமர்ந்து இருந்து கேட்பதற்கான வசதிகள் கொண்டனவாகவும், ஒலி, ஒளி அமைப்பு, மின் விசிறிகள் குளிர் சாதன வசதிகள் என அனைத்தையும் தன்னகத்தே கொண்டுள்ள மண்டபமாக உள்ளமையும் பார்வையாளர்கள் தம்மை மெய்மறந்து இசையில் சில மணிநேரம் ஆழ்ந்து இன்புறவும், இறுதிவரை இசையோடு சங்கமித்து மகிழ்வதற்கும் ஏற்றதாக உள்ளமையும் சிறப்பு அம்சங்களாகும். சிறப்பு இசையரங்கில் பாடிய நெய்வேலி சந்தானகோபாலன் சங்கீத மேதையான மதுரை ரி.என்.சேஷகோபாலனிடம் இசையை முறையாகப் பயின்றவர். சந்தானகோபாலனிடம் பயிற்சிபெற்ற பல இளங் கலைஞர்கள் உள்ளனர். இவரின் மகளான ஸ்ரீ ரஞ்சினி சிறந்த சங்கீத ஞானம் கொண்ட பாடகி ஆவார். இவர் இந்தியாவின் பற்பல சபாக்களிலே பாடிப் பெரும் புகழ்பெற்றவர். பல மன்றங்களில் நடுவராகப் பங்கு கொண்ட சங்கீதக் கலைஞர்களை தேர்ந்தெடுத்தவர். அமெரிக்காவின் கிளிவ்லன்ட் இசைக் கல்லூரியில் அங்கு பயிலும் சங்கீத மாணவர்களுக்கு பயிற்சிகள் கொடுத்து நடுவராகக் கலந்து சிறப்பித்தவர்.

### அற்புதமான பாடல்கள்

நெய்வேலி சந்தான கோபாலன் கம்சத்வனி ராக வர்ணத்துடன் ஆரம்பித்து சித்த ரஞ்சனி ராகத்தில் "நாத தனுமனிசம்" எனும் மதுரை மணிஐயரின் பாடலைப் பாடத் தொடங்கியவுடன் கச்சேரி விறுவிறுப்பானது. அடுத்து தியாகராஜரின் ஸ்ரீ ராகத்தில் அமைந்த பஞ்சரதன கீர்த்தனையான "எந்தரோ மகானு புஷலு" எனும் பாடல் வெகு அற்புதமாக அமைந்தது. பந்துவராளி ராக ஆலாபனையும் அதில் அவர் பாடிய சுந்தர மூர்த்தி நாயனாரின் நீள நினைந்தடியேன் தேவாரமும் சிறப்பானதாக அமைந்தது. மேலும் சரஸ்வதி மனோகரி ராகத்தில் அமைந்த எம். எஸ். வசந்தகுமாரி பாடியுள்ள "எந்தவேடு கொண்டு ஓ ராகவா" எனும் கீர்த்தனம் வெகு அற்புதம், பிரமாதம்.

பாட்டின் தேன்துளிகள் எனப்படும் ராகமாக்கத்தில் "கரகரப்பிரியா" ராக ஆலாபனை பிரதான மையமாக, வெகு விஸ்தாரமாக வயலின் வாத்தியத்துடன் இணைந்து பாடி அதில் "சக்கனி ராஜமார்க்கமு" எனும் கீர்த்தனையை வெகு அற்புதமாக ரசிகர்களைக் கவரும் வண்ணம் பல சங்கதிகள், நிரவல்கள் பல செய்து ராக மாலிகையாக பல வித்தைகள், விநோதங்கள் காண்பித்து ரசிகர்களின் பலத்த கரகோசத்தைப் பெற்றமை சிறப்பானநிகழ்வின்தருணமாக அமைந்தது. "சின்னஞ் சிறு கிளியே" எனும் பாரதி பாடல் நன்றாக அமைந்தது. இறுதியாக எம்.எஸ். சுப்ப லட்சுமி பாடியுள்ள "மைத்ரீம் பஜரே" எனும்பஜன் கீர்த்தனையுடன் நிறைவுற்றது. தனி ஆவர்த்தன நிகழ்வில் மிருதங்க வாத்திய சிரோன்மணியும் கெஞ்சிராக் கலைஞர் எஸ்.சங்கரும் மிகவும் அற்புதமாக வாசித்து பார்வையாளர்களின் பாராட்டைப் பெற்றனர். நிகழ்வில் காதுக்கு இனிய சங்கீதமும், வாய்க்கு இனிய பண்டங்களும், குளிர்பானமும் கிடைத்தமை பாராட்டுக்குரியன. இந்த நிகழ்வை பார்க்கக் கிடைத்தமை மக்களுக்கு இசை கொடுத்த அரிய சந்தர்ப்பமாகும்.

கட்டுரையாளர்,
ஓய்வு நிலை உதவிப் பணிப்பாளர்.



# கண்ணன் கர்வம் அடக்கிய முறை

பொ.திலகவதி

ஒருநாள் கண்ணபிரான் கருடனை அழைத்து யக்சராஜன் குபேரனின் ஏரியிலிருந்து தாமரைக் கமல மலரைக் கொண்டு வருமாறு கேட்டார். அவ்வளவு தான் கருடனுக்கு தலைக்கனம் ஏறத் தொடங்கியது. ஆகா! என்னைப் போல பலசாலியும் வேகமாகச் செல்லக்கூடிய திறமையும் உடையவரை இந்த உலகில் காணமுடியாது என்று நினைத்துக் கொண்டது. தன் சிறகுகளை மிகவும் அகலமாக விரித்துக் கொண்டு வேகமாகப் புறப்பட்டது.

அந்தச் சத்தம் காரணமாக நாலாதிசைகளிலும் எதிரொலி கிளம்பியது. விரைவில் கந்த மாதன பர்வதத்தை அடைந்தது. மலரைக் கொய்யத் தொடங்கியது. அந்த இடத்தில் தான் ராம பக்தன் அனுமான் வசித்து வந்தார். மிகுந்த அட்டகாசத்துடன் கருடன் மலர்களைக் கொய்வதைக் கண்டு கருடனை நோக்கி "அப்பா நீ யாருக்காக மலர்களைக் கொய்கிறாய்? எங்கே எடுத்துச் செல்கிறாய்? என்று கேட்டார்.

இந்த மலர்களுக்குச் சொந்தக் காரனாகிய குபேரனின் அனுமதி வேண்டும் என்றார். நான் கண்ணபிரானுக்காக இந்த மலர்களை எடுத்துச் செல்கிறேன். அவருக்கு செய்யும் பணிக்கு எவருடைய அனுமதியும் தேவையில்லை எனக் கூறியது கருடன்.

இதைக் கேட்டுக் கோபமடைந்த அனுமனும் கருடனைப் பிடித்துத் தன்னுடைய கக்கத்தில் வைத்துக் கொண்டே துவாரகையை அடைந்தார். அனுமன் செய்த வீரமுழக்கத்தால் துவாரகை மக்கள் பீதி அடைந்தனர். அனுமனின் இந்த வேகமான பாய்ச்சலைத் தடுக்கச் சுதர்சனச் சக்கரம் முன் வந்தது. அனுமன் அந்த சுதர்சனச் சக்கரத்தையும் எடுத்து மற்றோர் அக்குளில் வைத்துக் கொண்டார்.

மாயக் கண்ணன் பார்த்துக் கொண்டுதான் இருந்தார். அவர் தானே இந்த நாடகத்தின் சூத்திரதாரி. கண்ணன் தம் பக்கத்திலிருந்த ராணிகளிடம் கூறினார். அனுமன் மிகவும் கோபமாக வந்து கொண்டிருக்கிறான். இந்த நேரம் சீதையுடன் இராமபிரான் இருந்தால் தான் நல்லது. இல்லாவிட்டால் அனுமன் தனக்குள்ள கோபத்தால் துவாரகையையே கடலில் தூக்கி எறிந்து விடுவான்.

எனவே உங்களுள் யாராவது ஒருவர் சீதையைப் போல் வேடமணிந்து கொண்டு வாருங்கள். நான் ராமர் வேடம் அணிகிறேன் என்றார். இந்த விதமாகச் சொல்லிக் கொண்டே கண்ணபிரான் ராமபிரானைப் போல் வேடமணிந்து அங்கேயே இருந்தார்.

அவருடைய ராணிகள் அனைவரும் சீதையைப் போல வேடம் போட எவ்வளவு தான் முயற்சி செய்தும் அவர்களால் முடியவில்லை. பின் ராணிகள் அனைவரும் கலந்து பேசி ராதையை அழைத்து வந்தனர். மற்ற மனைவியர் செய்ய முடியாத காரியத்தை ராதை செய்து விட்டாள். ராதை சீதையாகி ராமன் வேடம் பூண்ட கண்ணபிரான் அருகே அமர்ந்து கொண்டாள்.

அனுமனும் வந்து சேர்ந்தார். தாம் வணங்கும் இராமபிரானையும் சீதையையும் கண்டு சிரம் தாழ்த்தி விழுந்து வணங்கினார். அந்த சமயத்திலும் கூட அனுமன் இரு அக்குள்களிலும் கருடனையும், சுதர்சன சக்கரத்தையும் மிகவும் கவனமாகவே வைத்து இருந்தார். இராமன் வேடத்திலிருந்த கண்ணன் அனுமனைப் பார்த்துக் குழந்தாய் உன் அக்குள்களில் ஏதோ காணப்படுகிறதே அது என்ன எனக் கேட்டார்.

அனுமன் பணிவோடு, சுவாமி அது வேறொன்றுமில்லை. நான் மனித சஞ்சாரமற்ற இடத்தில் ராம ஜெபம் செய்து கொண்டிருந்தேன். அப்போது அற்ப பறவை ஒன்று இடைஞ்சல் செய்யவே அந்தப் பறவையைப் பிடித்து வைத்திருக்கிறேன். மற்றொன்று சுதர்சனச் சங்கரம் நான் வரும் வழியில் என் மீது மோதி கஷ்டப்படுத்தியது. அதையும் பிடித்துக் கொண்டு வந்தேன் என்றான். பின்பு மிகப் பணிவோடே சுவாமி, தங்களுக்கு மலர்கள் வேண்டுமென்றால் என்னிடம் சொல்லக் கூடாதா...? என்ற வேண்டுதலையும் முன் வைத்தார்.

நான் உன் செய்கையால் மகிழ்கிறேன். உன் ஏகாந்த இடத்துக்குச் சென்று ராம ஜெபம் செய்யத் தொடங்கு என்றார். இராமரின் கட்டளையை சிரமேற்கொண்டு கருடனையும், சுதர்சன சக்கரத்தையும் விடுவித்தார். பின் இராமபிரானை வணங்கி விட்டு "ஜயராம்" "சீதாராம்" எனச் சொல்லிக் கொண்டே கந்தமாதக பர்வதம் நோக்கிச் சென்றார்.

உண்மையில் தன் வேகத்துக்காக கருடனும், திறமைக்காக சுதர்சன சக்கரமும், அழகால் கண்ணனின் மனைவியரும் கர்வம் கொண்டிருந்தனர். இந்த மூவரின் கர்வத்தையும் ஒரே சமயத்தில் தகர்த்தெறிந்தார் கண்ணபிரான்.



# அழகுக் கோலமும் அதன் தத்துவமும்

இரா. நிஷாந்தன்

தமிழரின் மரபார்ந்த கலாசாரத்தில் பல பண்பாட்டு, கலாசார அம்சங்கள் பின்பற்றப்பட்டு வருகின்றன. அவற்றில் கோலம் போடும் கலாசாரமும்ஒன்றாகும். கோலம் என்றால் அழகுஎனப்பொருள் படும்.

மேலும், கோலம் போடுதல் என்பது ஓர் கலையாகும். அது ஒரு யந்திரக் கலையும் கூட. வெறுமனே அழகுக்காக போடப்படுவதல்ல கோலம். அதற்குள் பல வகையான அறிவியல், ஆன்மீகம் சார்ந்த அர்த்தங்கள் பொதிந்துள்ளன. நாம் இயற்கையுடன் தொடர்புபட்டு வாழ்பவர்கள். இயற்கையினைமதிப்பவர்கள். அந்த வகையில் நாம் வாழும் பூமியை பூமா தேவி என அழைக்கின்றோம். அத்தகையபூமிக்குநாம்செய்து கொள்வதான ஓர் ஒப்பனையே கோலமாகும். இதனாலேயே நாம் வீட்டின் முன் கோலம் இடுகின்றோம்.

கோலத்தில்மும்மூர்த்திகளும்வாசம்செய்வதனாலும், கோலம்லட்சுமிகடாட்சத்தை கொடுப்பதாலும் வீட்டின் முன் கோலம் இடும் போது தீய சக்திகள் வீட்டை நாடாது என்பதும், லட்சுமி இல்லம்தேடிவருவாள் என்பதும் இந்துக்களின் நம்பிக்கையாகும். எனவே தான் கோலத்தினை பெண்கள்போடுவதுசிறந்தது என இந்துசமயம் எடுத்துரைக்கின்றது. ஆனாலும் ஆண்கள் கோலமிடுவதிலும்தவறில்லை.

**பல வகையான கோலங்கள்**

கோலங்கள் பல வகைப்படும். தாமரைப் பூக் கோலம், குத்து விளக்குக் கோலம், பாம்புக் கோலம், துளசிமாடக் கோலம், வட்டக் கோலம், மனைக் கோலம், அன்னக் கோலம் என அவற்றைப் பட்டியலிடலாம். இவற்றில் எக் கோலத்தை போட்டாலும் அது அழகையே வெளிப்படுத்தும்.

கோலம் போடுவதால் புலன்கள் ஒரு நிலைப்படுகின்றன. அதாவது கோலத்தினை போடுவதற்கு முன் எவ்வாறு கோலம்போடுவது, என்னகோலம்போடுவது, எங்கிருந்துகோலத்தைஆரம்பிப்பது என அதன்படிமுறைகளைமனதில்நிறுத்திக்கொண்டுகோலம்போடஆரம்பிக்கும் போது மனம் ஒருநிலைப்படுகின்றது.

ஒருபுள்ளியில்ஆரம்பித்துபலபுள்ளிகளை இட்டு பின் அப் புள்ளிகளை முறையாக இணைத்துஅதனைஓர்அழகுகோலமாக மாற்றும் வரை எம் சிந்தனை வேறெங்கும்செல்லாது.

மேலும்கண்,கை,சிந்தனைஎனஅனைத்தும்அக்கோலத்திலேயேலயித்திருக்கும். எனவே தான் கோலம் போடுதலை எம் புலனடக்கத்திற்கு ஒரு சிறந்த உதாரணமாகக் கூறியுள்ளனர்.



**கோலத்தின் பயன்கள்**

கோலம் போடுவது உடலுக்கு நன்மை தருகின்றது. சூரிய உதயத்திற்கு முன் கோலம்போடும்போது பிராணவாயு அதிகளவில் உடலுக்கு கிடைக்கின்றது. இதனால்உடல்சுறுசுறுப்பாகநாள்முழுவதும் இயங்குகின்றது. குனிந்து நிமிர்ந்து கோலம் போடும் போது உடலில் இரத்த ஓட்டம் சீராக்கப்படு கின்றது. இடுப்பை வளைத்து, தலையைகுனிந்துகைகளால் கோலம் இடுவது ஒரு வகையில் யோகசனமும் கூட.

நாம் கோலம் போடுவதற்கு அரிசி மாவையே அதிகம் பயன்படுத்துகின்றோம். அரிசி மாவில் கோலம் போடும் போது பூமியில் வாழும் எறும்பு முதலிய சிறு பூச்சிகளுக்கு அது உணவாகின்றது. இதனால் எமக்கு அன்னம் அளித்த பேறு கிடைக்கின்றது. ஆனால் இன்று அரிசிமாவில் கோலம் போடுவது குறைந்து வருகின்றது. தேங்காய்ப் பூவில் கூட கோலம் போடப்படுகின்றது. அதுவும்ஒருவகையில் சிறந்ததாகும்.

மார்கழி மாதத்தில் கோலம் போடுவது மிகச் சிறப்பாகும். ஏனெனில் மார்கழி மாதமே தேவர்கள் உறக்கத்தில் இருந்து விழித்தெழும் காலம். இறை வழிபாடு சிறப்பாக நடைபெறுகின்றன. இல்லங்களில் சுப நிகழ்வுகள் நடத்துவது இல்லை ஆயினும் இல்லங்களின் முன்பாக கோலங்களை இடுவது சிறப்பு வாய்ந்தது என இந்துக்கள் நம்புகின்றனர். இவ்வாறு கோலம் போடும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய சில விதிமுறைகள் சொல்லப்பட்டுள்ளன. இவற்றைகடைப்பிடித்து நாம் கோலம் போடும் போது வாழ்வில் சகல நன்மைகளும் கிடைக்கும்.

சூரியன் உதிப்பதற்கு முன் நீர் தெளித்துகோலம்போடவேண்டும். தென்திசைபார்த்தோ அல்லது தெற்கில்முடியும்படியோகோலம்போடக் கூடாது. கோலத்தின்நடுவில்செம்பருத்தி, பூசணிப்பூ என்பவற்றை வைத்தால் செல்வம் பெருகும். கோலம் இட்டதும் அதன் மேல்காவி இடுவதுநன்மைதரும். பௌர்ணமிதினத்தில்தாமரைக்கோலம்போடுவது நல்லது. அபரக் கிரியைகளின் போது கோலமிடக்கூடாது. இடதுகையால்கோலம் இடக் கூடாது. அமர்ந்திருந்து கோலம் போடக்கூடாது

> இன்று கோலம் போடும் மரபானது அருகி வருகின்றது. அதுவும் ஆலயங்களில் மட்டுமே கோலங்களை காணமுடிகின்றது. இந்து இல்லங்களில் அதிகளவில் கோலங்களை காண முடிவதில்லை.

**அருகிவரும் மரபு**

ஆனால் இன்று கோலம் போடும் மரபானதுஅருகிவருகின்றது. அதுவும்ஆலயங்களில் மட்டுமே கோலங்களை காணமுடிகின்றது. இந்து இல்லங்களில்அதிகளவில் கோலங்களை காண முடிவ தில்லை. அவைபற்றிநாம்நினைப்பதற்குகூடநேரமில்லாத நிலை இன்று காணப்படுகின்றது. எனவே, எமது முன்னோர்கள் தம் வாழ்வில் அனுபவித்ததான இந்தக் கலாசார மரபை நாம் தொடர்ந்தும் முன்னெடுக்க வேண்டும்.

தினமும்கோலம்போடமுடியாதுவிடினும் வாரத்தில் ஒரு நாள், அல்லது விரத நாள்கள், அல்லது பண்டிகை நாள்கள், அல்லதுசுபதினவிழாக்களின்போதாவது நாம்கோலம்போடும்மரபினைகடைப்பிடிக்க வேண்டும்.

எவ்வாறு கோலம் போட வேண்டும், அதனால் கிடைக்கும்நன்மைகள் எவை என நாம்அடுத்துவரும்சந்ததிக்கும்சொல்லிக் கொடுக்க வேண்டும். இதன் மூலம் அவர்கள்உடல்,உளநலம்பெற்றுஇனியவாழ்வு வாழ்வதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுத்து விட முடிகிறது.

# இடிப்பார் இல்லையில் கெடுவாய்!

புலவர் வள்ளுவதாசன்

இடிப்பாரை இல்லா ஏமரா மன்னன் கெடுப்பார் இல்லானும்கெடும்' எனும்குறட்பா, பெரியாரைத் துணைக்கோடல்என்னும்அதிகாரத்திலே 448 ஆவது பாவாக அமைந்துள்ளது. இந்தக் குறட்பாவுக்கு உரை எழுதிய பேராசிரியர் இரா. ரஜேந்திரன் என்னகூறுகிறார் என்பதைச் சற்று நோக்குவோம். தவறு கண்டபோது இடித்துச்சொல்லித்திருத்துகின்ற பெரியோர் துணையாக இல்லாவிடின், கெடுப்பவர்கள் இல்லாத போதும் தானே தவறிக் கெடுவான் என்பதோடு முடித்து விடுகிறார்.

இந்தக் குறட்பாவுக்கான பொருளைச் சற்று விரிவாக ஆராய்வோம். தமிழ்மன்னர்கள ஆண்டகாலத்தில்அவைப் புலவர், இராஜ குரு, மந்திரிப் பிரதானிகள் என்று பெரும் அறிஞர்களும் அரியாசனத்தோடு சரியாசனம் பெற்று



அரசனை நல்வழியில் இருந்து தவறாது அறிவுரை நல்கினர். அதனால்அரசனும்செங்கோலோச்சிநாட்டையும் மக்களையும் காத்து வந்தான் என்பது வரலாறுகள் மூலம் அறியக்கிடக்கின்றது. இதைவிடுத்து, தான்தோன்றித்தனமாகவாழ்ந்தமன்னர்களின் ஆட்சியானதுநெடுநாள் நிலைத்ததில்லை என்பதெல்லாம் வரலாறு புகட்டும் பாடங்கள். அப்படியான அரசவையில் இருந்து அனைத்தையும் கவனித்து வந்த வள்ளுவப் பெருந்தகையின் பட்டறிவு தான் குறட்பாக்களாக மலர்ந்தன என்பது பொருத்தமுடையதாகும். அறிஞர்களுடைய அறிவுரைகளைக்கேளாதமன்னர்கள் கெட்டலைவர் என்பதற்குப் பல சான்றுகள் இருக்கின்றன. இன்றோ, வீடு சுடும் ராசாவுக்கு நெருப்பெடுத்துக் கொடுக்கும் நிலைதான் வளர்ந்து வருகிறது. அதுவும் இந்த நாட்டு மக்கள் செய்த தவந்தானோ யாரறிவார்?







# கவிஞர் சி.வசீகரனின் 'பூவரசம் தொட்டில்' கவிதை நூல் வெளியீட்டு விழா

யோ.புரட்சி



'ஒற்றையடிப் பாதை
நடந்துக்க நடந்துக்க
ரெட்டையடி வைத்து
நடந்துக்க நடந்துக்க
கட்ட விரல் புடித்து
தொடந்துக்க தொடந்துக்க
பட்டுப்புழுப் பாதம்
தொட்டுக்க தொட்டுக்க...'

இவ்வாறு ஒற்றையடிப் பாதை என்ற கவிதையில் கிராமியம் முளைவிடக் கவி தொடர்கிறார் சி.வசீகரன். கவிஞர் சி.வசீகரன் பதினைந்து வருடங்களாக எழுத்துலகில் இயங்கி வருபவர். ஆயினும் இப்போதுதான் தன்னுடைய முதலாவது நூலை வெளிக்கொணர்ந்திருக்கிறார்.

சுவிட்சர்லாந்து தேசத்தில் வசிக்கும் கவிஞர் சி.வசீகரன் எழுதி, வள்ளுவர்புரம் 'செல்லமுத்து வெளியீட்டகம்' வெளியிட்ட 'பூவரசம் தொட்டில்' கவிதை நூலின் வெளியீட்டு விழாவானது, கடந்த 06ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 02.00 மணிக்கு, அல்வாய் வடக்கு குச்சம் ஞானவைரவர் கோவிலடி மண்டபத்தில் இடம்பெற்றது. நூலின் தலைப்புக்குத் தகுந்தாற்போல் பூவரசம் வேலிகள் அருகிருக்க நிகழ்விடம் அமையப்பெற்றிருந்தமை சிறப்பானதாக இருந்தது. தவிரவும் நிறைவான வருகையாளர்கள் அரங்கை நிறைத்திருந்தனர்.

நிகழ்வுக்கு ஓய்வுபெற்ற பாடசாலை அதிபரும் சமாதான நீதவானுமாகிய கி.கணேசன் தலைமை வகித்தார்.

அகவணக்கத்தைத் தொடர்ந்து தமிழ்மொழி வாழ்த்தை மாணவிகள் அபர்னா, கிசானி ஆகியோர் இசைத்தனர். வரவேற்புரையை கவிஞர் மடத்துக்கடவை த.மோகன்ராஜ் வழங்கினார். அறிமுக உரையை கலாபூஷணம் நடராஜா இராமநாதன் ஆற்றினார். வெளியீட்டுரையை செல்லமுத்து வெளியீட்டகம் இயக்குநர் யோ.புரட்சி நிகழ்த்தினார். தொடர்ந்து 'பூவரசம் தொட்டில்' கவிதைநூல் வெளியீடு செய்யப்பட்டது. நூலின் முதற்பிரதியை கலாபூஷணம் கவிஞர் நடராஜா இராமநாதன் வெளியிட்டு வைக்க, முதல்பிரதியை றோயல் ஒப்ரிக்கல் உரிமையாளர் மு.கோவிந்த ராஜா பெற்றுக்கொண்டார்.

தொடர்ந்து அனைவருக்கும் நூலின் பிரதிகள் வழங்கப்பட்டது.

நூலின் ஆய்வுரையை எழுத்தாளர், நூலாய்வாளர், சண்டிலிப்பாய் பிரதேச அபிவிருத்தி உத்தியோகத்தர் தர்மினி ரஜீபன் ஆற்றினார். வசீகரனின் கவிதையில் அதிகமாக மிளிரும் கிராமியத் தன்மையையும், மூத்தோர்கள் பயன்படுத்தி இன்று அரிதாகவுள்ள சொற்கள் பயன்படுத்தப்பட்டமையும் தர்மினி தனதுரையில் சுட்டிக்காட்டினார்.

தொடர்ந்து வாழ்த்துரைகளைக் கவிஞர் வே.அகிலன், ஆசிரியை சுபாஜினி உதயகுமார், நக்கீரன் சனசமூக நிலைய தலைவர் க.தவயோகநாதன் ஆகியோர் வழங்கினர். ஏற்புரையை நூலாசிரியர் சி.வசீகரன் வழங்கினார்.

தனது அடுத்த கவிதை நூலும் விரைவில் வெளிவரும் என்கின்ற செய்தியைத் தனதுரையில் குறிப்பிட்ட வசீகரன் புலம்பெயர் தேசத்தில் வாழ்ந்தாலும், தாயகத்தில் தனது படைப்பை வெளிக்கொணர்வதே மனதுக்குத் திருப்தியளிக்கின்றது என்றார்.

நிகழ்வு நிறைவாகும்வரை நிறைந்த தமிழுறவுகள் நிகழ்வுடன் இணைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

கவிஞர் சி.வசீகரன் அவர்கள் யாழ்ப்பாணம் அல்வாய் ஊரைச் சேர்ந்தவர். சுவிட்சர்லாந்து தேசமிருந்து தாயகத்திற்கான தொடரான சமூகப்பணிகளில் ஈடுபட்டு வருபவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.






முதலாம் பக்கத் தொடர்ச்சி

## சிறுமி...

மேல் நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பளித்தது.

"குற்றவாளி பாதிக்கப்பட்ட சிறுமிக்கு 5 லட்சம் ரூபா இழப்பீட்டை வழங்க வேண்டும். தண்டமாக 10 ஆயிரம் ரூபாவைச் செலுத்த வேண்டும்" என்றும் வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன் உத்தரவிட்டார்.

வவுனியா, ஆச்சிபுரம் கிராமத்தில் 2014ஆம் ஆண்டு மே மாதம் 23ஆம் திகதியன்று 11 வயதுச் சிறுமி ஒருவர் பாலியல் துர்நடத்தைக்கு உட்படுத்தப்பட்டார். சிறுமியை துர்நடத்தைக் குட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் வவுனியாவைச் சேர்ந்த சிவானு இராஜலிங்கம் (வயது - 38) என்ற குடும்பத்தலைவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

சந்தேகநபருக்கு எதிராக கடந்த வருடம் நவம்பர் 16ஆம் திகதி சட்டமா அதிபரால் வவுனியா மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வந்த நிலையில் நேற்றுத் தீர்ப்பு வழங்கப்படும் என்று வவுனியா மேல் நீதிமன்று அறிவித்திருந்தது.

வழக்கின் எதிரி, சிறுமியின் வீட்டுக்கு அவரது தாயார் இல்லாத நேரம் சென்றுள்ளார். அவர் சிறுமியை பாலியல் துர்நடத்தைக்கு உட்படுத்தினார் என்று சாட்சியங்கள் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது என்று மன்று அறிவித்தது.

"சிறுமியை பாலியல் துர்நடத்தைக்கு உட்படுத்திய குற்றத்துக்கு வழக்கின் எதிரிக்கு 20 வருடங்கள் கடூழிய சிறைத் தண்டனை வழங்கப்படுகிறது. குற்றவாளி பாதிக்கப்பட்ட சிறுமிக்கு 5 லட்சம் ரூபா இழப்பீட்டை வழங்க வேண்டும். இழப்பீட்டை வழங்கத் தவறினால் குற்றவாளி மேலும் ஒரு வருட கடூழிய சிறைத் தண்டனையை அனுபவிக்க வேண்டும். மேலும் குற்றவாளி தண்டமாக 10 ஆயிரம் ரூபாவை செலுத்த வேண்டும். தண்டம் பணம் செலுத்தத் தவறின் ஒரு மாதம் சாதாரண சிறை வாசத்தை அனுபவிக்க நேரிடும்" என்று வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன் தண்டனைத் தீர்ப்பை அறிவித்தார்.

வழக்குத் தொடுநர் தரப்பில் அரச சட்டவாதி மாதினி விக்கினேஸ்வரன் வழக்கை நெறிப்படுத்தினார். (வ)


## மரணஅறிவித்தல்

பிறப்பு 07 . 09 . 1948



இறப்பு 14 . 05 . 2017

### கந்தப்பிள்ளை தர்மகுலசிங்கம்

கோப்பாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் வீமன்காமம் பளை, நவாலியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தப்பிள்ளை தர்மகுலசிங்கம் 14.05.2017 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தப்பிள்ளை - சின்னாச்சி தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - கனகம்மா தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற பரமலீலாவின் அன்புக் கணவரும் வனஜா(சுவிஸ்). கேதீஸ்வரன். லிங்கேஸ்வீரன் சர்மிளா ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவறஞ்சினி. பாஸ்கரன். கலைமகள் ஆகியோரின் அன்பு மாமனும் கஜானா. கிருஷ்ணா. மிதுர்சன். அனோஜன். லவீசன். கஸ்தூரி. லபிசாந். சிறீசாந். பிரியங்கா ஆகியோரின் அன்புப் பேரனும் சிவசுப்பிரமணியம் (ஓய்வு பெற்ற சிரேஷ்ட நெசவு மேற்பார்வையாளர்) அவர்களின் அன்புச் சகோதரனும் திருமதி கி.தமயந்தி (சுருக்கெழுத்தாளர் நீதிவான் நீதிமன்றம் - கிளிநொச்சி). திருமதி சி.சிவமேகலை (கிராம அலுவலர் - சண்டிலிப்பாய் பிரதேசசெயலகம்) ஆகியோரின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.05.2017) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நவாலியில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் நவாலி கொத்துக்கட்டி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

அரசடி வீதி, நவாலி தெற்கு,
மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.



## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் ஆசிரியை சியாமளா செந்தில்நாதன் அவர்களின் தந்தையார்

**வல்லிபுரம் நாகராசா**

அவர்கள் 14.05.2017 அன்று காலமாகிவிட்டார். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ஆசிரியர் வட்டம், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி**

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 09 . 05 . 1935



மறைவு 17 . 04 . 2017

### திருமதி சேதுப்பிள்ளை இராசையா

திதி: தேய்பிறை சஷ்டி

அன்னாரின் மறைவுச் செய்திகேட்டு நேரிலும் தொலைத்தொடர்பு சாதனங்களின் ஊடாகவும் அனுதாபச் செய்தி வெளியிட்டவர்கள் மலர்வளையம் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்கள் அன்னாரின் இறுதிச் சடங்கில் கலந்துகொண்டு பலவழிகளிலும் உதவி புரிந்தவர்கள் உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அத்துடன் இன்று (17.05.2017) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் எல்லோரையும் அழைக்கின்றோம்.

**குறிப்பு:- இவ் அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.**

அப்பிளானை, கோப்பாய் மத்தி,
கோப்பாய்.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

# வேலுப்பிள்ளை செல்லத்துரை

**தோற்றம்**
**10.09.1932**

**மறைவு**
**15.05.2017**



யாழ். புன்னாலைக்கட்டுவன் வடக்கைப் பிறப்பிடமாகவும் குப்பிளான் தெற்கை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை செல்லத்துரை 15.05.2017 திங்கட்கிழமை காலை 8.30 மணியளவில் குப்பிளானில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - ஆச்சிமுத்து தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் ஜெகதீஸ்வரி(கனடா), ஜெயக்குமார்(ஜெயம் - சுவிஸ்), ஜெயராசா (சுவிஸ்), ஜெயமாலினி (அமெரிக்கா) ஆகியோ ரின் பாசமிகு தந்தையும் உதயகுமார் (கனடா), நகுலேஸ்வரி (சுவிஸ்), இந்துமதி (சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும் ஜெனிசியா, ரமேஸ், ஜெனுசா ஜெயப்பிரியன், ஜெயாழினி, அபிஷாந்(சுவிஸ்), அக்சயா(கனடா), ஆகியோரின் அன்புப் பேரனும் தேஜேஸ் (சுவிஸ்) அவர்களின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.05.2017) வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் குப்பிளான் கடாகடம்பன் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
**குடும்பத்தினர்.**

**மகேஸ்வரி (மனைவி) - 077 913 8699**

# அரிசி விற்பனை நிலையங்கள் தொடர்ந்தும் சுற்றி வளைப்பு

கொழும்பு, மே 17

அதிக விலைக்கு அரிசி விற்பனை செய்யும் வியாபாரிகளை சுற்றி வளைக்கும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று நுகர்வோர் விவகார சேவைகள் அதிகார சபை தெரிவித்தது.

மரதகஹமுல அரிசி வியாபாரிகளை சுற்றிவளைக்கும் நடவடிக்கைகள் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

கட்டுப்பாட்டு விலையில் அரிசி விற்பனை மேற்கொள்ள முடியாத சூழ்நிலை உருவாக்கப்பட்டுள்ளது என்று கடந்த சில தினங்களாகவே சுட்டிக்காட்டப்பட்டுள்ளது என்று மரதகஹமுல அரிசி உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் பி.கே. ரஞ்சித் குறிப்பிட்டார்.

பெரியளவில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடும் ஒருசில வியாபாரிகளால் இந்த நிலமை உருவாக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

சுற்றி வளைப்புக்காக சென்றிருந்த நுகர்வோர் விவகார அதிகார சபையின் உத்தியோகத்தர்களுக்கும், மரதகஹமுல அரிசி உற்பத்தியாளர்களுக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-5)

# நாட்டின் அபிவிருத்தியின்போது இனம், மதம், கட்சி முக்கியமல்ல

## அரச தலைவர் மைத்திரி தெரிவிப்பு

கொழும்பு, மே 17

நாட்டின் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்காக நிதி ஒதுக்கீடு செய்யும் போது இனம், மதம் அல்லது கட்சி முக்கியமானதல்ல. தேவை மட்டுமே முக்கியமானது.

இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

கதுருவெல முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட மூன்றுமாடி கட்டடத் திறப்பு விழா நேற்று முன்தினம் இடம்பெற்றது.

அந்த நிகழ்வில் உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார் என்று ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் உள்ளதாவது

சிங்கள, தமிழ், முஸ்லிம் இனங்களுக்கு சமூக நியாயத்தை நிறைவேற்றும் அரசியல் சக்தியே எதிர்காலத்தில் ஆட்சியமைக்க முடியும். இனவாதத்துடன் பிரிந்திருக்கும் எவரும் ஆட்சியமைக்க முடியாது. ஒரே நாட்டு மக்களாக அனைவரும் ஒற்றுமையாகவும் சகோதரத்துவத்துடனும் வாழ வேண்டும். அனைத்து இனங்களிலுமுள்ள பிற்போக்கு வாதிகள் பல்வேறு முரண்பாடு களை ஏற்படுத்தி ஒற்றுமையின்மையை விதைக்க முயற்சியெடுக் கின்றனர். அனைவரும் அது தொடர்பில் நுண்ணறிவுடனும் புரிந்துணர்வுடனும் செயற்பட வேண்டும்.

நாட்டின் அபிவிருத்திக்காக அறிவும், பண்பும் நிறைந்த மக்களை உருவாக்குவதற்காக கல்வி வளர்ச்சியடைய வேண்டும். கல்வித்துறையில் பௌதீக மற்றும் மனித வள அபிவிருத்திக்காக எந்தவொரு பின்னடைவுமின்றி தேவையான நிதியை ஒதுக்கீடு செய்வதற்கு அரசு தயாராக இருக்கின்றது என அரச தலைவர் தெரிவித்தார். என்றுள்ளது. (ற-10)

# விபத்தில் காயமடைந்த பெண் உயிரிழப்பு

திருமலை, மே 17

திருகோணமலை புல்மோட்டை பிரதான வீதியில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த வயோதிபப் பெண் சிகிச்சை பயனின்றி நேற்று உயிரிழந்தார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

குச்சவெளி, ஜாயா நகரைச்சேர்ந்த டி.காஸரா உம்மா (வயது70) என்பவரே உயிரிழந்தார்.

இந்தப்பெண் தனது வீட்டுக்கு முன்னாலுள்ள கடையில் உணவு வாங்கச் சென்றபோது மோட்டார் சைக்கிளில் மோதுண்டு படுகாயமடைந்தார்.

மோட்டார் சைக்கிள் செலுத்திய இளைஞன் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். விபத்து தொடர்பாக குச்சவெளிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-ய-45)

# நீர்க்கட்டண மீளாய்வு பிரேரணை சமர்ப்பிப்பு

கொழும்பு, மே 17

நீர்க்கட்டண மீளாய்வு தொடர்பான பிரேரணை நீர் வழங்கல் மற்றும் நகர திட்டமிடல் அமைச்சால் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த வருட இறுதிக்குள் நீர்க்கட்டணம் உயர்த்தப்படும் என்று அமைச்சர் ரவூப் ஹக்கீம் அண்மையில் தெரிவித்திருந்தார் எனவும், அந்தப் பிரேரணை அமைச்சரவை உபகுழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டபின் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்றும் நீர்வழங்கல் மற்றும் நகரத் திட்டமிடல் அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

அமைச்சரவையின் அனுமதி கிடைத் ததும் வர்த்தமானி அறிவித்தல் மூலம் புதிய கட்டணங்கள் அறிவிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (ற)

# விமல் மீதான வழக்கு ஒத்திவைக்கப்பட்டது

கொழும்பு, மே 17

காலவதியான கடவுச்சீட்டுப் பயன்படுத்தியமை தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்சவுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

குற்றப் புலனாய்வுப் பிரிவால் பதிவு செய்யப்பட இந்த வழக்கு நீர்கொழும்பு நீதிவான் மன்றத்தில் விசாரணைக்கு நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்கை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 28 ஆம் திகதி வரை ஒத்திவைக்க நீர்கொழும்பு மேலதிக நீதிவான் கபில துஸ்யந்த உத்தரவிட்டார். (ற-5)

# ரோஹித அபேகுணவர்தன இத்தாலிக்கு செல்ல அனுமதி

கொழும்பு, மே 17

முன்னாள் அமைச்சர் ரோஹித அபேகுணவர்தனவின் சட்டத்தரணிகள் முன்வைத்த வேண்டுகோளை ஏற்ற கொழும்பு மேல் நீதிமன்ற நீதியரசர் ஏ.ஏ.ஆர். ஹெய்யன்துடுவ அவருக்கு இத்தாலி செல்வதற்கான அனுமதியை வழங்கியுள்ளார்.

அவர் ஜீன் மாதம் 5ஆம் திகதிக்கு முன் நாடு திரும்ப வேண்டும் என்று உத்தரவிட்ட நீதியரசர் வழக்கின் அடுத்த விசாரணையை எதிர்வரும் ஜீலை 3 மற்றும் 4ஆம் திகதிகளுக்கு ஒத்திவைத்தார்.

2004 தொடக்கம் 2006ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ரோஹண அபேகுணவர்தன 4.12 கோடி (41.2 மில்லியன்) ரூபாவை சட்டவிரோதமாக சம்பாதித்திருந்தார் என்ற குற்றச்சாட்டின்கீழ் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு இந்த வழக்கைத் தொடுத்திருந்தது. (ற)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலை மாணவன்

செல்வன்

**யோகேஸ்வரன் - சஜீவன்**

வடமாகாண துடுப்பாட்ட அணியில் இணைக்கப்பட்டமையையிட்டு பாராட்டுக்களை தெரிவிப்பதோடு அவர் மேலும் பல சாதனைகளைப் புரிய வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்**
**பாடசாலைச் சமூகம்**
**கிளி/ பூநகரி ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம்.**

## 18 ஆவது பிறந்தநாள் வாழ்த்து




17 . 05 . 2017

திருநெல்வேலி பத்திரகாளி கோயிலடியைச் சேர்ந்த
**திரு.திருமதி தியாகலிங்கம் அமுதா** தம்பதிகளின்
செல்லப் புதல்வன் **தியாகலிங்கம் அபிராம்** (ABIRAM)

தனது பதினெட்டாவது பிறந்த நாளை இன்று (17.05.2017) புதன் கிழமை தனது இல்லத்தில் வெகு விமரிசையாக கொண்டாடுகின்றார் அவரை அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளியம்பாள் அருளாசியுடன் சகல சௌபாக்கியமும் பெற்று நீடூழி வாழ்க வென வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்:**
அம்மப்பா குடும்பம் (அப்பப்பா, அம்மப்பா, அம்மம்மா, அப்பா, அம்மா, மாமாமார், மாமிமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், தம்பிமார், தங்கைமார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள்)
நாவலடி வீதி, திருநெல்வேலி மேற்கு, யாழ்ப்பாணம்.

18 Happy Birthday

## பீமரத சாந்தி வைபவ அழைப்பு

உ

ஸ்வஸ்திஸ்ரீ நிகழும் மங்களகரமான ஏவிளம்பி வருடம் வைகாசி மாதம் 03 ஆம் நாள் (17.05.2017) புதன் கிழமை திருவோண நட்சத்திரமும் ஷஷ்டி திதியும் சித்தயோகமும் கூடிய சுபதினத்தில் வீரபத்திரர் கோயிலடி, கோப்பாய் தெற்கு, கோப்பாயை சேர்ந்த **பாரத்வாஜ கோத்திரம்**

**ப்ரம்மஸ்ரீ சி.ஜோதீந்திரக் குருக்கள்**
**ஸ்ரீமதி ஞானப்பூங்கோதை அம்மா**

தம்பதியினரின் பீமரத சாந்தி வைபவம் இறைவன் திருவருளுடனும், குருவருளுடனும் இல.23/1, விதானையார் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில் என்னும் முகவரியில் உள்ள அவர்களது இல்லத்தில் நடைபெறுகின்றது. உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் இவ்வைபவத்தில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**தங்கள் நல்வரவை நாடும்**

"மதுர ஜோதி"
இல.23/1, விதானையார் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில், யாழ்ப்பாணம்.
077 651 0307, 021 221 6121

ப்ரம்மஸ்ரீ இ.வேதரூபக் குருக்கள்
ஸ்ரீமதி கானசரஸ்வதி குடும்பத்தினர்
ப்ரம்மஸ்ரீ நா.சிவசங்கரக் குருக்கள்
ஸ்ரீமதி கானப்பிரியா குடும்பத்தினர்
ப்ரம்மஸ்ரீ ஜோ.சிவராமசர்மா
ஸ்ரீமதி மதிவதனி குடும்பத்தினர்

## மக்ஸ் தயாரிப்புக்கள்







**வட பகுதியில் 15 வருடங்களாக முன்னிலைப்படுத்தியதற்கான வெற்றியைக் கொண்டாடுவதோடு**

நுகர்வோருக்கும் - விற்பனையாளர்களுக்கும் - விநியோகஸ்தர்களுக்கும்
**மக்ஸ்** தயாரிப்பாளர்கள் தமது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

மேலும் தொடர்ந்தும் எமது தயாரிப்புக்களை வாங்கிப் பயனடையுமாறு கேட்டுகொள்கிறோம். கடந்த பதினைந்து வருடங்களாக எமது தயாரிப்புக்களின் தரத்தில் எவ்வித மாற்றமும் இல்லை என்பதை வாடிக்கையாளர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறோம்.

### மக்ஸ் கல்சியம் நீக்கி

கூடுதலாக கல்சியம் படியக்கூடிய இடமான தண்ணீர் தாங்கி மற்றும் கொமட்டில் இருக்கும் நீர் தாங்கி ( Water flush Lanks) போன்றவற்றில் உள்ள வெள்ளை நிற படிவையும் மிகக் கடினமான கல்சியத்தையும் அகற்றி பக்ரீரியாக்களையும் கொல்லும் தற்பொழுது கல்சியம் நீக்கி ஸ்பிறேயுடனும் மக்ஸ் தயாரிப்பாளர்கள் அறிமுகப்படுத்தியுள்ளனர், எங்களிடம் 4 LTR கான்களும் பெற்றுக்கொள்ளலாம்.

**தொலைபேசி இலக்கம்: 071 426 0027 - கொழும்பு**
**077 607 9355 - யாழ்ப்பாணம்**





### பாவிக்கும் முறை

குளியலறை மற்றும் கண்ணாடி டைல் இடங்களில் சோப் கறைகள், மண் மற்றும் கறைகளை நீக்க ஒரு பங்கு டைல் துப்புரவாக்கும் திரவத்துடன் 20 பங்கு நீர் கலக்கவும். அதிகமான கறையுள்ள இடங்களுக்கு டைல் துப்புரவாக்கும் திரவத்தை நேரடியாகவும் அல்லது ஒரு பங்கு திரவத்தை நேரடியாகவும் அல்லது ஒரு பங்கு திரவத்திற்கு ஒரு பங்கு நீர் கலந்து நன்றாக மொப் பிரஸ்ஸால் கழுவவும். அது துப்புரவான புதுத் தோற்றத்தை அளிக்கும்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### மகிந்த...

குணரத்ன மைத்திரியின் பக்கம் தாவியதுடன் மாகாண அமைச்சராகவும் நேற்றுப் பதவியேற்றார்.

அண்மைய நாள்களாக அரசியல் களத்தை அதிரவைக்கும் காய் நகர்த்தல்கள் வட மத்திய மாகாண சபையில் அரங்கேறி வருகின்றன. வட மத்திய மாகாணத்தின் அதிகாரத்தை மகிந்த அணி கைப்பற்றும் இராஜதந்திரக் காய்நகர்த்தல் இடம்பெற்று வந்தது.

வட மத்திய மாகாண சபையின் அமைச்சராக இருந்த கே. எச்.நந்தசேன அவரது அமைச்சுப் பதவியில் இருந்து முன்னறிவித்தல் இன்றி சுதந்திரக் கட்சியின் தலைவர் என்ற அடிப்படையில் அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவால் நீக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக எஸ். எம்.ரஞ்சித் தனது அமைச்சுப் பதவியைத் துறந்தார்.

இந்த விடயம் பூதாகரமாக, முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவைச் சந்தித்த வட மத்திய மாகாண சபையின் 17 உறுப்பினர்கள் தாம் சுயாதீனமாக இயங்கப்போவதாக அறிவித்தனர். பின்னர் அவர்களில் ஒருவரை மாகாண முதலமைச்சராக நியமிக்கும்படி முதல்வருக்கு 17 பேர் கையொப்பட்மிட்டு மனுவைக் கையளித்திருந்தனர். எனினும், ஆளுநர் குறித்த மனுவை நிராகரித்திருந்தார். இந்த நிலையில். கையொப்பமிட்டிருந்த 17 பேரில் ஒருவரான சுசில் குணரத்ன வட மத்திய மாகாணத்தின் போக்குவரத்து மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சராகப் பதவியேற்றுக் கொண்டதுடன் மைத்திரி அணியின் பக்கம் தாவியுள்ளார். இதன் காரணமாக மகிந்த அணியினர் அதிருப்தியடைந்துள்ளனர். எதிர்வரும் நாள்களில் வட மத்திய மாகாண சபையின் அரசியல் களம் சூடு பிடித்ததாகவே காணப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (த-5)

### இலங்கையில்...

பிரதிநிதி பில் ஜோன்சன் இலங்கையின் பொருளாதார உறுதிப்பாடு குறித்து மகிழ்ச்சி வெளியிட்டுள்ளார். கூட்டு அரசின் பொருளாதார முனைப்புக்கள் வரவேற்கப்படவேண்டியவை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். அமெரிக்கக் காங்கிரஸ் சபைப் பிரதிநிதிகள் இலங்கைக்கு வந்துள்ள நிலையில் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவுடன் நடைபெற்ற சந்திப்பின்போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். வடக்கில் மறுவாழ்வு மற்றும் அபிவிருத்திப் பணிகள் திருப்திகரமான முறையில் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் வடக்கு மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்ய அரசு நடவடிக்கை எடுக்கும் எனவும் பில் ஜோன்சன் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (த-5)

## கண்ணீர் அஞ்சலி

இளைப்பாறிய காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி முதல்வர்

**அமரர் நா.வேலுப்பிள்ளை**

அவர்கள்

பன்னிரண்டு ஆண்டுகள் எமது கல்லூரியில் முதல்வராக அரும்பணியாற்றிய அமரர் நா.வேலுப்பிள்ளை அவர்களின் மறைவு குறித்த எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.



**கல்லூரிச் சமூகத்தினர்,**
**யாழ்ற்ரன் கல்லூரி, காரைநகர்.**

## மரண அறிவித்தல்



**செல்வி சிசிலியா ஐறின் டெய்சி சத்துருக்கல்சிங்கி**

இல.158, பிரதான வீதியை வசிப்பிடமாகக் கொண்ட செல்வி சிசிலியா ஐறின் டெய்சி சத்துருக்கல்சிங்கி 15.05.2017 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.


அன்னாரின் மரணச்சடங்கு இன்று (17.05.2017) புதன் கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**158, பிரதான வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்: ரவிராஜ் அரசநிலை**
**(பெறாமகன்)- 0777642942**

## முதலாம் ஆண்டு நினைவுநாள் அழைப்பு

தோற்றம்
18 . 09 . 1926



மறைவு
27 . 04 . 2016

கடந்தவருடம் (27.04.2016) புதன்கிழமை இறைபதமெய்திய எமது குடும்பத் தலைவர்

**அமரர் செல்லப்பா சபாரெத்தினம்**

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவுநாள் இன்று (17.05.2017) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**52/6, ஈச்சமோட்டை வீதி,**
**சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.**

(சி.எஸ் 3956)
(13)

**சகோதரி, பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 18.04.2017 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி

**அமரர் மனோன்மணி தங்கராஜா**



அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (18.05.2017) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.*

**64/7, முருகமூர்த்தி வீதி,**
**வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்.**

## மரணஅறிவித்தல்

**திருமதி இராசலட்சுமி சிவசோதி**



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் மணிக்கூட்டு வீதியினை வசிப்பிடமாகவும் பிரான்ஸினை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசலட்சுமி சிவசோதி 11.05.2017 வியாழக்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் - பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற சபாபதிப்பிள்ளை - பார்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சிவசோதி (சிற்றம்பலம்) யின் அன்பு மனைவியும் சற்குணராஜா (குணம் - ஜேர்மனி), வரதராஜா (வரதன் -ஜேர்மனி), தேவசுந்தரராஜா (தேவா - லண்டன்), யோகராஜா (சுதா - கனடா), ரஜனி(சச்சு), சுகன்யா (சுகி - பிரான்ஸ்) ஆனந்தராஜா (சுரேஸ் - பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்றவர்களான திருச்செல்வம், தங்கலட்சுமி மற்றும் திருஞானம், தனலட்சுமி(பிரான்ஸ்), திருநாவுக்கரசு (பிரான்ஸ்), யோகலட்சுமி, பாலசிங்கம்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் இரஞ்சினிதேவி (ஜேர்மனி), நிர்மலாதேவி(ஜேர்மனி), இரஞ்சிதாதேவி (லண்டன்), பரமேஸ்வரி (கனடா), தங்கராஜா(பூமகள்), விநாயகமூர்த்தி (பிரான்ஸ்), லோகேஸ்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான வள்ளியம்மை, பரமசிவம் மற்றும் சுசிலாதேவி காலஞ்சென்ற செல்வநாயகம்(பிரான்ஸ்), கமலாதேவி (பிரானஸ்), இராசேந்திரம், சோதிநாயகி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் மகரிஷ், மதுரிஷா காலஞ்சென்ற மதுமிதன் மற்றும் மகனிஷ், மானுஷ், மௌரிஷ், மிதர்ஷியா, மர்துளன், மகிழ்னன், மேர்சிகீரன், மதுசுதன், மர்மிதா(சுருதி), மரூசன், மரூசியா, மேகலன்,சித்தன், மயூரா, நாயர், ரேகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் மகிமை, மிகன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.05.2017) வியாழக்கிழமை பிரான்ஸில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**06, இந்து மகளிர் கல்லூரி வீதி,**
**கந்தர்மடம்,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**மருமகன் - தங்கராஜா**
**மகள் - ரஜனி**

## மரணஅறிவித்தல்



**கலாபூசணம் கலைவேந்தன்**

**மரியான் பொனிபஸ் தைரியநாதன்**

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட ம.பொ.தைரியநாதன் நேற்று (16.05.2017) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மரியான் -வைத்தியானம் தம்பதியரின் இளைய மகனும் காலஞ்சென்ற பண்டாரம் -சின்னம்மா தம்பதியரின் மருமகனும் தங்கேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கிறிஸ்துராஜா, பரிமளபுஸ்பம், மேரி செலின், லில்லிமலர் மற்றும் சந்தியாப்பிள்ளை ஆகியோரின் சகோதரனும் யஸ்ரின் யசோதன், யஸ்மின் ஒயலூட்(கண்ணன்), யஸ்ரின் ஜெயலூட்(பட்டன்), சுஜானந்தி, யஸ்ரின் மினோசன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஓம்சக்தி, கல்யாணி, ஜெயப்பிரபா, கிருபராசா ஆகியோரின் அன்பு மாமனாரும் நிலாந்தி, புராதனி, பார்கவி, ஆதிரன், மிர்ணாளினி, நேகாஷினி, தனன்ஷேன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (17.05.2017) புதன்கிழமை பி.ப 1.30 மணியளவில் யாழ் திருமறைக்கலாமன்ற பிரதான மண்டபத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பி.ப 3.00 மணியளவில் சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு புனித அந்தோனியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**73, பலாலி வீதி,**
**திருநெல்வேலி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## 5 பிள்ளைகளின்...

அதற்கு வழங்கிய முற்பணத்தைக் கேட்டுச் சென்றபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படுகிறது.

இதில் இலக்கம் 06 , 30 வீட்டுதிட்டம், உதயநகர் மேற்கைச் சேர்ந்த 45 வயதுடைய நாகராசா திருக்குமார் என்பவரே உயிரிழந்துள்ளார். அவருடைய மனைவியான 40 வயதுடைய திருக்குமார் கிருஸ்ணவேணி என்பவர் படுகாயமடைந்துள்ளார்.

மிகுந்த சனசந்தடிமிக்க கனகபுரம் வீதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் பலரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:

உயிரிழந்த நபர் சம்பவம் இடம்பெற்ற கடையை வாடகைக்கு நடத்தி வந்துள்ளார். பின்னர் தொடர்ந்து நடத்தமுடியாத நிலையில் அதனை உரிமையாளரிடம் ஒப்படைத்து விட்டு அதற்கு வழங்கிய முற்பணத்தைத் தருமாறு கோரியுள்ளார்.

பலமுறை கேட்டும் முற்பணம் வழங்கப்படாத காரணத்தால் இரு தரப்பினருக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

உயிரிழந்த நபர் நேற்றையதினம் பணத்தைக் கேட்டுச் சென்றுள்ளார். அப்போது அவரது மனைவியும் குழந்தையும் அவருடன் சென்றுள்ளனர்.

இதன்போது இரு சாராருக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டு வாள்வெட்டு வரை சென்றுள்ளது.

இதன்போது குறித்த கடையின் உரிமையாளர் எனக் கூறப்படும் நபர் உயிரிழந்த நபரையும், அவருடைய மனைவியையும் தாக்கினார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் இடம்பெற்றபோது குழந்தையும் இருந்துள்ளது, குழந்தைக்கு எவ்வித பாதிப்பும் இல்லாத நிலையில் இருவரும் கிளிநொச்சி வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

சம்பவம் தொடர்பில் தீவிர விசாரணை மேற்கொண்ட கிளிநொச்சி பொலிஸார், சம்பவம் நடந்து சில மணிநேரங்களுக்குள் சந்தேகநபரைக் கைது செய்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபருக்கும் தலைப் பகுதியில் சிறிய காயம் ஏற்பட்டிருந்தது. இதனால் அவரைக் கிளிநொச்சி வைத்தியசாலைக்குப் பாதுகாப்பாகக் கொண்டு சென்று மருந்து இடப்பட்டது. அப்போது வைத்தியசாலையில் உயிரிழந்த நபரின் உறவினர்கள் ஆத்திரத்துடன் குழுமி யிருந்தனர். எனினும் அசம்பாவிதங்கள் எவையும் இடம்பெறவில்லை. உறவினர்கள் பிணவறைக்குள் செல்வதற்கும் முயன்றனர். தடுத்த பொலிஸாருடன் முரண்பட்டனர்.

சந்தேகநபர் தீவிர விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். விசாரணைகளின் பின்னர் அவரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று கிளிநொச்சிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (த-ய-06)

## வித்தியா, பல்கலை...

மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டம் நேற்று நடத்தப்பட்டது. வித்தியா படுகொலை வழக்குக்கு விரைந்து நீதி கிடைக்கவேண்டும் எனவும், வழக்கைக் கொழும்புக்கு மாற்றக்கூடாது என்றும் கோரிய பல்கலைக்கழக மாணவர்கள் சமூகம், கடந்த ஆண்டு சுட்டுக் கொல்லப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களுக்கு இன்னமும் நீதி கிடைக்க வில்லை என்று குறிப்பிட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில், பல்கலைக்கழக வளாகத்தில் நேற்று முற்பகல் 11.30 மணிக்கு கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. 'சேயாவுக்கு ஒரு நீதி வித்தியாவுக்கு ஒரு நீதியா?', 'காவு கொள்ளப்பட்ட எம் உறவுகளுக்கு நீதி வேண்டும்?', பிணைப்பட்டு துணைப் போய் திரிய வேண்டாம்' போன்ற வாசகங்கள் எழுதிய சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு அமைதியான போராட்டத்தை முன்னெடுத்தார்கள்.

போராட்டத்தின் நிறைவில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த மாணவர்கள், காலம் தாழ்த்தப்பட்ட நீதி மறுக்கப்பட்ட நீதிக்குச் சமனாகும். எமது நாட்டில் குற்றச் செயல்களும் துர்நடத்தைகளும் அதிகரித்துச் செல்லும் வேளை, அதற்கான நீதிகள் காலம் தாழ்த்தப்பட்டு வழங்கப்படுகின்றது.

வடக்கு மாகாணத்தில் நடைபெறும் வன்புணர்வுச் சம்பவங்களுக்கான தீர்ப்புகள் இரண்டு வருடங்கள் மூன்று வருடங்கள் தாழ்த்தி வழங்கப்படுகின்றது. எதற்காக தண்டனைகள் வழங்கப்பட்டன என்றே தெரியாமல் இருக்கின்றது.

எமது பல்கலைக்கழக மாணவர்கள் இருவரின் உயிர்கள் காவு கொல்லப்பட்டவேளையில், அமைதியான முறையில் எமது போராட்டத்தை முன்னெடுத்து, அரச தலைவர் மைத்திரிபால மற்றும் தலைமை அமைச்சர் ரணில் ஆகியோரிடம் எமது கோரிக்கைகளை முன்வைத்தபோது, மாணவர்கள் அகிம்சை வழியில் போராடுகிறார்கள் என்ற பாராட்டுக் கிடைத்தது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களின் படுகொலைச் சம்பவத்தின் பின்னர் பாதிக்கப்பட்ட மாணவர்களின் வீட்டாருக்கு வீடுகள் வழங்குவதாகவும், மாணவர்களின் படுகொலைக்கான குற்றப்பத்திரம் 3 மாத காலத்துக்குள் வழங்கப்பட்டு உரிய தீர்வைப் பெற்றுத் தருவோம் என்றும் அரச தலைவர் கூறியிருந்தார். 8 மாதங்கள் கடந்த நிலையிலும் கூடக் குற்றப் பத்திரம் தாக்கல் செய்யப்படவில்லை.

வித்தியாவின் வழக்கைக் கொழும்புக்கு மாற்றுவது மாணவர்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. வித்தியாவின் படுகொலைக்கான நீதி எமது சமூகத்தில் ஏற்பட்ட துர்ப்பாக்கிய நிலை. எமது சமூகத்தில் வைத்து நீதி வழங்கும்போது, எதிர்வரும் காலங்களில் இவ்வாறான குற்றங்களைச் செய்வதற்குப் பயப்படலாம். இங்கு நீதியை வழங்கினால், ஏனைய குற்றங்களைத் தடுப்பதற்கும் வழியாக இருக்கும் என்றும் அவர்கள் குறிப்பிட்டனர். (த-5-106)

## முள்ளிவாய்க்கால்...

நினைவு கூரவேண்டும். நாளைய நாள் தமிழருக்குத் தேசிய துக்கநாளாகும். முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் அனைவரும் சங்கமிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன் என்று, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் கோரிக்கை விடுத்துள்ளார்.

மனிதப் பேரவலம் நடந்து எட்டாண்டுகள் நிறைவில், அந்தக் கொடூரத்தின் வெப்பம் தணியாத நிலையில், தமிழ் மக்கள் அந்தத் துயரத்தைநினைவுகூர்ந்துமுள்ளிவாய்க்கால் நினைவேந்தலை கடைப்பிடித்து வருகின்றனர். இந்த நினைவேந்தல் நிகழ்வுகள், குருதி தோய்ந்த முள்ளிவாய்க்கால் மண்ணில் நாளை நடைபெறவுள்ளது.

இது தொடர்பில் இரா.சம்பந்தன் மேலும் தெரிவித்ததாவது,

இறுதிப் போரில் பெருந்தொகையான தமிழ் மக்கள் அரச படைகளின் கண்மூடித்தனமான தாக்குதல்களில் ஈவிரக்கமின்றிக் கொல்லப்பட்டனர். அதேவேளை, தமிழ் மக்கள் பலர் காணாமல் ஆக்கப்பட்டனர்.

வன்னியில் கண்காணிப்பு நடவடிக்கைளில் ஈடுபட்டு மக்களுக்கு உதவிகளை வழங்கி வந்த பன்னாட்டு நிறுவனங்கள் மற்றும் அமைப்புகள் அங்கிருந்து அரச படைகளினால் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டன. பன்னாட்டுச் சாட்சியங்கள் எதுவுமின்றி பன்னாட்டு போர் விதிகளுக்கு முரணாக இறுதிப் போர் நடைபெற்றது.

இறுதிப் போரில் அரச படைகளின் ஆயுதங்களால் மட்டுமன்றி உணவுகள் இல்லாமலும், மருந்துகள் இல்லாமலும், பாதுகாப்பாகத் தங்குவதற்கு இடங்கள் இல்லாமலும் எமது மக்கள் பலர் சாகடிக்கப்பட்டனர்.

மகிந்த ஆட்சியில் தமிழ் மக்கள் மீது நடத்தப்பட்ட இந்தத் திட்டமிட்ட கொடூரத் தாக்குதல்கள் தொடர்பில் அப்போது நான் நாடாளுமன்றில் பல உரைகளை ஆற்றியிருந்தேன். போரை உடன் நிறுத்தும்படியும் ஆட்சியில் இருந்த அரசைக் கேட்டிருந்தேன். தமிழ் மக்களுக்குப் பெரிய இழப்புகளைக் கொடுத்துத்தான் அரசு போரை முடிவுக்குக் கொண்டு வந்தது.

பாதிக்கப்பட்ட எமது மக்களுக்கு நீதியைப் பெற்றுத் தருமாறு பன்னாட்டுச் சமூகத்தை இன்று நாம் கோரி நிற்கின்றோம்.

நாளை மே 18ஆம் திகதி தமிழருக்கு தேசிய துக்க நாள். அரச படைகளால் எமது இனம் திட்டமிட்டு ஈவிரக்கமின்றி சிதைக்கப்பட்ட நாள். இழந்த எமது உறவுகளை சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தி நினைவுகூரும் நாள். தமிழர்களாகிய நாம் அனைவரும் நாளைய தினம் ஓரணியில் நின்று இதனைச் செய்ய வேண்டும். இவ்வாறு நாம் செய்வதன் ஊடாக போரின்போது உயிரிழந்த எமது மக்களின் ஆத்மா சாந்தியடையும் -என்றார். (த-5)

## முள்ளிவாய்க்காலில்...

வடக்கு மாகாண சபையின் ஏற்பாட்டில், முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள், முள்ளிவாய்க்கால் கிழக்கு கப்பலடிப் பாதையில் கடந்த ஆண்டு நடைபெற்றன. இந்த ஆண்டும் அங்கு நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டு அமைக்கப்பட்ட தூபி சேதமடைந்திருந்தது. தற்போது அது சீரமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் அதனைச் சுற்றி யுள்ள பிரதேசம் சிமெந்துப் பூச்சால் வடிவமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் நினைவேந்தலுக்கு மக்கள் ஒன்றுகூடும் இடங்களும் துப்புரவு செய்யப்பட்டுள்ளன. (த-57)

## பல்கலை...

விடுவிக்கக் கோரி யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் முன்வைக்கப்பட்ட மனு மீதான விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

பொலிஸாரின் பிணை மனு யாழ்ப்பாணம் மேல் மன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தது.

“5 பொலிஸாரும் 6 மாதங்களுக்கு மேலாக விளக்கமறியலில் உள்ளனர். அவர்கள் அனைவரும் திருமணமானவர்கள். பாடசாலை செல்லும் பிள்ளைகளும் அவர்களுக்கு இருக்கின்றார்கள்.

“பல்கலைக்கழக மாணவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்ட சம்பவத்தை பத்திரிகைகளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும்தான் திரிபு படுத்திவிட்டன. பல்கலைக்கழக மாணவர்களுக்கு நள்ளிரவு 12 மணிக்கு வீதியில் என்ன வேலை? சம்பவத்தில் குற்றஞ்சாட்டப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பொலிஸாரை பிணையில் மன்று விடுவிக்க வேண்டும். இந்த மனு தொடர்பான அறிவித்தல்களை எதிர் மனுதாரர்களுக்கு அனுப்ப உத்தரவு வழங்க வேண்டும்” என்று மனுதாரர்களின் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி மு.றெமிடியஸ் மன்றில் விண்ணப்பம் செய்தார்.

பிணை மனுவில் குறிப்பிட்ட எதிர்மனுதாரர்களுக்கு அறிவித்தல் அனுப்ப மன்று கட்டளையிட்டது.

“துப்பாக்கிச் சூடு நடத்தியது யார்? யார் வைத்திருந்த துப்பாக்கியின் ரவைகள் குறைவாக காணப்படுகின்றன? பொலிஸாருக்கு துப்பாக்கியுடன் வழங்கப்பட்ட ரவைகள் எத்தனை? எந்தத் துப்பாக்கியால் மாணவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது? போன்றவற்றை மன்று பரிசீலனைக்கு எடுக்கும். சம்பவம் தொடர்பான சுருக்கமுறையற்ற விசாரணைகளை முன்னெடுக்கும் குற்றப் புலனாய்வுப் பிரிவினரை அழைத்து, அரச சட்டவாதி அவர்களிடம் சம்பவம் தொடர்பான விவரத்தை அறிய வேண்டும்” என்று யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன் அறிவித்தார்.

பிணை மனு விசாரணையை ஜூன் 20ஆம் திகதி வரை மன்று ஒத்திவைத்தது. (வ-12)

## பின்வாங்குகிறது...

இவ்வாறு பன்னாட்டு நெருக்கடிக் குழு நேற்று வெளியிட்ட தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன பதவியேற்று இரண்டு வருடங்கள் கடந்து விட்டன. இலங்கையில் கட்சிகள், இனங்கள் மத்தியில் நிரந்தர அமைதியும் ஒத்துழைப்பும் ஏற்படும் என்ற எதிர்பார்ப்புக்கள் குறைவடையத் தொடங்கியுள்ளன. கூட்டு அரசின் சீர்திருத்த நிகழ்ச்சிநிரலின் வேகம் குறைவடைந்துள்ளது அல்லது அதிலிருந்து அரசு பின்வாங்கியுள்ளது. சமூக ரீதியிலான பதற்றங்கள் அதிகரித்து கூட்டு அரசு மெல்ல மெல்ல உடைந்து கொண்டிருக்கின்றது. இந்தத் தருணத்தில் புதிய அரசமைப்பை நாடாளுமன்றம் ஊடாக நிறைவேற்ற முடியுமா என்ற சந்தேகம் உருவாகியுள்ளது. அதிகளவில் அனைவரையும் உள்வாங்கும் கொள்கை குறித்தோ அல்லது தேசிய பாதுகாப்புக் கட்டமைப்பை சீர்திருத்துவது குறித்தோ அரச தலைவரும், தலைமை அமைச்சரும் தீவிர முயற்சிகளை மேற்கொள்ளவில்லை.

தேசிய பாதுகாப்புத்துறையில் சீர்திருத்தத்தை மேற்கொள்வதற்கோ அல்லது இராணுவத்தின் அதிகாரங்களைக் குறைப்பதற்கோ நடவடிக்கை எதனையும் எடுக்கவில்லை.

இலங்கை அரசு மனித உரிமைகள் மற்றும் அதிகார துஷ்பிரயோகங்களில் ஈடுபட்டவர்களுக்குத் தண்டனையின் பிடியிலிருந்து விலக்களிக்கும் கலாசாரத்தை முடிவுக்குக் கொண்டு வராமல் இழுத்தடிக்கின்றது. சித்திரவதைகள் வழமையானவையாகக் காணப்படுகின்றன. பயங்கரவாதத் தடைச் சட்டம் இன்னமும் அகற்றப்படவில்லை

நிலைமாற்றுக்கால நீதி குறித்த அரசின் திட்டங்கள் இன்னமும் நடைமுறைக்கு வரவில்லை.

காணாமற்போனவர்கள் அலுவலகத்துக்கு 2016 இல் நாடாளுமன்றம் அங்கீகாரம் வழங்கியபோதிலும் அது ஏற்படுத்தப்படுவதை மைத்திரிபால சிறிசேன தடுத்து வருகின்றார். 2015 ஆம் ஆண்டில் பன்னாட்டுச் சமூகத்துக்கு வாக்குறுதியளிக்கப்பட்டுள்ள பொறிமுறைகள் நடைமுறைக்கு வருமா என்பது குறித்து சந்தேகம் உருவாகியுள்ளது என்றுள்ளது. (த-5)

## மகிந்தவின்...

தியக் கூறுகளை நிராகரிக்கக் கூடாது.

இவ்வாறு பன்னாட்டு நெருக்கடிக் குழு நேற்று வெளியிட்ட தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

மோதல்கள் மற்றும் ஸ்திரமின்மைக்கான அடிப்படை காரணங்களுக்குத் தீர்வைக் காண்பதற்கான வாய்ப்புகளைக் காப்பாற்றுவதற்காக அரசு தனது நல்லாட்சி மற்றும் நல்லிணக்க நிகழ்ச்சி நிரலுக்குத் திரும்ப வேண்டியுள்ளது. ஊழல் மற்றும் தண்டனையின் பிடியிலிருந்து விலக்களிக்கப்படுதல் ஆகியவற்றுக்கு எதிரான போராட்டத்தை முன்னெடுப்பதற்கு அரச தலைமை மீள உறுதி பூண வேண்டும். வலுவான அதிகாரப் பகிர்வை உள்ளடக்கிய புதிய அரசமைப்பு பற்றிய முடிவை எடுப்பதற்காக அரச தலைவர் வலுவான தொனியில் பேசவேண்டும். சீர்திருத்தங்களால் நாட்டின் அனைத்து மக்களுக்கும் கிடைக்கக் கூடிய நன்மைகள் குறித்து தெளிவுபடுத்தும் பரப்புரையை அவர் முன்னெடுக்கவேண்டும்.

நிலைமாற்றுக்கான நீதிக்கான நம்பிக்கைகளைப் புதுப்பிப்பதற்காக காணாமற்போனவர்களுக்கான அலுவலகத்தைத் துரிதமாக அரசு ஏற்படுத்தவேண்டியுள்ளது. வடக்கு கிழக்கில் படையினரின் எண்ணிக்கையைக் குறைக்கவேண்டும்.

இரு கட்சிகளிலுமுள்ள தலைவர்களும் ராஜபக்சவின் மீள்வருகைக்கான சாத்தியக்கூறுகளை நிராகரிக்கக்கூடாது. தங்களின் அரசியல் தப்பிப் பிழைத்தலுக்காகவும் வழங்கப்பட்ட முக்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றவும் சிறிசேனவும், ரணில் விக்கிரமசிங்கவும் தங்கள் பேரினவாதக் கொள்கையையும் நாளாந்தக் கொள்கையையும் கைவிடவேண்டும்என்றுள்ளது. (த-5)

## வாள்வெட்டு...

யச் சிறைத் தண்டனையும் விதித்து யாழ்ப்பாணம் நீதிவான் மன்று நேற்றுத் தீர்ப்பளித்தது.

2012ஆம் ஆண்டு யாழ்ப்பாணம், மடத்தடியில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தையடுத்து 8 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். அவர்கள் 8 பேர் உள்ளடங்கிய கும்பலுக்கு டில்லு என்று பிற்காலத்தில் பொலிஸார் பெயரும் வைத்தனர். டில்லு உள்ளிட்ட 8 சந்தேகநபர்கள் மீதான வழக்கு விசாரணைகள் யாழ்ப்பாணம் நீதிவான் மன்றில் இடம்பெற்றன.

இந்த வழக்கின் தீர்ப்பு நேற்று செவ்வாய்க்கிழமை வழக்கப்படும் என்று மன்று கடந்த தவணையின் போது அறிவித்திருந்தது. மன்றில் சந்தேகநபர்கள் சார்பில்அரச தலைவர் சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், சட்டத்தரணி மு.றெமிடியஸ் உள்ளிட்டோர் முன்னிலையாகினர்.

வாளால் வெட்டி ஒருவருக்கு 8 காயங்களை ஏற்படுத்திய குற்றத்துக்கு 3 பேருக்கு 3 ஆண்டுகள் கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்படுகிறது. அவர்களுக்கு உடந்தையாகவிருந்த ஏனைய 5 பேருக்கும் ஒரு வருட கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்படுகிறது. குற்றவாளிகள் அனைவரும் பாதிக்கப்பட்டவருக்கு தலா 50 ஆயிரம் ரூபா இழப்பீடு வழங்க வேண்டும்” என்று யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் சி.சதீஸ்தரன் உத்தரவிட்டார். (வ-12)

# குழந்தைகளை தத்தெடுக்கிறார் மனீஷா கொய்ராலா

இந்தி, தமிழ் திரையுலகின் பிரபல நடிகையாகத் திகழ்ந்தவர் நடிகை மனீஷா கொய்ராலா. ஆனால் அவரது சொந்த வாழ்க்கை சோகமானது.
திருமண உறவு நீடிக்காமல் விவாகரத்துப் பெற்றார். தொடர்ந்து புற்றுநோயால் அவதிப்பட்டு வந்தவர், பின்னர் அதிலிருந்து மீண்டார். இப்போது எல்லாப் பிரச்சினை களையும் கடந்து மீண்டும் சினிமாவில் நடிக்கத் தொடங்கியிருக்கிறார்.
"டியர் மாயா" என்ற படத்தில் நடித்துள்ளார். விரைவில் இப்படம் வெளியாகவுள்ளது. இதனிடையே மனீஷா, இரண்டு பெண் குழந்தைகளைத் தத்தெடுக்கவுள்ளார். இது குறித்து மனீஷா கூறியிருப்பதாவது. "இரண்டு பெண் குழந்தைகளைத் தத்தெடுத்து தாய் ஆகலாம் என்று எண்ணியுள்ளேன். அதற்காகச் சட்ட ரீதியான பணிகளைத் தொடக்கியுள்ளேன். இந்தாண்டு இறுதிக்குள் அல்லது 2018இல் குழந்தைகளைத் தத்தெடுத்துவிடுவேன்" என்றார்.



# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | 7 | | 3 |
| 2 | 5 | | | | | | 1 | |
| | | | 5 | 6 | | 9 | | |
| 3 | | 9 | | | | 5 | | |
| | | | 1 | 9 | 8 | | | |
| | | 7 | | | | 2 | | 8 |
| | | 6 | | 8 | 4 | | | |
| | 1 | | | | | | 4 | 5 |
| 4 | | 2 | | | | | | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 4 | 7 | 3 | 6 | 8 | 5 | 9 | 1 |
| 6 | 9 | 3 | 1 | 4 | 5 | 7 | 8 | 2 |
| 1 | 8 | 5 | 9 | 7 | 2 | 4 | 6 | 3 |
| 8 | 5 | 1 | 2 | 3 | 4 | 6 | 7 | 9 |
| 7 | 2 | 4 | 5 | 9 | 6 | 3 | 1 | 8 |
| 9 | 3 | 6 | 8 | 1 | 7 | 2 | 5 | 4 |
| 3 | 6 | 2 | 7 | 8 | 9 | 1 | 4 | 5 |
| 5 | 7 | 9 | 4 | 2 | 1 | 8 | 3 | 6 |
| 4 | 1 | 8 | 6 | 5 | 3 | 9 | 2 | 7 |

சுடோக்கு
ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன அடிப்படை. 1–9 வரையான எண் களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

தோளுக்கு மேல் வளர்ந்த பெண்ணையோ பையனையோ தயங்காம பளார்ன்னு அறையும் தைரியம்...



அப்பாவைவிட அம்மாவுக்கே அதிகம் உண்டு....!

எப்படியாவது கஷ்டப்பட்டு முன்னுக்கு வரலாம் என்று நினைக்கும் போதுதான்...



ஏதாவது ஒரு கஷ்டம் முன்னுக்கு வருது...

உலகத்துலேயே சிறந்த அலாரம் அம்மாதான்...



7 மணிக்கு எழுப்ப சொன்னா 6 மணிக்கே 8 மணி ஆயிடிச்சின்னு சொல்லி எழுப்புவாங்க...

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** அடுத்தவர் நலனில் அக்கறை கொள்வீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் தாராள பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர். பெண்கள் விருந்து, விழாவில் பங்கேற்பீர்கள்.

**இடபம்:** கடந்த கால நற்செயலுக்கான நன்மை தேடிவரும். தொழில், வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். கடனில் ஒரு பகுதி அடைபடும். பெண்கள், அக்கம்பக்கத்தினரின் அன்பைப் பெறுவர்.

**மிதுனம்:** மற்றவர் விடயத்தில் கருத்துச் சொல்ல வேண்டாம். குடும்பத்தேவை அனைத்தும் நிறைவேறும். தொழிலில் வருகிற இடையூறுகளை முறியடிப்பீர்கள். எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும்.

**கடகம்:** தடைகளை முறியடித்து முன்னேறுவீர்கள். கடந்த கால முயற்சிக்கான பலன் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் மறைமுகப் போட்டி மறையும். லாபம் உயரும். பெண்கள் சிக்கனம் மூலம் சேமிப்பர்.

**சிங்கம்:** விடாமுயற்சிக்கான பலன் ஓரளவு கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் போட்டி குறுக்கிடலாம். லாபம் மிதமாக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமையைத் திறம்படச் சமாளிப்பர்.

**கன்னி:** உங்களின் நற்செயலைச் சிலர் பரிகாசம் செய்யலாம். தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். பெண்களுக்கு வீட்டுச் செலவு அதிகரிக்கும்.

**துலாம்:** தன்னம்பிக்கையுடன் செயல்பட்டு வருவீர்கள். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்குப் பூர்த்தியாகும். வருமானம் பன்மடங்கு உயரும். ஆரோக்கியம் பலம் பெறும்.

**விருச்சிகம்:** யாருக்கும் தகுதிக்கு மீறிய வாக்குறுதி தர வேண்டாம். தொழில், வியாபாரத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். பணியாளர்கள், சக ஊழியர்களுடன் கருத்து வேறுபாடு கொள்வர்.

**தனுசு:** சாமர்த்தியமாகச் செயல்பட்டு வருவீர்கள். குடும்பத்தில் நிம்மதியும், மகிழ்ச்சியும் ஏற்படும். தொழில், வியாபாரத்தில் வருமானம் திருப்தி அளிக்கும். உறவி னர்களின் உதவி கிடைக்கும்.

**மகரம்:** திட்டமிட்டுச் செயல்பட்டு வளர்ச்சி அடைவீர்கள். தொழில், வியாபாரத்தில் சேமிக்கும் விதத்தில் வருமானம் வரும். பணியாளர்கள் சம்பள உயர்வைப் பெற்று மகிழ்வர்.

**கும்பம்:** குடும்பத்தினரின் அன்பும், ஆதரவும் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் போட்டி குறுக்கிட்டாலும் லாபம் குறையாது. பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெற்று மகிழ்வர்.

**மீனம்:** உறவினர்களால் சிரமத்துக்கு ஆளாகலாம். தொழில், வியாபாரத்தில் மிதமான வருமானம் கிடைக்கும். பணியாளர்கள், நிர்வாகத்தினரின் ஆதரவைப் பெறுவர். பிள்ளைகளின் நலனில் அக்கறை கொள்வர்.

அபிவீரன் @Akku_Twitz
கோபத்தை கோபம் கொண்டவர்கள் மீது மட்டும் காட்டுவதை விட்டு உங்கள் அன்புக்காக ஏங்குபவர் மீது கோபத்தைக் காட்டி உதாசீனப்படுத்துவது நியாயமற்றது

நோயாளி: தினமும் ஒரு பச்சை முட்டை சாப்பிடணுமா...
என்னால முடியாது டாக்டர்.
மருத்துவர்: ஏன் முடியாது?
நோயாளி: ஏன்னா எங்க கோழி வெள்ளை முட்டைதான் போடும்



## அச்செழு, கலைமதி இறுதியில்

யாழ்ப்பாணம், மே 17
கோப்பாய் பிரதேச செயலகத்துக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் அச்செழு, கலைமதி அணிகள் இறுதிக்குத் தகுதிபெற்றன. புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இந்த அரையிறுதி ஆட்டங்கள் நடைபெற்றன.

முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் அச்செழு இளைஞர் கழகத்தை எதிர்த்து ஆவரங்கால் கிழக்கு இளைஞர் கழகம் மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில. எந்த அணியாலும் கோலெதுவும் பதிவாகவில்லை. சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்எடிய நிலை ஏற்பட்டது. 4:3 என்ற கோல் கணக்கில் அச்செழு இளைஞர் கழகம் வெற்றிபெற்றது.

இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் புத்தூர் கலைமதி இளைஞர் கழகத்தை எதிர்த்து புத்தூர் கிழக்கு இளைஞர் கழகம் மோதியது. ஆட்டத்தின் 13ஆவது நிமிடத்தில் கலைமதி அணி முதல் கோலைப் பதிவு செய்தது. வேறெந்த மாற்றமும் ஏற்படாமல் முடிவடைந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியில் நீண்ட நேரமாகக் கோல் எதுவும் பதிவாகவில்லை. ஆட்டம் நிறைவடைய ஒரு நிமிடம் இருக்கையில் பதிலடி கொடுத்தது புத்தூர் கிழக்கு இளைஞர் கழகம்.

நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரு அணிகளும் தலா ஓர் கோலைப் பெற்றிருந்தன. சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றி யைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வென்று இறுதிக்குத் தகுதிபெற்றது கலைமதி. (ம-23)



# ஆவரங்கால் மகாஜனா கரப்பந்தில் சம்பியன்

கரணவாய், மே 17
வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டத்தில் 18 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் ஆவரங்கால் மகாஜனா வித்தியாலயம் நடப்பு வருடச் சம்பியனானது.

நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இந்த இறுதியாட்டம் நடைபெற்றது. ஆவரங்கால் மகாஜனா வித்தியாலயமும் புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி அணியும் மோதின.

மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலாவது செற்றை 25:12 என்ற புள்ளிகள் அடிப்படையில் ஆவரங்கால் மகாஜனா வித்தியாலயம் கைப்பற்றியது. இரண்டாவது செற் 25:14 என்ற புள்ளிகளின் அடிப்படையில் சோமஸ்கந்தாக் கல்லூரியின் வசமானது. முதலிரு செற்களின் நிறைவில் இரு அணிகளும் தலா ஓர் வெற்றியைப் பெற்றிருந்தன.

இறுதி செற்றில் வெற்றிபெறும் அணியே சம்பியன் என்ற நிலை இருந்தது. அந்த செற்றை 25:19 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:1 என்ற செற் கணக்கில் கிண்ணம் வென்றது ஆவரங்கால் மகாஜனா வித்தியாலயம்.

மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் வவுனியா சிறிசுமணா வித்தியாலயமும், இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயமும் மோதின.

இதில் 2:0 என்ற செற்கணக்கில் வெற்றிபெற்று மூன்றாமிடத்தை வவுனியா சிறிசுமணா வித்தியாலயம் தனதாக்கியது. (ம-108)

## விண்மீன் இறுதியில்

யாழ்ப்பாணம், மே 17
குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் பலாலி விண்மீன் அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. குறிஞ்சிக்குமரனின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அரையிறுதி ஆட்டத்தில் ஜோசவாஸ் ஐக்கியம் விளையாட்டுக் கழகமும் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகமும் மோதின. ஆட்டத்தின் மூன்றாவது நிமிடத்தில் விண்மீன் அணியின் நிசாந்தன் முதல் கோலைப் பதிவுசெய்தார். அதுவே முதல் பாதியின் இறுதிக் கோலாகவும் அமைந்தது. இரண்டாம் பாதியில் பதிலடி கொடுத்தது ஜோசவாஸ் நகர் ஐக்கியம். நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரு அணிகளும் தலா ஓர் கோலைப் பதிவுசெய்திருந்தமையால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. முடிவில் 6:5 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிக்குள் நுழைந்தது விண்மீன். (ம-108)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், மே 17
நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகம் யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இன்று சில ஆட்டங்கள் இடம்பெறவுள்ளன.

இதன்படி பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வேலணை ஐயனார் விளையாட்டுக் கழகமும் மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கலட்டி ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து குப்பிளான் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (ம-108)

## எல்லே நாளை

யாழ்ப்பாணம், மே 17
வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான 20 வயதுப்பிரிவு இருபாலாருக்குமான எல்லே தொடர் நாளை முதல் மூன்று தினங்கள் இடம்பெறவுள்ளன. ஆண்களுக்கான ஆட்டங்கள் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்திலும் பெண்களுக்கான ஆட்டங்கள் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்திலும் இடம்பெறவுள்ளன. (ம-108)



## புதுக்குடியிருப்பு மத்திய சமுதாயக் கழகம் வெற்றி

யாழ்ப்பாணம், மே 17
இலங்கை கிரிக்கெட் சபையால் நடத்தப்படும் மூன்றாம் பிரிவு அணிகளுக்கு இடையிலான துடுப்பாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் புதுக்குடியிருப்பு மத்திய சமுதாயக் கழகம் வெற்றிபெற்றது.

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் விசுவமடு தோழர்கள் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து புதுக்குடியிருப்பு மத்திய சமுதாயக் கழகம் மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய விசுவமடு தோழர்கள் அணி 33.2 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 114 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக சர்மிலன் 16 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் பிந்துஜன், நிலவழகன் இருவரும் தலா மூன்று இலக்குகளைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய புதுக்குடியிருப்பு மத்திய சமுதாயக் கழக அணி 27.3 பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து இலக்கை அடைந்து வெற்றி பெற்றது. பிந்துயன் அதிகபட்சமாக 28 ஓட்டங்களைப் பெற்றார். (ம-23)

## கடற்கரை கரப்பந்தில் கிளிநொச்சி ஆதிக்கம்





கிளிநொச்சி, மே 17
வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் நடத்தப்பட்ட மாவட்ட அணிகளுக்கிடையிலான கடற்கரைக் கரப்பந்தாட்டத்தில் ஆண்கள், பெண்கள் என இரு பிரிவிலும் சம்பியனாகியது கிளிநொச்சி மாவட்ட அணி.

**பெண்கள் பிரிவு**
பெண்கள் பிரிவில் கிளிநொச்சியை எதிர்த்து வவுனியா மோதியது. 2:0 என்ற செற் கணக்கில் கிளிநொச்சி அணி வெற்றிபெற்றது. கிளிநொச்சி மாவட்டம் தனது அரையிறுதியில் யாழ்ப்பாணத்தை வீழ்த்தியிருந்தது. வவுனியா மாவட்ட அணி தனது அரையிறுதியில் மன்னாரை வீழ்த்தியது.

**ஆண்கள் பிரிவு**
ஆண்கள் பிரிவிலும் கிளிநொச்சியை எதிர்த்து வவுனியா மாவட்ட அணியே மோதியது. 2:0 என்ற நேர்செற் கணக்கில் கிளிநொச்சி வெற்றிபெற்றது. கிளிநொச்சி மாவட்ட அணி தனது அரையிறுதியில் முல்லைத்தீவையும், வவுனியா மாவட்ட அணி தனது அரையிறுதியில் யாழ்ப்பாணத்தையும் வென்றிருந்தமை குறிப்பி டத்தக்கது. (ம-6)


ஹென்றிஸ் - சேவியர்
இடையிலான ஆட்டத்தின் போது...

பாடசாலைகளின் கால்பந்தாட்டத் தொடர்

# 18 வயது ஆண்கள் காலிறுதி முடிவுகள்

யாழ்ப்பாணம், மே 17

பாடசாலைகளுக்கு இடையிலான மாகாணமட்ட கால்பந்தாட்டத் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரில் 18 வயதுப்பிரிவு ஆண்களுக்கான காலிறுதி ஆட்டங்கள் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி, சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானங்களில் நேற்று நடைபெற்றன. அரையிறுதிக்குத் தகுதிபெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு.

முதலாவது காலிறுதி ஆட்டத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியை எதிர்த்து தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி மோதியது. 3:0 என்ற கோல் கணக்கில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி வெற்றிபெற்றது.

இரண்டாவது காலிறுதி ஆட்டத்தில் வவுனியா செட்டிகுளம் மகா வித்தியாலய அணியை எதிர்த்து நெல்லியடி மத்திய கல்லூரி அணி மோதியது. 1:0 என்ற கோல் கணக்கில் வவுனியா செட்டிகுளம் மகா வித்தியாலய அணி வெற்றிபெற்றது.

மூன்றாவது காலிறுதி ஆட்டத்தில் இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணியை எதிர்த்து மன்னார் சென். சேவியர் ஆண்கள் பாடசாலை அணி மோதியது. 1:0 என்ற கோல் கணக்கில் சென். சேவியர் அணி வெற்றிபெற்றது.

நான்காவது காலிறுதி ஆட்டத்தில் அளம்பில் றோமன் கத்தோலிக்க மகா வித்தியாலய அணியை எதிர்த்து சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி மோதியது. 5:0 என்ற கோல் கணக்கில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி வெற்றிபெற்றது.

அரையிறுதி ஆட்டங்களும் இறுதியாட்டமும் இன்று நடைபெறவுள்ளன. (ம-23)

# நெக்ரா விலகல்

நடப்பு வருட ஐ.பி.எல். தொடரில் இருந்து பாதியில் விலகினார் ஹைதராபாத் அணியின் வேகப்பந்து வீச்சாளர் நெக்ரா. லீக் சுற்றில் கடந்த 6 ஆம் திகதி நடைபெற்ற ஆட்டத்தில் புனே அணியை எதிர்கொண்டது ஹைதராபாத். இந்த ஆட்டத்தில் நெக்ராவின் தொடைப் பகுதியில் காயம் ஏற்பட்டது. இதையடுத்தே அவர் தொடரில் இருந்து விலகினார்.

நெக்ராவின் விலகல் தொடர்பில் அந்த அணியின் தலைமைப் பயிற்சியாளர், "நெக்ராவின் தொடைப் பகுதியில் ஏற்பட்டுள்ள காயம் சிறிது வீரியத் தன்மையுடன் உள்ளதால் அவரால் பிளே ஓவ் சுற்றில் களமிறங்க இயலாது" என்று தெரிவித்தார்.

ஹைதராபாத் அணி பிளே ஓவ் சுற்றில் இன்று கொல்கத்தாவை எதிர்கொள்கிறது. இன்




றைய ஆட்டத்தில் நெக்ரா இல்லாதமை அந்த அணிக்கு பின்னடைவு என்று கருதப்படுகிறது.

கடந்த வருட ஐ.பி.எல். தொடரில் இருந்தும் நெக்ரா பாதியில் விலகினார். அவர் அடிக்கடி காயத்துக்கு உள்ளாகிறார். அவரது வயதையும் கருத்திற்கொண்டு நெக்ராவின் கிரிக்கெட் வாழ்க்கை விரைவில் முடிவுக்கு வரவுள்ளது என்று கருதப்படுகிறது. (ம)

# மட்ரிட் தொடர்; நடால் மகுடம்



மட்ரிட் ரென்னிஸ் தொடரில் (ஸ்பெய்ன் தொடர்) ஆண்கள் ஒற்றையர் பிரிவில் ஸ்பெய்ன் வீரர் ரபேல் நடால் கிண்ணம் வென்றார்.

பன்னாட்டுத் தரப்படுத்தலில் ஐந்தாவது இடத்தில் இருந்த நடாலை எதிர்த்து ஆஸ்திரியா வீரர் தியம் மோதினார். மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலாவது செற்றை 7:6 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார் நடால். அவர் தனது ஆதிக்கத்தைத் தொடர்ந்தும் தக்கவைத்து இரண்டாவது செற்றையும் 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார். முடிவில் 2:0 என்ற செற் கணக்கில் கிண்ணம் வென்றார். 30 வயதாகும் நடால் கைப்பற்றிய 30ஆவது மாஸ்டர்ஸ் கிண்ணம் இதுவாகும். முன்னதாக நான்கு தடவைகள் நடால் மட்ரிட் கிண்ணத்தைக் கைப்பற்றியிருந்தார். இந்தத் தொடர் அவரது ஐந்தாவது கிண்ணமாக அமைந்தது.

"இந்தத் தொடரில் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தினேன். இதேபோல் அடுத்ததாக நடைபெறவுள்ள உரோம் தொடரிலும் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்த முடியும் என்ற நம்பிக்கை உள்ளது" என நடால் மேலும் தெரிவித்தார். (ம)

# 16 வயது ஆண்கள் காலிறுதி முடிவுகள்

யாழ்ப்பாணம், மே 17

பாடசாலைகளுக்கு இடையிலான மாகாணமட்ட கால்பந்தாட்டத் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரில் 16 வயதுப்பிரிவு ஆண்களுக்கான காலிறுதி ஆட்டங்கள் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானங்களில் நேற்று நடைபெற்றன. இதன் முடிவுகள் வருமாறு.

முதலாவது காலிறுதி ஆட்டத்தில் இமையாணன் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அணியை எதிர்த்து மாதகல் சென். ஜோசவ் மகா வித்தியாலய அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரு அணிகளும் கோலெதனையும் பதிவுசெய்ய இயலவில்லை. சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இமையாணன் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அணி 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

இரண்டாவது காலிறுதியாட்டத்தில் முல்லைத்தீவு மகா வித்தியாலய அணியை எதிர்த்து சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி மோதியது. 2:0 என்ற கோல் கணக்கில் பற்றிக்ஸ் வெற்றிபெற்றது.

மூன்றாவது காலிறுதியில் இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணியை எதிர்த்து கொற்றாவத்தை அமெரிக்கன் மிசன் கல்லூரி அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரு அணிகளும் கோலெதனையும் பதிவுசெய்யாததை அடுத்து சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 8:7 என்ற கோல் கணக்கில் சென். ஹென்றிஸ் வெற்றிபெற்றது.

நான்காவது காலிறுதி ஆட்டத்தில் மன்னார் சென். லூட்சியா அணியை எதிர்த்து காரைநகர் இந்துக் கல்லூரி அணி மோதியது. 8:0 என்ற கோல் கணக்கில் சென். லூட்சியா அணி வெற்றிபெற்றது.

அரையிறுதி ஆட்டங்களும் இறுதியாட்டமும் இன்று நடைபெறவுள்ளன. (ம-23)

# விலகலாட்டம் இன்று

ஐ.பி.எல். தொடரில் இன்று இரவு விலகலாட்டம் நடைபெறவுள்ளது. இதில் கொல்கத்தா மற்றும் ஹைதராபாத் அணிகள் மோதவுள்ளன.

ஐ.பி.எல். பிளே ஓவ் சுற்றில் இரு தகுதியாட்டங்களும் ஓர் விலகலாட்டமும் நடைபெறும் நேற்று முதலாவது தகுதியாட்டம் நடைபெற்றது. இன்று விலகலாட்டம் நடைபெறவுள்ளது. இன்றைய ஆட்டத்தில் தோல்வியடையும் அணி தொடரில் இருந்து வெளியேற்றப்படும். வெற்றிபெறும் அணி இரண்டாவது தகுதி ஆட்டத்தில் விளையாடி அதில் வெற்றிபெற்றால் இறுதிக்குத் தகுதிபெறும். முக்கியமான இன்றைய ஆட்டத்தின் மீது மிகவும் அதிகளவில் எதிர்பார்ப்புக்கள் உள்ளன. (ம)


காரைநகர் இந்து - லூட்சியா அணிகளுக்கு
இடையிலான ஆட்டத்தின் போது...

## கோணேஸ்வரனின் ஜேர்மன் கல்லூரி

ஜேர்மன், சுவிஸ், ஒஸ்ரியா ஆகிய நாடுகளுக்கான A1 டொச் பரீட்சைக்கு ஏற்ற வகையில் திரு.S. கோணேஸ்வரன் அவர்களால் இலகுவான வழியில் கற்பிக்கப்படுகிறது.

தொடர்பு: ஆரியகுளம் சந்தி
(புத்தர் விகாரைக்கு எதிரே 2ஆம் மாடி) யாழ்ப்பாணம்.
077 970 7322

## உங்களுக்கு DS MAX ல் இணைவதற்கு விருப்பமா ? உடனே அழையுங்கள்

வயதெல்லை - 18 - 26
தகைமை - O/L, A/L சித்தியடைந்தவர்கள் அனுபவம் அவசியமில்லை
15000/= பயிற்சியின் போது, 35000/= பயிற்சியின் பின்...

நாங்கள் எதிர்பார்ப்பது:
*எழுதுவினைஞர், *வரவேற்பாளர், *களஞ்சியபாதுகாவலர், *மேற்பார்வையாளர், *உதவிமுகாமையாளர், *கிளை முகாமையாளர்

இன்றே அழையுங்கள்
ஆரம்பம் நாளை

ETF, EPF மற்றும்
மருத்துவகாப்பீடு, வெளிநாட்டு சுற்றுலா
தொடர்பு - 077 700 9820, 076 572 7243

## வேலை வாய்ப்பு

ஞானோதயம் வெளியீட்டகத்திற்கு Page Maker, Corel Draw, Typing தெரிந்த பெண்பிள்ளைகள் தேவை. சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

**காலை 9 - 3 மணி வரை அலுவலகத்தில் நிர்வாக இயக்குனருடன் தொடர்பு கொள்ளவும்.**

**ஞானோதயம், செல்வசாந்தி வெளியீட்டகம்**
**297 A, பிறவுண் வீதி, கலட்டிச்சந்தி, யாழ்ப்பாணம்.**
**077 015 1517**

நிர்வாக இயக்குனர்.

## மரண அறிவித்தல்

## திருமதி புஸ்பராணி இராசையா



நாரந்தனை வடக்கைப் பிறப்பிடமாகவும் இல. 94/1, ஜெயந்திநகர், கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்டதிருமதிபுஸ்பராணி இராசையா கடந்த 15.05.2017 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற மாணிக்கம் செல்லமுத்து தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கந்தையா நன்னிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் இரஜனிமாலா, காலஞ்சென்ற உமாகாந்தன் மற்றும் ஜெயகாந்தன், ஸ்ரீகாந்தன், இராஜகாந்தன், லதாஆகியோரின்அன்புத்தாயும்காலஞ்சென்றயோகேஸ்வரன் மற்றும் இராசேந்திரன், அருணன், பவிதா, நகுலேஸ்வரி, பிரான்ஸ்வாஸ் ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்ற சிவராதபிள்ளை, செல்வராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும்காலஞ்சென்றசுதர்சன், சிந்துஜா, சுஜீபன், சுகிர்தன்மைதிலி, மீனா, ஜெனகன், ஜெனனி, ஜானு, அபிராமி, அபிராஜ், அபர்ணா, அஜந் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சிந்துஜன், சர்மி ஆகியோரின் அன்பு பாட்டியும் பாலச்சந்திரன் வனயா, சிவபாலன், கிரியா ஆகியோரின் அன்பு சின்னம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.05.2017) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆனந்தநகர் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 456 0453,
077 797 0303

தகவல்:
குடும்பத்தினர்.

## விற்பனை பிரதிநிதி தேவை

பிரபல தனியார் நிறுவனத்தின் யாழ். மாவட்ட விநியோக நிலையத்திற்கு விற்பனைப் பிரதிநிதி தேவை.
கல்வித்தகைமை G.C.E. A/L
நேர்முகத்தேர்வு இன்று/நாளை 18.05.2017
காலை 10.00 மணி தொடக்கம் 12 மணிவரை
**லக்ஷ்மி ஏஜென்சி**
**23/11, 4ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி,**
**யாழ்ப்பாணம்.** **021 222 7167**

29836

## Job + Education

No.28, 3ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள Everest நிறுவனத்தில் Spoken English, Marketing Management போன்ற கற்கைநெறிகளுடன் கூடிய வேலைவாய்ப்பு உள்ளது. பயிற்சி முடிவின்போது Everest நிறுவனத்தின் நிரந்தர உத்தியோகத்தராக நியமிக்கப்படுவர்.

**தொடர்புகளுக்கு,**
**077 985 6671, 077 171 7278, 077 939 3965**

## மரண அறிவித்தல்

## திருமதி தயாநிதி சண்முகநாதன்



சரவணை மேற்கைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி தயாநிதி சண்முகநாதன் கடந்த 15.05.2017 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவஞானசம்பந்தன் (ஓய்வுபெற்ற அதிபர்)- அன்னலட்சுமி தம்பதியரின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம் (ஓய்வு பெற்ற அதிபர்)- செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் சண்முகநாதனின் (ESS JEY ELECTRICAL Sales Rep.) அன்பு மனைவியும் கிருத்திகன் (Softlogic Life) கார்த்திகன் (துர்க்கா மிக்ஷர்), அனந்தீசன் (Network Engineer, Tekxeon Interconnect (Pvt) Ltd) ஆகியோரின் பாசமிகு தாயும் காலஞ்சென்ற சிவானந்தன், குகானந்தன் (ஜேர்மனி), கலாநிதி (இத்தாலி), காலஞ்சென்ற கருணாநிதி, அருணாநிதி (கனடா), உஷாநிதி (ஜேர்மனி), சொர்ணநிதி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் மனோரமா (ஜேர்மனி), உதயகுமார் (இத்தாலி), விஜிகரன் (கனடா), யோகலிங்கம் (ஜேர்மனி), சந்திரசேகரம், சதாசிவம், நீலாம்பிகை, லலிதாம்பிகை ஆகியோரின் அன்பு மைத்துனியும் சோதிப்பிரியா, வலென்டினோ, மகிஷா, கோபிஷன், நிருஷான், அபிதா ஆகியோரின் அன்புப் பெரியம்மாவும் வைஷ்ணவி, விஷ்ணவி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.05.2017) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 808 4770,
077 857 5155

தகவல்:
கணவர்,
பிள்ளைகள்.



# இறுதியில் புனே

ஐ.பி.எல். தொடரில் நேற்று இரவு நடைபெற்ற முதலாவது தகுதியாட்டத்தில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்கு நேரடியாகத் தகுதி பெற்றது புனே.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற மும்பை களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய புனே 4 இலக்குகள் இழப்புக்கு 162 ஓட்டங்களைக் குவித்தது. அந்த அணி 9 ஓட்டங்களுக்கு இரு இலக்குகளை இழந்து தடுமாறிய போதிலும் டோனி, திவாரியின் கடைசிக் கட்ட அதிரடியில் இந்த இலக்கை எட்டியது.

பதிலுக்குக் களமிறங்கிய மும்பைக்கு பார்திவ் பட்டேலைத் தவிர வேறெவரும் சிறப்பாகச் செயற்படவில்லை. 75 ஓட்டங்களுக்கு 5 முக்கிய வீரர்களை இழந்தது மும்பை. படிப்படியாக புனேயின் வெற்றி உறுதியானது. முடிவில் 20 ஓட்டங்களால் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதிபெற்றது புனே. (ம)

## வாடகைக்கு

திருநெல்வேலிக்கு அருகில் அமைக்கப்படவுள்ள வர்த்தக கட்டடத்தொகுதியில் கடைகளினை பெற விரும்புபவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.
(உணவகம் தவிர்ந்தது)
தொடர்பு - S. சிறி 077 6597 084

## வேலையாள் தேவை

பிரபல வர்த்தக நிறுவனத்திற்கு மணிக்கூடு திருத்தும் வேலை தெரிந்தவர்கள் தேவை.
தொடர்புக்கு
0778759532




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.05.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## பெண் வேலையாள் தேவை

யாழ். கச்சேரி பகுதியில் இயங்கும் எமது ஸ்தாபனத்திற்கு பொதி செய்வதற்கு பெண் வேலையாள் தேவை. வயது 18 முதல் 25 வரை. நாள் ஒன்றுக்கு 400 முதல் 500 வரை வழங்கப்படும்.

**Tel - 077 311 2250**

## ஆறாத துயரின் ஓராண்டு நினைவில் ஓராண்டு நினைவேந்தல் நிகழ்வு அழைப்பு





அமரர்
**செல்லையா செல்வரத்தினம்**
(மண்கும்பான்)

அமரர் திருமதி
**குபேரினி சசிக்குமார்**
(பிரான்ஸ்)

எமது குடும்பமென்கின்ற பூந்தோட்டத்தில் இருந்து உதிர்ந்த இரு மலர்களின் நினைவேந்தல் ஓராண்டு நிகழ்வு இன்று (17.05.2017) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பித்துக் கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இல.47, சபாபதி வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

## சோமசுந்தரஐயர் சுப்பிரமணியக்குருக்கள்



சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும், அராலியை வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரஐயர் சுப்பிரமணியக்குருக்கள் (16.05.2017) செவ்வாய்க்கிழமை சிவபத மடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோம சுந்தரஐயர் - சரஸ்வதிஅம்மா தம்பதியரின் புத்திரனும் திரிபுரசுந்தரி அம்மாவின் கணவரும் மாவை யாதீனம் சு.து. ஷண்முகநாதக்குருக்கள் - நகுலேஸ்வரி அம்மா தம்பதியரின் மூத்த மருமகனும் லலிதாம்பிகை, விசாலாட்சி, பாலசரஸ்வதி, யுகவர்மசர்மா ஆகியோரின் அருமைத்தந்தையும் ஸ்ரீராம்சர்மா (இந்தியா), சிவசங்கரக்குருக்கள் (கனடா) சுதர்சனக் குருக்கள் (சுதுமலை)ஆகியோரின் அருமை மாமனாரும் காலஞ்சென்ற ஏகாம்பரநாதசர்மா மற்றும் கமலேஸ்வரி, கௌரிபாலா, பாலகிருஷ்ணக் குருக்கள் (குஞ்சன்ஐயா), புவனேஸ்வரி (பிரான்ஸ்), இலட்சுமிநாராயணக்குருக்கள் ஆகியோரின் அருமைச் சகோதரனும் பாலஷண் முகக்குருக்கள் (சீரணி), மனோகரக்குருக்கள் (வல்வை வைத்தீஸ்வரன் கோவில்), சபேசசர்மா (பிரான்ஸ்), சிவாஜினி, தாட்ஷாயணி ஆகியோரின் மைத்துனரும் ராமகிருஸ்ணா, ஹேமாத்ரீ, கிருத்திக்கா, கிருத்திக், ஷாகித்யன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.05.2017) புதன்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அராலி பூணாவட மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சரஸ்வதி மகாவித்தியாலயம்,**
**அராலி தெற்கு, அராலி.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது நிறுவனத்தின் ஆரம்ப கர்த்தாக்களில் ஒருவரான
**திரு. முத்துத்தம்பி சிவசுப்பிரமணியம்**
அவர்களின் புதல்வன்
**திரு. சிவசுப்பிரமணியம் செந்தில்குமரன்**
அவர்கள் கொக்குவில் இந்துக் கல்லூரியில் ஆசிரியராக, பகுதித் தலைவராக இருந்து கொக்குவில் இந்துவின் சமூகத்தின் நன்மதிப்பைப் பெற்றவர். இன்று இவர் பிரதி அதிபராக நியமிக்கப் பட்டுள்ளார் என்பதனை எமது நிறுவனம் பாராட்டி வாழ்த்துவதோடு இன்னும் பதவி உயர்வு பெற எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

Best Wishes

**நிர்வாகத்தினர்**
**கொக்குவில் மேற்கு சனசமூக நிலையம்**
**சுப்பிரமணியம் மாலதி ஆரம்ப சுகாதார பராமரிப்பு,**
**முன்பள்ளி நிலையம்**

(AJA/CS/4012/2010)


## CANADA , USA
## study & work visa

**Minimum Qualification O/L**

- VISA Consulting and Online from filling.
- குறைந்த செலவில், விரைவில் பயணம்.
- Bank Balance 100%
- குறைந்த தகைமை O/L

**Swiss, France**
**செல்ல வழிகாட்டல்**

**Royal Visa Consultants & Education Service**

No.128, Jampettah Street,
Colombo -13
Email: rvces_consultants@yahoo.com

Haarini : 0777 493 436
Sharmi : 0777 525 797
Office : 0113 020 892


## மரண அறிவித்தல்

## திருமதி பாக்கியம் அரியகுட்டி



தோற்றம் 13.11.1933
மறைவு 16.05.2017

பிச்சம்தோட்டம் அல்வாயைப் பிறப்பிட மாகவும், பாக்கியபவனம், மனோகரா அல்வாயை வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி பாக்கியம் அரியகுட்டி (16.05.2017) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - நாகமுத்து தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான பழனி - சின்னாச்சி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற அரிய குட்டியின் அன்புமனைவியும் சந்திராவதி, சந்திரதாசன் (வாகன மின்னிணைப்பாளர் V.K.S. நெல்லியடி), சத்தியதாசன் (பிரதேச சபை, கரவெட்டி), சத்தியகலா, சௌந்தரதாசன், சபேசன் (வாகன மின்னிணைப்பாளர், நிமலன்ஸ் கண்டி வீதி, கிளிநொச்சி) ஆகியோரின் அன்புத் தாயும் சிவராசா (உரிமையாளர் நிமலன்ஸ் எலக்ரிக்கல், கண்டி வீதி, கிளிநொச்சி) யோகராணி, ஜனகராணி (குடும்ப நல உத்தியோகத்தர் ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை) சிறிதரன் (மாநகரசபை யாழ்ப்பாணம்), நளாயினி, மைதிலி, நவரத்தினம் ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்றவர்களான செல்லையா, இராசம்மா இராசையா மற்றும் இரத்தினம், தங்கவேல், பாலகிருஷ்ணன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான கனகம்மா, பொன்னம்மா, தில்லையம்மா, செல்லக்குட்டி, தங்கவேல், தவமணிதேவி, சிவமலர், நகுலேஸ்வரன் மற்றும் செல்வமலர், கலாநிதி ஆகியோரின் அன்பு மைத்துனியும் நிமலன் (ஆசிரியர், மு/ மாங்குளம் மகா வித்தியாலயம்), நிறைஞ்சன், நிரோயன் (ஆசிரியர், யா/ நயினாதீவு மகாவித்தியாலயம்), நிகாசன் (நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் நீதிவான் நீதிமன்றம், பருத்தித்துறை), நிதர்சன் (பிரதம பொறியிலாளர் ஆஞ்சநேயா கொன்ஸ்ரக்சன்), சோபிகா (தொழில் நுட்ப உத்தியோகத்தர், ஹரி இஞ்சினியரிங்), கென்சிகா (மாணவி, கிழக்குப் பல்கலைக்கழகம்), நிதுர்சன், நிதுஷா, வேணுகிதன், கஜரூபன், வர்ணப்பிரியன், கம்சனா, அனேகதா, சந்தீபன், சர்மிகா, நிலவன், நிசாலன், கௌசியா, தனுஜா, கார்த்திகா, விஸ்வேதிகா, றொசனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் றனீத், லோஷித், சங்கீர்த் ஆகியோரின் அன்புப்பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.05.2017) புதன்கிழமை மு.ப.10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அல்வாய் பங்கு வேம்படி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பாக்கியபவனம், அல்வாய்,**
**077 721 9730**

தகவல்:
**குடும்பத்தினர்.**

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

**வேலையாள் தேவை**

இரும்புக்கடைக்கு வேலைஆள்கள் தேவை. ஆண்கள்

தொடர்பு - 077 994 6188
077 994 8557

## திவச அழைப்பும் நினைவஞ்சலியும்

ஒன்பதாம் ஆண்டு



மலர்வு 27.07.1943
உதிர்வு 01.02.2009

**அமரர் மகேஸ்வரி கனகசபாபதி**

முதலாம் ஆண்டு



மலர்வு 25.10.1934
உதிர்வு 27.05.2016

**அமரர் சின்னத்துரை கனகசபாபதி**

அமரர் சின்னத்துரை கனகசபாபதி (சின்னராசா) அவர்களின் முதலாம் ஆண்டுத்திவச நிகழ்வு இன்று (17.05.2017) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


கலட்டி ஒழுங்கை,
(அரசடி லேன்)
கோண்டாவில் மேற்கு.

(சீ.கஸ். 4007)(13)

**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### திருமதி திலகவதி கனகரத்தினம்



நீமாட்டி, கோப்பாய் மத்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட்மாகவும் கொண்ட திருமதி திலகவதி கனகரத்தினம் கடந்த 14.05.2017 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலுமுத்தாச்சி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான தம்பையா நாகம்மா தம்பதியரின் அன்புமருமகளும் காலஞ்சென்றகனகரத்தினத்தின் அன்புமனைவியும் விஜயகுமார் (ஜேர்மனி), லலிதா (கனடா),உதயகுமார் (ஜேர்மனி), விஜயலலிதா (யா/அத்தியார் இந்துக்கல்லூரி, நீர்வேலி), வைகுந்தகுமார் (நெதர்லாந்து) ஆகியோரின் பாசமிகு தாயும் நிர்மலாதேவி, சந்திரசேகரம், தவமலர், குகன், நளினா ஆகியோரின் அன்பு மாமியாரும் மிதுனன், விஜிதன், தர்மிலா, பொபீனா, மெனதன், சுவேதா, நிவேதா, ஜானுஷா, மிதுர்சன், வைநிசன், வினோஜிகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.05.2017) வியாழக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**நீமாட்டி,**
**கோப்பாய் மத்தி, கோப்பாய்.**

**த்கவல்: குடும்பத்தினர்.**
**077 461 4326**

## மரண அறிவித்தல்

### திருமதி மங்களேஸ்வரியம்மா சுவாமிநாதன்



ஆவரங்கால் மேற்கு புத்தூரை பிறப்பிடமாகவும், உடையார்கட்டு வடக்கு, புதுக்குடியிருப்பை இடைக் கால வதிவிடமாகவும் கொண்ட திருமதி மங்களேஸ் வரியம்மா சுவாமிநாதன் (16.05.2017) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு - சிவபாக்கியம் தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற முருகேசு சுவாமிநாதனின் அன்பு மனைவியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.05.2017) வியாழக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக ஆவரங்கால் கரதடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஆவரங்கால் மேற்கு,**
**புத்தூர்.**

தகவல்
**குடும்பத்தினர். 077 154 7116**

# மரண அறிவித்தல்



## சின்னத்தம்பி குமாரசாமி

### (கணேஸ் அண்ணா)

யாழ்-நல்லூரினைப் பிறப்பிடமாகவும், சின்னாலடி, அல்வாய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி குமாரசாமி (கணேஸ்) 16.05.2017 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - நல்லம்மா தம்பதியரின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான மாசிலாமணி-அன்னப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகனும், நவமணியின் அன்புக் கணவரும், சுகந்தினி (சுவிஸ்), சுகந்தன் (வவுனியா) சுதர்சன் (திருமலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற இரட்ணசபாபதி ( P.C ) கமலாம்பிகை, காலஞ்சென்ற அன்னபூரணம், சண்முகநாதன் (வவுனியா), பரமேஸ்வரி (கல்வியங்காடு) தர்மலிங்கம் (கிளிநொச்சி) தனேஸ்வரி (உருத்திரபுரம்) லோக நாயகி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு உடன்பிறப்பும், ஆனந்த நாதன் (சுவிஸ்) சுபாசினி (வவுனியா) அனு (திருமலை) லக்சிகா, லக்சிகன், சங்கீதன், பிரியங்கா (லண்டன்) சயன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனும், ஞானமணி (பிரான்ஸ்) ரவீந்திரராசா (பாலன்) காலஞ்சென்ற இன்பமணி, குவேந்திரராசா (குவே), குணேந்திரராசா (லண்டன், குட்டிமாமா) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், பாலசுப்பிரமணியம், நடராசா, பூங்கோதை, வசந்தகுமாரி (லண்டன்) ஆகியோரின் உடன்பிறவா சகோதரனும், நிவேதிகா, வாகினி ஆகியோரின் பெரிய தகப்பனும், அஜந்தா (சுவிஸ்) சுஜந்தா (சுவிஸ்) கம்சிகன், பிரதுர்ஷா, கிருத்திகா, முகிஷன், முகேசுதன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.05.2017) புதன்கிழமை பி.ப ஒரு மணியளவில் சின்னாலடி, அல்வாயில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பங்குவேம்படி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**மனைவி, பிள்ளைகள்,**
**குடும்பத்தினர்.**

**T.P: 077 644 6464 / 0041 76 34 12632**

(ANE/CS/00170)(10)